ஒரு தத்துவ ஞானி தம் காலத்தவரும் தமக்கு லட்சிய புருஷருமான மற்றொரு தத்துவ ஞானியைப் பற்றி அவருடைய சொற்களாலேயே சித்திரிக்கும் நூல்.

ரூ.
0-90

# பிளேட்டோவின்
# சாக்ரடீஸ்



தமிழாக்கம் :
ச. கு. கணபதி ஐயர்

RWC 57
N59
2355

கிராமஜோதி நூலகம்
சென்னை-28

# பிளேட்டோவின் சாக்ரடீஸ்

## (குற்றமறுப்பு—கிரிட்டோ)

தமிழாக்கம் :

ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.

கிராமஜோதி நூலகம்
சென்னை–28

உரிமை பதிவு] [விலை ந.பை. 90

First Edn. (Tamil) 5000 Copies
March—1959

# PLATO'S DIALOGUES

## Apology & Crito

*Translated by*

**S. G. GANAPATHY IYER, M.A.**

Published under the auspices of
The Southern Languages Book Trust

**Price 90 nP.**

*Publishers:*

**GRAMAJOTHI NOOLAGAM**

**MADRAS-28**

Gnanodaya Press, 11, Anderson Street, Madras-1

# அணிந்துரை

டாக்டர் ஏ. எல். முதலியார், துணைவேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு, தன்னுடைய முன் அனுபவங்களாலும், பொதுமக்களைக் கவர்வனவாயும் அதனோடு அவர்களுக்கு நற்பயன் அளிப்பனவாயும் உள்ள நூல்களை வெளியிட்டதால் பெற்ற அறிவின் திறத்தாலும், இரண்டாம் வரிசை நூல்களை வெளியிடத் தலைப்பட்டுள்ளது. அவற்றைத் திராவிட மொழிகள் அனைத்திலும் ஆக்கி அளிக்கவும் அது கருதுகின்றது. இந்த நூல்களெல்லாம் மிக்க கவனத்தோடும், படிப்பவர்களின் பலதிறப்பட்ட சுவைகளுக்கு ஏற்பவும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கையின் பலவகைக் கூறுபாடுகளையும் பற்றிய பலபல பொருள்கள் அடங்கிய நூல்களை வெளியிட இந்தப் புத்தக டிரஸ்டு இயற்கையாகவே ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருந்தலைவர்களுள் சிலருடைய வாழ்க்கை வரலாறுகளையும் அவர்கள் சாதித்தவைகளையும் விரித்துரைப்பதற்கென ஒரு பகுதியும் இதில் தனியாக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நலன்களில் அக்கறை கொண்டு, மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவும், நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் வலுப்படுத்தவும் அரும்பணி ஆற்றிய இப்பெருந்தலைவர்களுக்குத் தாங்கள் எவ்வளவு கடமைப்பட்டவர்கள் என்பதை வருங்கால மக்கள் அறிந்துகொள்வது நல்லது.

தத்துவம், சமயம், விஞ்ஞானம், பேரிலக்கியங்கள், பொருளாதாரம் என்பனவும் இவ்வரிசையில் இடம்பெற்றுள்ளன. சிறு கதைகளுக்கும் பண்டைய கலைகளைப் பொது மக்களிடையே பரப்புவதற்கும் இதில் இடம் வகுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வது நலமாகும். நடனாட

929
108

கக் கலைகள், சிற்ப சாஸ்திரங்கள், தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள், என்றென்றும் வியத்தகு பொருள்களாய் விளங்கும் தென்னிந்தியப் பெருங் கோயில்களின் வரலாற்றுக் குறிப்புகள் ஆகியவையும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்போது வெளியிடப்பெறும் இந்த நூல் வரிசை படிப்பவர்க்குச் சுவையூட்டும் பல்வேறு வகைப்பட்ட பொருள்களை வழங்கும் என்பது என் துணிபு. பொதுமுறைக் கல்விக்குரிய பொருள்களைக்கொண்ட இத்தகைய வெளியீடுகள் மேன்மேலும் பெருகும் பெருந்தொகையினராகிய வாசகர்களைக் கவர்ந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இந்த நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்தியமொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழி பெயர்க்கும் அம்சம், பாராட்டுத் தகுதியுடையதாகும். இவ்வரிசை முற்றுப் பெற்றதும், எழுதப்படிக்கமட்டும் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்துவரும் தொகையினருடன் இணைத்து, இவ்வாற்றால் அவர்கள் தாங்களாகவே மிக்கதிறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது என் துணிவு. தென்னிந்திய மொழிகளின் புத்தக டிரஸ்டு எந்த உயரிய நோக்கங்களோடு தொடங்கப்பெற்றதோ அந்நோக்கங்கள் அஃது ஆற்றி வரும் அரும்பணியால் மேன்மேலும் நிறைவேறிவரும் என்று நான் நம்புகிறேன்.

சென்னை
7—10—58.

ஏ. எல். முதலியார்,
துணைவேந்தர்.

# பிளேட்டோவின் சாக்ரடீஸ்

—o—

## தோற்றுவாய்

ஏதென்ஸ் கி.மு. ஐந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் திருவல்லிக்கேணியைவிடப் பெரியதாகவோ அதிக முக்கியம் வாய்ந்ததாகவோ இருக்கவில்லை. ஆனல் அந்நகர மக்களின் ஆர்வம், ஒலிம்பஸ் மலைப்பக்கத்தில் வீசும் காற்றைப் போல் கட்டுக்கடங்காததாக விரிவடைந்திருந்தது. அதே நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஏதென்ஸ் வாசிகள் மாரதான, சலாமியா என்னும் இடங்களில் பாரசீகப் படைகளை எதிர்த்து வென்ருர்கள். பெரிய பாரசீக சாம்ராஜ்யத்தின் வலிமையை முறியடித்து, எதீனியர்களின் வீரத்தையும் அஞ்சாமையையும் வெளிப்படுத்திய இந்த இரண்டு போர்களும் நகரமாக இருந்த ஏதென்ஸ் ஒரு ராஜ்யமானதற்கும், கிரேக்கப் பேரரசின் நடு நாயகமாக உயர்ந்ததற்கும் காரணமாயின; எனினும் பொருமையும் ஆட்சிக் குறைபாடுகளும் ஏதென்ஸை வீழ்த்தின. அந்த நூற்றுண்டின் இறுதிக்குள் அதன் சாம்ராஜ்யமும் அரசியல் செல்வாக்கும் வெல்லுதற்கரிய கப்பற்படையும் குலைந்துபோயின. சாக்ரடீஸும் அதே நூற்றுண்டின் இறுதியில் கொல்லப்பட்டார்.

ஏதென்ஸின் பெருமை உச்சநிலையில் இருந்தகாலத்தின் இடையில் சாக்ரடீஸ் வாழ்ந்து வந்தார். தம் நாட்டுக்காகப் போர் செய்த சிறந்த யுத்தவீரர் இவர். ஆயினும், தம் நாளில் தமக்கு ஒப்பு உயர்வற்ற தத்துவ ஞானியாகவே இவர் இன்று மதிக்கப் பெறுகிருர். மேற்கு நாடுகளின் நாகரிகத்துக்கு அடிப்படையாக இருந்து வருவது இவருடைய தத்துவ ஞானந்தான்.

சாக்ரடீஸ் ஒன்றையும் எழுதிவைத்தவர் அல்லர். இவருடைய போதனைகள் சம்பாஷணைகளின் வாயிலாகவே அமைந்தன. சந்தை,

தெரு, விளையாட்டுமைதானம் இவற்றுள் மக்கள் நடமாட்டம் மிகுந்த இடம் எதுவாயினும் அங்கே எவரேனும் ஒருவர் யதேச்சையாகச் சொல்லும் விஷயம் ஒன்று இவருடைய சம்பாஷணைக்குத் தொடக்க மாகும். மனச்சாட்சி, நியாயம், நன்னெறி, ஆத்மாவின் அழிவின்மை, தெய்வக் கொள்கை, இவையாவற்றிலும் முதன்மையாக இலட்சிய அரசியல் முதலியன அந்த உரையாடலின் விஷயங்களாகும்.

உரையாடலில் இவர் பின்பற்றிய முறை பல சமயங்களில் ஆத்திரத்தை மூட்டியது. இவருடைய சொற்கள் குத்தலாக இருந்தன. அல்லாமலும் ஏதென்ஸின் வீழ்ச்சிக்கு முக்கியமான பொறுப்பாளிகள் என்று கருதப்பட்டு வந்த ஆல்ச்சிபியாடிஸ், கிரிட்டியஸ் என்னும் இருவருடன் இவர் கொண்டிருந்த தொடர்பு இவருக்கு மிகுதியான எதிர்ப்பையும் பகைமையையும் தோற்றுவித்தன. இவர் ஒளிவு மறைவின்றித் தாம் கண்ட குற்றம் குறைகளை வெளிப்படையாக எடுத்துரைத்து வந்தார், இக்காரணங்களால் குடியரசு வாதிகள் இவர்மீது வழக்குத் தொடுக்க உறுதி கொண்டார்கள். தெய்வங்களிடம் நம்பிக்கை இல்லாமை, இளைஞரைத் தவறான வழியிலே செலுத்துதல் ஆகிய குற்றங்கள் இவர்மீது சுமத்தப்பட்டன. இவர் குற்றவாளி என்றும் மரணதண்டனையே அந்தக் குற்றங்களுக்கு ஏற்றது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஒரு குறைந்த தண்டனையை விரும்பி ஏற்றுக் கொள்ளும்படி சாக்ரடீஸ் கேட்டுக்கொள்ளப்பட்டார். நியாயம் வழங்குவோர் இப்படிக் கேட்பது அந்நாள் வழக்கமாகும். சாக்ரடீஸ் அதனைக் கருதாமல் 'இவர் குடியரசின் நன்மையாளர்' என்ற எண்ணத்துடன் தம்மை அரசாங்கச்செலவில் ஆதரிக்க வேண்டும் என்று கூறினர். முடிவாக மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தீர்ப்பு முடிந்த இருபத்து நான்குமணி நேரத்திற்குள் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதே வழக்கம். ஆனல் அந்தச்சமயம் (கி. மு. 399-இல்) டெலாஸ்* என்ற கிரேக்க தலத்தில் ஒரு திரு

---

* ஏதென்ஸிலிருந்து டெலாஸுக்கு ஆண்டுதோறும் யாத்ரிகர் கப்பல் ஒன்று செல்லும். டெலாஸில் நடக்கும் பெரிய விழாவுக்கென்றே இதை அனுப்புவார்கள். அது போய்த் திரும்பும்வரை ஏதென்ஸின் தூய்மையைக் கெடுக்கக்கூடாதென்று யாரையும் தூக்கிலிடுவதோ, சிரச்சேதம் செய்வதோ, கழுவேற்றுவதோ இல்லை.

விழா நடைபெற்று வந்ததால் அது வரையில் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் சாக்ரடீஸ் ஒரு மாதம் சிறையில் காலம் தள்ள நேர்ந்தது. டெலாஸில் திருவிழா முடிந்து கப்பல் ஏதென்ஸுக்குத் திரும்பிவந்த சமயம் சாக்ரடீஸ் தம் அன்பர்களுடன் ஆத்மாவின் அழிவின்மையைக் குறித்துச் சர்ச்சை நடத்திவந்தார். "ஃபீடோ" என்ற தலைப்பில் பிளேட்டோ இதைப்பற்றிய உரையாடலை எழுதியுள்ளார். உரையாடலின் முடிவில் விஷங்கலந்தபானம் சாக்ரடீஸுக்குக் கொண்டுவரப்பட்டது. மகிழ்ச்சியுடன் சாக்ரடீஸ் அதனை வாங்கிப் பருகினார். பிளேட்டோ தம் எழுத்தில், "இந்தக் காலத்தில் நான் அறிந்த எவரினும் அறிவிலும் நேர்மையிலும் மிகச் சிறந்தவர்" என்று பாராட்டிய சாக்ரடீஸின் உயிர் பிறகு நீங்கியது.

பிளேட்டோ கி. மு. 428-இல் பிறந்தவர். அவருக்குச் சாக்ரடீஸ் மரணமடைந்தபோது வயது முப்பது. அவரும் ஒரு தத்துவஞானி. தத்துவ ஞானம், விஞ்ஞான ஆராய்ச்சி இவைகளை ஆராயும் புகழ் பெற்ற கழகத்தைத் தோற்றுவித்தவர். பல சம்பாஷணைகளை எழுதிய ஆசிரியர். அந்த உரையாடல்களில் அவர் சாக்ரடீஸ் விளக்கியிருப்பதாகக் கூறும் தத்துவஞானம், பிளேட்டோவின் தத்துவஞானமாக இராது என்று உறுதியாகக் கொள்வதற்கில்லை.

பிளேட்டோ எழுதிய குற்ற மறுப்பு என்னும் முதல் உரையாடல், தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சரியல்லவென்று சாக்ரடீஸ் மறுப்பதாக அமைந்துள்ளது. சாக்ரடீஸ் ஒரு சோபிஸ்டோ[1] விஞ்ஞானியோ அல்லர். ஆயினும் தமக்கு எல்லாம் தெரிந்திருந்தும் ஒன்றும் தெரியாது என்று நினைக்கும் விவேகத்தில் மற்றவர்களைவிட மேலானவர். இவரால் கேள்வி கேட்கப்பட்ட

1. சோபிஸ்ட் என்ற சொல்லுக்கு ஞானத்தில் தீவிரப் பற்றுள்ளவர்கள் என்பது பொருள். ஆனால் இச்சொல் இதற்கு மாறான பொருளையே தரும். ஏனெனில், சோபிஸ்டுகள் ஞானத்தின் சாரத்தை முக்கியமாகக் கருதுவதைவிடச் சொற்பிரயோகத்தின் தன்மையையே பெரிதாக வலியுறுத்தி வந்தார்கள். இதனால் இவர்களுக்கு மக்களிடையே மதிப்புக் குறையலாயிற்று. இவர்களைப் போலி வேதாந்திகள் என்று கூறலாம்.

மற்றவர்களோ, ஒன்றும் அறியாதவர்களாக இருப்பினும் தமக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணி ஒழுகி வந்தார்கள். "நல்லொழுக்கத்தைப் பிரசாரம் செய்யும்படி கடவுள் சாக்ரடீஸைப் பணித்திருக்கிறார்; குடியரசின் தண்டனை ஏதுவாயினும் அதனைப் பொருட்படுத்தாது, கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்த உறுதிகொண்டிருக்கிறான் இவன்; அரசாங்கம் இவனைக் கொல்வதால் பாதிக்கப்படுவது குடியரசே ஒழிய, சாக்ரடீஸ் அல்லன்; என்றாலும் மரணமென்பது தானாகத் தேடிக் கொள்வதாகாது. பொட்டீடியோ, ஆம்ப்பிப் போலீஸ், டெலினம் என்ற போர்களில் மரணத்துக்கு அஞ்சாமல் போராடியவன் இவன். நல்ல வழியைப் பின்பற்றுகிறவர் மரணத்துக்கு அஞ்ச வேண்டுவதில்லை. மரணம் இன்னது என்பதில் எவருக்கும் நிச்சய அறிவில்லை. அது கனவற்ற தூக்கமாகவோ, மறு உலகுக்கு யாத்திரையாகவோ இருக்கலாம். மறு உலக யாத்திரையாயின் சாக்ரடீஸ் கிரேக்க கவியாகிய ஹோமர், ஹோஸியட், பேர்பெற்ற பழம்வீரர்கள் ஆகியவர்களை அங்கே சந்திக்கமுடியும். அந்தப் பிரயாணத்தின் காலம் நெருங்கிவிட்டது. நம்வழிகளில் நாம் செல்லுவோம்; (என்றால்) நான் இறப்பது, நீங்கள் வாழ்வது இவற்றில் எது சிறந்தது? கடவுள் ஒருவரே இதனை அறிவார்"— குற்ற மறுப்பில் இப்படி முடிக்கிறார் சாக்ரடீஸ்.

**கிரைட்டோ என்ற சம்பாஷணை:** இதில் கிரைட்டோ சிறையிலிருந்த சாக்ரடீஸைச் சந்திக்கிறார். தப்பிச் செல்ல, அவர் சாக்ரடீஸை வற்புறுத்துகிறார். "பணமும் நண்பர்களும் இல்லையே என்ற கவலை இவனுக்கு இல்லை; இவனை எதிர்கொண்டு உவந்து ஏற்றுக்கொள்ளும் இடங்கள் பல இருக்கின்றன; ஆயினும் தீமையைத் தீமையால் எதிர்ப்பது நியாயமாகுமா? ஒருவன் தன் தேசத்தின் சட்டங்களுக்கு விரோதமாக நடப்பது எப்பொழுதேனும் சரியாகுமா? ஆயுள் முழுவதும் தேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த ஒருவன், அவைகளிடம் நன்றியறிவு வாய்ந்தவனாக இருக்க வேண்டும். அந்தச் சட்டங்கள்மீது அவனுக்கு எப்பொழுதேனும் வெறுப்பு ஏற்பட்டிருக்குமாயின் அவைகளினின்றும் அவன் தப்பி ஓடுவது தவறாகாது. தெய்வத்தின் இனிய குரல் இவன் காதுகளில்,

பக்தனுடைய காதுகளில் படும் குழலோசை போல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. கிரைட்டோவின் வற்புறுத்தல்களைக் கேட்க முடியாதபடி இந்த ஒலி தடுக்கிறது. ஆகையால் கிரைட்டோ, கடவுளின் சிந்தனை நிறைவேறும்படி, அவருடைய கட்டளைப்படி நான் நடக்க விட்டுவிடு'' இவ்வாறு முடிக்கிறார் சாக்ரடீஸ்.

சென்னை,
19—5—1958.

D. L. மர்ஃபி.

# இந்த உரையாடல்

கி.மு. 399-ஆம் ஆண்டில், ஏதென்ஸ் மக்களும் நீதிபதிகளும் கூடியிருந்த அவையில், எழுபது வயதான சாக்ரடீஸை, 'இவர் தெய்வத்தை மதியாதவர்; இளைஞர்களைத் தவறான நெறியில் செலுத்தி வருகிறார்' என்று குற்றம் சுமத்தி விசாரணை செய்தார்கள். இவர் குற்றவாளி என்று முடிவு செய்து இவருக்கு மரணதண்டனை விதித்தார்கள். விசாரணையின் போது பிளேட்டோ அங்கு இருந்தார்; சாக்ரடீஸ் தம் சார்பாக மொழிந்த மூன்று சொற்பொழிவுகளைச் சில ஆண்டுகளுக்குப் பின் பிளேட்டோ எழுதினார். இதற்கு 'அப்பாலஜி' அல்லது 'தற்காப்பாகப்புரிந்த வாதம்' என்று பெயர். விசாரணையின் போது சாக்ரடீஸ் பேசியதை அப்படியே பிளேட்டோ குறித்து வைத்திருந்ததாகக் கொள்ளமுடியாவிட்டாலும், சாக்ரடீஸ் பொதுவாக எப்படி வாதம் புரிந்தார் என்பதை அது விளக்குகிறது. ஆகவே இது பிளேட்டோவின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரையாகும்.

சாக்ரடீஸின் மீது குற்றஞ் சுமத்தி வழக்குத் தொடுத்தவர்கள் அனிடஸ், மெலிட்டஸ், லைகோன் என்பவர்கள். மீட்கப்பட்ட ஜனநாயக அரசாங்கத்தில் அனிடஸ் ஓர் அரசியல்வாதி; மெலிட்டஸ் ஒரு கவிஞர்; லைகோன் என்பவர் பெரிய பேச்சாளர். 'சாக்ரடீஸ் மீது இப்படிக் குற்றஞ் சுமத்தியது, இவர்களுக்கெல்லாம் பொதுவாக சாக்ரடீஸ்மீதிருந்த பகைமையே காரணம். அதை மறைக்கவே இப்படிக் குற்றஞ் சுமத்தினர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. சாக்ரடீஸ் அன்றைய நிலையோடு பொருந்தாமல் தம்வழியே சென்றார். பெரும்பாலோருடைய அபிப்பிராயத்தைவிட முதிர்ந்த அறிஞர்களின் கருத்தே சிறந்தது என்று கருதினர். ஆகவே, அந்நாளில் இவரை, 'புதிதாக நிறுவப்பெற்ற அரசாங்கத்துக்கே ஆபத்து விளைப்பவர்' என்று கருதியிருக்கவேண்டும்.

தம் பிரசங்கங்களில் சாக்ரடீஸ் குற்றச் சாட்டுகளை மறுப்பதில் அவ்வளவு ஆர்வம்காட்டாமல் அவர்கள் தம்மேல் பகைமை கொண்டுள்ளதையே விளக்கிக் காட்டுகிறார். ஆனல் அவர் பேச்சுமூலம்,

அக்குற்றச்சாட்டுகள் ஒன்றுக்கொன்று பொருந்தாதவை. மொத்தமாகச் சுமத்தப் பெற்றவை என்பதை பிரசங்கம் மூலம் மிக எளிதில் தெளிவுபடுத்திவிடுகிறுர். 'என்னையும் பிறரையும் ஆராயும் தத்துவத்தைப் பரப்புவதே என் கடமையாகும்; என்று தம் சார்பாக வழக்காடி விளக்கினுர். இவர் அரசாங்கத்துக்குப் பெருந்தொல்லையாக இருந்தார். குடிமக்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கி அவர்களுடைய அறியாமையை எடுத்துக் காட்டினுர். உண்மையில் இவருடைய பகைவர்கள் இப்படி வழக்குத் தொடுத்திருப்பவர்கள் அல்லர்; நேர்மையும் ஒழுக்கமும் கொண்ட வாழ்வு முறையை எதிர்ப்பவர்களும், 'ஆய்ந்தறியாது வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா!' என்று அவர் கொண்ட உறுதியைக் கண்டு அஞ்சுபவருமே இவருடைய பகைவர் என்பது இவருக்குத் தெரியும்.

நீதிபதிகள் சாக்ரடீஸ் குற்றவாளி என்று தீர்ப்புக்கூறி, சாக்ரடீஸுக்கு என்ன தண்டனை விதிக்கவேண்டுமென்பதைச் சாக்ரடீஸையே தீர்மானிக்கும்படி அனுமதிக்கிறுர்கள். சாக்ரடீஸ் தமது கொள்கையை விட்டுக்கொடுக்க மறுக்கிறுர்; நாட்டுக்கு நன்மை செய்வதற்காகத் தமக்குப் பரிசு வழங்க வேண்டுமென்று கூறுகிறுர். ஆயினும் அபராதத் தொகை விதிக்கலாம் என்றும் தமக்குப் பல நண்பர்கள் இருக்கிறுர்கள் என்றும் பிளேட்டோ அபராதத் தொகைக்கு உத்தரவாதம் அளிப்பார் என்றும் சொல்லுகிறுர்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட பிறகு இவர் செய்த கடைசிச் சொற்பொழிவில் நீதிமன்றம் வேறு விதமாகத் தீர்ப்பளிப்பதற்கில்லை என்றும், தாம்புரியாத ஒரு குற்றத்துக்காக மன்னிப்புக் கேட்க தயாராக இல்லை என்றும் கூறுகிறுர். அறத்தை அடிப்படையாகக் கொண்ட தம் கடமையை முற்றும் கடைப்பிடித்தே தீருவது என்ற முடிவுக்கு வருகிறுர்; தம்மீது வழக்குத் தொடுத்தவர்கள் சுமத்தும் அபாண்டத்தை ஒப்புக்கொள்வதைவிடத் தம் உயிரை விடுவதே சிறப்பாகும் என்று முடிவு செய்கிறுர். மருட்டி அவர் வாயை அடக்கி மௌனமாக்கிவிட முயன்ற நீதிபதிகள், வேறுவழியின்றி இவருக்கு மரணதண்டனை விதிக்கிறுர்கள்; அதனுல் சாக்ரடீஸ் உண்மைக்காக உயிர் துறந்த உத்தமத் தியாகி ஆகிறுர்.

# 1. குற்ற மறுப்பு

**தமக்கு இயல்பான முறையில் தம்மைப் பேச அனுமதிக்குமாறு சாக்ரடீஸ் வேண்டுதல்.**

ஏதென்ஸ் வாசிகளே! என்மேல் இதோ குற்றம் சுமத்தியிருக்கிறீர்களே, இதைப்பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் யார் என்பதை நானே மறந்து போகும்படி இவர்கள் செய்து விட்டார்கள். பிறர் மனத்தைத் தூண்டும் முறையில் பக்குவமாகத்தான் பேசியிருக்கிறார்கள். ஆயினும், இவர்கள் சொன்னதில் ஒரு வார்த்தை கூட உண்மையன்று; அவர்கள் கூறிய ஏராளமான பொய்யுரைகள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. என்னுடைய பேச்சு வன்மையில் நீங்கள் மயங்கிவிடாமல் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அவர்கள் கூறியதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். நான்பேச வாய் திறந்தால் இவர்கள் பொய் வெளியாகிவிடும், என்று இவர்களுக்கு உறுதியாகத் தெரியும்; அதாவது, என் பேச்சு வன்மை என்று இவர்கள் சொல்வது உண்மையில் என் ஆற்றலைத்தான் குறிக்கிறது. இவர்கள் இப்படியெல்லாம் சொல்லுகிறார்களே, இது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயம் அல்லவா? இதுதான் இவர்களுடைய கருத்து என்றால், நான் பேச்சுவன்மை படைத்தவன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் இவர்கள் எண்ணுவதற்கும் நான் எண்ணுவதற்குத்தான் எவ்வளவு வேற்றுமை! சரி; இவர்கள் பேசுவது உண்மை அன்று என்பது இப்போது தெரிந்ததா? இனி, நான் சொல்லும் உண்மைகளைக் கேளுங்கள்; ஆனால் என் பேச்சு இவர்களின் பேச்சைப்போல் எதுகையும் மோனையும் நிறைந்ததாக இருக்காது. ஆனால் இப்போது எனக்கு எத்தகைய சொல்லும் சொல்தொடரும் தோன்றுகின்றனவோ அவற்றையே சொல்கிறேன். ஏனென்றால், என்னுடைய இலட்சியம் நியாயமானது என்று தெரியும். நானோ முதியவன், இந்த வயதில், வாலிபச் சொற்பொழிவாளர் போல் உங்கள் முன்னால் நின்று பேசுவது பொருத்த

மல்ல; அந்த முறையில் பேசுவேன் என்றும் எதிர்பார்க்க வேண்டாம்.

**தமக்கு இயல்பான முறையில், தற்காப்பு வாதம் புரிவதை நீதிபதிகள் அனுமதிக்க சாக்ரடீஸ் வேண்டுதல்.**

நீங்கள் எனக்கு ஓர் உதவிசெய்ய வேண்டுகிறேன். எனக்கு இயல்பான முறையில்—(ஏதென்ஸ்) நகரச் சதுக்கத்திலும், லேவா தேவிக்காரர் முன்பும், மற்ற இடங்களிலும் நான் பேசும் முறையில்—பேசுவேன். இதைப்பார்த்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; இடையே என்பேச்சைத் தடுக்கவும் வேண்டாம். இதுவே என் வேண்டுகோள். எனக்கு எழுபது வயதுக்குமேல் ஆகிறது. இப்போதுதான் முதல் முறையாக நீதி மன்றத்துக்கு வந்திருக்கிறேன். இங்கே எம்முறையில் பேசவேண்டும் என்பதும் எனக்குத் தெரியாது; ஆகவே, என்னை யாரோ வெளியூர்க்காரனாகவே நினைத்து, அவனுடைய நாட்டில் பேசுவது போலப் பேசுகிறான் என்று எண்ணி, குறை இருந்தால் மன்னிக்கவேண்டும். இப்படிக் கேட்டுக்கொள்வதில் தவறு ஒன்றும் இல்லையே? நான் எப்படிப் பேசுகிறேன் என்பதைப்பற்றி நீங்கள் பொருட்படுத்தவேண்டாம்; நான் பேசும் முறை அழகாகவும் இருக்கலாம் அல்லது அப்படி இல்லாமலுமிருக்கலாம். நான் பேசுவதிலுள்ள உண்மையை மட்டும் சிந்தியுங்கள். சொல்லுபவர் உண்மையைச் சொல்லட்டும்; நீதிபதி நியாயமாகத் தீர்ப்பளிக்கட்டும்.

**இரண்டு வகையாகக் குற்றம் சாட்டுகிறவர்களுக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.**

முதலில் என்மீது சுமத்தப்பெற்றுள்ள பழைய குற்றங்களுக்கும், அவற்றைச் சுமத்தியவர்களுக்கும் நான் மறுமொழி கூறவேண்டும். அதற்குப் பிறகு, மீதியுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லுகிறேன். என்னைக் குறை கூறுவோர் ஆதியிலேயே பலபேர் உண்டு. இப்படிப் பல ஆண்டுகளாக அபாண்டமாய் என்னைக் குறை கூறி வந்திருக்கிறார்கள். அனிட்டஸும் அவருடைய தோழர்களும் ஆபத்தானவர்கள்தான். ஆயினும், இவர்களைவிட மேலே கூறியவர்களிடந்தான் எனக்குப் பயம், அச்சம். மற்ற எல்லாரையும்விட அவர்களே ஆபத்தானவர்கள். ‘மேலே சொர்க்கலோகம் பற்றி அளந்து,

கீழே பூலோகம் பற்றி ஆராய்கிருனே அந்தச் சாது சாக்ரடீஸ் என்பவன், அவன் நல்லதைத் தீயதாகவும், 'தீயதை நல்லதாகவும் திரித்துக் கூறுகிருன்' என்றெல்லாம் அவர்கள் பொய்யும் அபாண்டமும் சொல்லி, நீங்கள் குழந்தைகளாக இருந்தபோதே அவற்றை உங்கள் மனத்தில் பதியுமாறு செய்துவிட்டார்கள். இப்படிக் கதையைப் பரப்பிவிடுவோரிடந்தான் எனக்குப் பயம் அதிகம்; அவர்களின் பேச்சைக் கேட்பவர்கள், என்னைப்போல் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்போர், தெய்வ நம்பிக்கையே இல்லாதவர்கள் என்றுதானே எண்ணிக்கொள்வார்கள்? இப்படிக் குற்றஞ் சுமத்தியவர்கள் பலபேர்; நெடுநாட்களுக்கு முன்னிருந்தே அவர்கள் இப்படிச் செய்து வருகிருர்கள். நீங்கள் குழந்தைகளாகவோ, இளைஞர்களாகவோ இருந்தபோது உங்கள் மனத்தில் இவை நன்ருகப் பதியும் சமயத்தில்தான், இப்படிச் சொல்லியிருக்கிருர்கள். ஆனுல் நான் நான்குபேர் அறிய என் கொள்கையை எடுத்து விளக்கியபோது அதை மறுத்துப் பேசுவதற்கு எவரும் இல்லை. என்னவென்ருல், என்னைக் குறை கூறியவர்கள் யார் என்ருே, அவர்களின் பெயர்கள் என்னவென்ருே எனக்குத் தெரியாது—அவர்களில் ஒரே ஒரு விகட கவியைமட்டிலும் தெரியும்; அதுவும் தற்செயலாகத்தான் தெரிந்தது. பொருமையும் துவேஷமும் காரணமாக உங்களைத் தூண்டிவிட்டவர்களோடு—இவர்களில் சிலர் தாங்கள் சொல்வது சரியென்று துணிந்தே இதில் இறங்கினுர்கள்—இந்த வகையைச் சேர்ந்தவர்களைச் சமாளிப்பதே வெகு சிரமம் அவர்களை இங்கே கொண்டு வந்து நிறுத்திக் குறுக்கு விசாரணை செய்வதற்குமில்லை. ஆகவே, என்னுல் முடிந்தது, நிழலோடு போர் தொடுப்பதுபோல் என் சார்பாக வழக்காடுவது ஒன்றுதான். மறுமொழி கூற இங்கே எவரும் இராவிட்டாலும் நான் வாதம் புரிந்தேயாக வேண்டியிருக்கிறது. இனி, நான் கூறியபடி எனக்கு இரண்டுவகை எதிரிகள் இருக்கிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு சாரார் சமீபத்தில் ஏற்பட்டவர்கள். இன்னெரு சாரார் ஆதியிலேயே இருந்து வருபவர்கள். இவர்களில் பின்னுல் குறிப்பிட்டவர்களுக்கு நான் முதலில் மறுமொழி சொல்வதுதான் பொருத்தம் என்பதை நீங்கள் உணருவீர்கள் என்றே நம்புகிறேன். ஏனென்ருல், இவர்கள்தாம் மற்றவர்களைவிட நெடுநாளைக்கு முன்னிருந்தே

என்னைக் குறை கூறி வந்திருக்கிறார்கள். அதை நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள்.

இனி என் சார்பாக நான் வழக்காடவேண்டும். நெடுங் காலமாக என்மேல் இருந்துவரும் அதுவதூறுகளை விரைவில் போக்க முயல்வேன். எனக்கும் உங்களுக்கும் நன்மை ஏற்பட வேண்டுமானால், என் கொள்கை நியாயமானது என்றால், இந்த முயற்சியில் நான் வெற்றி பெறவேண்டும். இது எளிதான காரியம் அன்று என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அதை ஆண்டவனுக்கே விட்டுவிட்டு, சட்டத்துக்குக் கட்டுப்பட்டு இனி என் சார்பாக வழக்காடுவேன்.

**இயற்கைத் தத்துவத்தை அலசி ஆராய்கிறார் என்று குற்றம் சுமத்துகிறார்கள்.**

முதலிலிருந்தே தொடங்குகிறேன். எனக்கு அவதூறு நேரக் காரணமாக இருந்த குற்றச்சாட்டுத்தான் என்ன? மெலிட்டஸ் என் மேல் இப்படிக் குறை கூறுவதற்குத் தூண்டுதலாக இருந்ததுதான் என்ன? சரி......அவர்களுடைய குற்றச்சாட்டுத்தான் என்ன? அவர்கள் என்மேல் குற்றம் சுமத்தி அதை நிலைநாட்டப் பார்க் கிறார்கள். அவர்கள் குற்றச்சாட்டு இதுதான்: "சாக்ரடீஸ் தீயவன்; விநோதமான நபர், பூமியிலும் சொர்க்கத்திலும் இருப் பவைகளைப் பற்றி ஆராய்கிறான். நல்லதைத் தீயதாகவும் தீயதை நல்லதாகவும் தெரியுமாறு செய்கிறான்; இதுதான் அவர்களுடைய குற்றச் சாட்டு: அரிஸ்டோ பெனிஸ்* எழுதிய ஹாஸ்ய நாடகத்தில் நீங்களே இதைப் படித்திருப்பீர்கள். அவர், சாக்ரடீஸ் என்ற பெயரில் ஒரு பாத்திரத்தைப் படைத்து அவன், 'காற்றில் நடப்ப தாகச் சொல்லிக்கொண்டு திரிவதாகவும்; எனக்குத் தெரியாத அர்த்தமற்ற விஷயங்களைப்பற்றியும் பேசுவதாகவும்' எழுதியிருக் கிறார்—இதனால் நான் இயற்கைத் தத்துவம் பற்றி ஆராய்வோரை இழிந்தவராகக் கருதிப் பேசுவதாக எண்ணவேண்டாம். மெலிட்டஸ்

* கி. மு. 423இல் மேகங்கள் என்ற நாடகம் எழுதினான் இவன். அதில் சாக்ரடீஸை இவன் நகையாடியிருக்கிறான். சாக்ரடீஸ், தம் 'சிந்தனைக் கடையில்' நல்லதை மோசமானதாகவும் தாழ்ந்ததை நல்லதாகவும் காட்டிப் போதனை புரிவதாக எழுதியிருக்கிறான்.

இப்படி ஒரு குற்றச்சாட்டை என்மேல் கொண்டுவர முடிகிறது என்றால், அது எனக்கு மிகவும் வருத்தமாகவே இருக்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால், நான் இயற்கைத் தத்துவங்களைப் பற்றி ஒன்றுமே சொன்னதில்லை. இங்கே இருக்கிற பலருக்கு இது உண்மை என்று தெரியும். உங்களிடம் வேண்டிக்கொள்கிறேன். ஆகவே, ஏதென்ஸ் வாசிகளே, என் பேச்சைக் கேட்ட நீங்கள் இதை எடுத்துச் சொல்லுங்கள். அந்த மாதிரி புரியாத விஷயங்கள் பற்றி நான் என்னவாவது பேசியிருக்கிறேனா என்பதைப்பற்றி உங்கள் நண்பர்களிடம் கூறுங்கள். இதற்கு என்ன மறுமொழி சொல்கிறீர்கள் ?...... நீதிபதிகளே ! குற்றச்சாட்டின் இந்தப் பகுதியிலே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நீங்களே கேளுங்கள். அதிலிருந்தே மற்றவற்றில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பது தெரிந்துவிடும்.

**அவர் பணம் வாங்குகிற தத்துவ போதகர் என்ற வதந்தி.**

நான் ஏதேதோ போதனை செய்கிறேன், அதற்காகப் பணம் வாங்குகிறேன் என்ற புகாருக்குத் துளியும் ஆதாரம் இல்லை. மற்றப் புகார்களைப் போல்வே இதிலும் உண்மையில்லை. ஆயினும் மனித சமூகம் முழுவதற்கும் போதிக்க உண்மையாகத் தகுதியுடையவனாக இருப்பவன் அதற்காகப் பணம் பெற்றுக் கொள்வது ஒரு பெருமை என்றே நான் கருதுகிறேன். வியான்ஷியத்தில் **கார்க்கியாஸ், சியோஸில் ப்ரோடிகஸ், எலியாஸில் ஹிப்பியாஸ்** ஆகியோர் நகரங்களுக்குச் சென்று இளைஞர்களை, இலவசமாகக் கற்றுத் தருகிற அவர்களின் போதகர்களை விட்டு வந்து விடும்படி அழைக்கிறார்கள். 'இங்கே உங்களுக்கு இலவசமாகக் கற்றுத் தருகிறார்கள் என்றால், நாங்கள் உங்களுக்குக் காசு கொடுத்துக் கற்றுத் தருகிறோம். வாருங்கள், இப்படிப் பெற்றுக் கொள்வதற்காக எங்கள் நன்றியையும் செலுத்துகிறோம்' என்கிறார்கள். பாரியா பிரதேசத்தைச் சேர்ந்த தத்துவ ஆசிரியர் ஒருவர் இப்போது ஏதென்ஸில் வசித்து வருவதாகக் கேள்விப்பட்டேன். அது எனக்கு எப்படித் தெரிந்தது? வழியில் ஹிப்பானிகஸ் என்பவரின் மகன் காலியாஸைப் பார்த்தேன். அவன் சோபிஸ்ட் என்ற தத்துவ போதகர்களுக்காக ஏராளமான

பணம் செலவழித்திருக்கிருன். அவனுக்குப் பிள்ளே, குட்டி உண்டு என்று எனக்குத் தெரியும்.

**காலியாசைப் பார்த்துச் சாக்ரடீஸ் கேட்டது.**

ஆகவே, ''காலியாஸ் உன் பிள்ளேகள் இருவரும் குதிரைக் குட்டிகளாகவோ கன்றுக் குட்டிகளாகவோ இருந்திருந்தால் அவர்களே மேய்க்க ஆளேத் தேடுவது சிரமமாக இருந்திருக்காது. குதிரைகளேப் பழக்கும் ஆளேயோ ஒரு குடியானவனேயோ அமர்த்தியிருக்கலாம்; அவர்கள் குதிரை, மாடு இவைகளேப் பழக்கித் தேர்ச்சி பெற வைக்கும் விதத்தில் நன்ருகப் பயிற்சி அளித்து முன்னுக்குக் கொண்டு வந்திருப்பார்கள். ஆனல் உன் மக்கள் மானிடப் பிறவிகளாயிற்றே, அவர்களுக்குப் பயிற்சியளிக்க யாரை அமர்த்தப் போகிருய்? மனித இயல்பையும் அரசியல் ஒழுக்கத்தையும் பற்றித் தெரிந்தவர்கள் யார் இருக்கிருர்கள்? உனக்குப் பிள்ளேகள் இருப்பதால் நீ இதைப்பற்றி யோசித்துத்தான் இருக்கவேண்டும்; அந்த மாதிரி அறிஞர்கள் யாரேனும் இருக்கிருர்களா ?', என்றேன். ''இருக்கிருர்கள்'' என்ருன் அவன். ''அவர் யார்? எங்கே இருக்கிருர்? என்ன சம்பளம் கேட்கிருர்?'' என்று கேட்டேன். ''அவர் பாரியாப் பிரதேசத்தைச் சேர்ந்த எவினஸ் என்பவர். அவர் இப்படிப் போதிக்க ஐந்து பணமே வாங்குகிருர்'' என்ருன் காலியாஸ். 'உண்மையிலேயே அவர் பெரிய அறிஞராக இருந்து இவ்வளவு குறைந்த தொகைக்குப் போதிப்பதாக இருந்தால் அந்த எவினஸ் அதிருஷ்டக்காரர்' என்று எண்ணினேன். எனக்கே அவ்வளவு ஞானம் இருந்திருக்குமாயின் நான் செருக்கும் தற்பெருமையும் கொண்டிருப்பேன். ஆனல் உண்மை என்னவென்ருல் எனக்கு அந்த மாதிரி ஞானம் ஏதும் இல்லே.

**நான் அறிஞனுக இருப்பதால்தான் என்மீது குற்றம் சுமத்தியிருக்கிருர்கள்.**

ஏதென்ஸ் வாசிகளே, உங்களில் எவரேனும் ஒருவர், ''அது சரி, சாக்ரடீஸ்! உங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கிற இந்தக் குற்றங்களுக்கெல்லாம் மூல காரணம் என்ன? நீங்கள் ஏதோ செய்திருக்க வேண்டும். மற்ற மனிதர்களேப் போல நீங்களும் நடந்து

கொண்டிருந்தால் உங்களைப் பற்றி இந்த மாதிரி வதந்திகளே தோன்றியிரா. இப்போதாவது காரணம் என்னவென்று சொல்லுங்கள். உங்களைப் பற்றி அவசரப்பட்டு முடிவு செய்தால் பின்னால் நாங்கள் வருந்த நேரும்; அதனால்தான் கேட்கிறோம்,'' என்று கேட்பீர்கள். இதோ நான் அந்த அறைகூவலை ஏற்கத் தயார். என்னை அறிவாளி என்று பலர் அழைத்தும் எனக்கு ஏன் இவ்வளவு கெட்ட பெயர் ஏற்பட்டது என்பதை விவரமாகத் தெரிவிக்க முயல்கிறேன். இனி அன்பு கூர்ந்து கேளுங்கள்; உங்களில் சிலருக்கு நான் சொல்வது ஏதோ நகைப்புக்குரியதாக இருந்தாலும் நான் சொல்வதெல்லாம் உண்மையே. ஏதென்ஸ் மக்களே, என்னிடம் ஓரளவு அறிவு இருக்கிறது; அதனால்தான் எனக்கு இப்படி ஒரு புகழ் ஏற்பட்டது. அது எந்தவிதமான அறிவு என்று நீங்கள் கேட்டால், எல்லோருக்குமே கிடைக்கக் கூடிய அறிவுதான் அது என்பேன். அப்படியானால் நான் அறிவாளி என்றே கொள்வேன். என்னைக் குறைகூறுகிறார்களே, அவர்களோ சாமானிய மனிதனுக்கு இருப்பதைவிட மேம்பட்ட அறிவு படைத்தவர்கள். அதை விளக்க என்னால் ஆகாது.

அந்த ஞான முதிர்ச்சிக்குக் காரணம், டெல்பியிலுள்ள
தெய்வம், என்னை மானிடர்களில் பேரறிவாளி என்று கூறியது.

ஏனென்றால் அவ்வளவு ஞானம் எனக்கில்லை. அப்படி இருப்பதாக யாராவது சொன்னால் அது சுத்தப் பொய், என் பெயரையே அவன் கெடுக்கப் பார்க்கிறான் என்றுதான் நான் கூறுவேன். ஏதென்ஸ் மக்களே, இப்போது தயை செய்து குறுக்கிடாமல் நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் சற்று அதிகமாகப் பேசினாலும் குறுக்கிடவேண்டாம். நான் பேசுவது என் சொந்த வார்த்தையல்ல, நம்பத் தகுந்த ஒரு சாட்சியின் பேச்சையே குறிப்பிடுகிறேன். அது டெல்பியிலுள்ள தெய்வந்தான். எனக்கு ஏதாவது சிறப்பான ஞானம் இருந்தால் அது என்ன என்று அந்தத் தெய்வம் சொல்லும். செய்ரிபோன் என்பவரை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர் ஆதியிலேயே என் நண்பர்; உங்களுக்கும் நண்பரே; மக்களோடு அவரும் நாடு கடத்தப் பெற்று வாழ்ந்தவர்; உங்களோடு திரும்பியவர். செய்ரிபோன் மிகவும் முரட்டுத் துணிவு உள்ளவர் என்பது

உங்களுக்கே தெரியும். அவர் டெல்பிக்குப் போய்த் தெய்வத்திடம் தைரியமாகக் கேட்டார்—தயை செய்து குறுக்கே பேசாதிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்—என்னைவிடப் பேரறிஞன் யாரேனும் உண்டா என்றுதான் கேட்டார். பிதியாப் பிரதேசத்தைக் சேர்ந்த அங்கிருந்த தீர்க்கதரிசினி,* 'அவரைவிடச் சிறந்த அறிவாளி வேறெவருமே இல்லை' என்றாள். செய்ரிபோன் காலமாகிவிட்டார்; ஆனால் அவருடைய சகோதரர் இதோ நீதி மன்றத்தில் இருக்கிறார். நான் சொல்வது உண்மைதானா என்று அவரே உறுதிப் படுத்தட்டும்.

என்னைவிட அறிஞன் யாரென்று கண்டுபிடிக்கக் கிளம்பினேன்.
முதலில் அரசியல் வாதிகளிடமும்
பிறகு தத்துவ வாதிகளிடமும் சென்றேன்;
எனக்கு எல்லாம் தெரிவதாகப் பாசாங்கு செய்யாததால்
அவர்களைவிட நான் சிறந்தவனே.

இதை நான் ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? எனக்கு இப்படி ஒரு கெட்ட பெயர் எதனால் ஏற்பட்டது என்று விளக்கப்போகிறேன்; அதனால்தான் தெய்வம் அம்மாதிரி சொன்னதும் எனக்குள்ளேயே நான், 'கடவுள் என்ன பொருளில் இதைச் சொல்லி யிருப்பார்; இந்தப் புதிருக்கு விளக்கம் என்னவாக இருக்கும்' என்று தான் சொல்லிக் கொண்டேன். ஏனென்றால் எனக்கு அபார ஞானமோ, துளி அளவு ஞானமோ, கூட இல்லை; இது எனக்கே தெரியும். அப்படி இருக்கும்போது என்னை எல்லாரையும்விடச் சிறந்த அறிவாளி என்று அந்தத் தெய்வம் சொல்வானேன்? அவர் கடவுள். பொய் சொல்லியிருக்க முடியாது; பொய் சொல்வது தெய்வத்தன்மைக்கே மாறானதாகும். நெடுநேரம் யோசித்த பிறகு இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழியைப் பற்றிச் சிந்தித்தேன். என்னைவிடச் சிறந்த அறிவாளி எவரையேனும் தேடிக்கண்டு விட்டால், அந்தத் தெய்வத்திடம் போய், "இதோ பார், என்னைவிடச் சிறந்த அறிவாளி ஒருவர் இருக்கிறார். நான்தான் எல்லோரையும்விட

* டெல்பி என்ற இடத்தில் அப்போலோ (சூரிய) தேவன் கோயிலில் பிதியா என்பவளின்மேல் ஆவேசம் வரும். அப்போது யாரேனும் கேள்விகள் கேட்டால் தொடர்ச்சி இல்லாமல் விட்டுவிட்டு அவள் சில விடைகள் தருவது வழக்கம்.

அறிவாளி என்றுயே'' என்று கேட்டுவிடுவது என எண்ணினேன் ஆகவே, சிறந்த அறிஞனென்று புகழ்பெற்ற ஒருவரை அணுகிக் கவனிக்கலானேன்—அவர் பெயரைச் சொல்லக்கூடாது. அவர் ஓர் அரசியல் வாதி. அவர் எத்தகையவர் என்று ஆராய்ந்தேன், அதிலிருந்து நான் தெரிந்து கொண்டது இது தான் ; பலர் அவரை மிகவும் அறிவாளி என்று நினைத்தார்கள். அவரே தம்மைப் பேரறிவாளி என்றும் எண்ணிக் கொண்டிருந்தார். அவரோடு நான் பேசியதில் உண்மையில் அவர் அறிவாளி அல்ல என்றுதான் தோன்றியது. உடனே நான், 'நீங்கள் உங்களை அறிவாளியாக எண்ணிக் கொண்டிருந்தாலும் உண்மையில் நீங்கள் அவ்வாறு இல்லையே' என்றேன். இதனால் என்ன நேர்ந்தது தெரியுமா? என்னைக் கண்டாலே அவருக்குப் பிடிக்காது போயிற்று; நான் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும் என்மேல் பகைமை ஏற்பட்டு விட்டது. அதனால், நான் அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். அப்போது எனக்குள்ளேயே இப்படிச் சொல்லிக் கொண்டேன்; ''எங்கள் இருவருக்குமே உண்மையில் ஒழுங்கான சிறந்த விஷயம் எதுவும் தெரிந்திருப்பதாகப் படவில்லை. இருந்தாலும், அவரைவிட நான் எவ்வளவோ சிறந்தவன். அவருக்கோ ஒன்றுமே தெரியாது; ஆனாலும் தெரிந்திருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார். எனக்கும் ஒன்றும் தெரியாதுதான். ஆனால் எனக்கு ஏதாவது தெரியும் என்று நான் எண்ணிக் கொண்டிருக்க வில்லை, ஆகவே, இப்படி எண்ணாத வரைக்கும் அவரை விட நான் எவ்வளவோ சிறந்தவன்'' என்று மனத்துக்குள் கூறிக் கொண்டேன்.

பிறகு அவரைவிடச் சிறந்த அறிவாளி என்று சொல்லிக் கொண்ட வேறொருவரிடம் சென்றேன். 'இவர் நிலையும் அதே தான்' என்ற முடிவுக்கு வந்தேன். இதனால் அவருக்கும் அவரைப் போன்ற பலருக்கும் என்மேல் பகைமை மூண்டு விட்டது. அதற்குப் பிறகும் இதே மாதிரி ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டே போனேன். இதனால் அவர்களுக்கும் என்மேல் பகைமையே ஏற்பட்டது. இது எனக்குத் தெரியாமலில்லை. இப்படியும் நேர வேண்டுமா என்றுதான் அஞ்சி வருந்தினேன். ஆனால் இங்ஙனம்

விசாரிப்பது அவசியமாக இருந்தது. 'தெய்வ வாக்காயிற்றே! அதை முதலில் தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டாமா?' என்று தான் எண்ணினேன். "அறிஞர்களாகத் தோன்றும் எல்லாரையுமே போய்ப் பார்த்தாக வேண்டும்" என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்... ஏதென்ஸ் வாசிகளே! இதோ உங்கள் எதிரில் ஆணையிடுகிறேன்: சத்தியத்தை நான் சொல்லியே ஆகவேண்டும்— இப்படி யெல்லாம் விசாரித்ததில் தெரிந்தது இதுதான்: மிகவும் அறிஞர்கள் என்று புகழ் பெற்றவர்கள் எல்லாரும் மிகவும் அறிவிலி களே. அவர்களைப்போலப் புகழ்பெறுதவர்கள் உண்மையிலேயே அவர்களிலும் அறிவாளிகள், மேலானவர்கள் என்று கண்டு கொண்டேன். இதற்காக நான் அலைந்த அலைச்சலும் பட்ட துன்பமும் கொஞ்ச நஞ்சமல்ல: எல்லாவற்றையுமே சொல்லுகிறேன் —தெய்வ வாக்கைத் தேர்ந்து தெளியத்தான் இவ்வளவு கஷ்டத் தையும் பொறுத்துக் கொண்டேன்; இறுதியில் அதுதான் உண்மை என்றும் அதை மறுக்கவே முடியாது என்றும் தெரிந்தது.

**தாங்கள் இயற்றிய கவிதைகளையே**
**விளக்கத் தெரியாதவர்கள் கவிஞர்கள்**
**என்பதைக் கண்டு கொண்டேன்.**

அரசியல் வாதிகளை ஆராய்ந்த பிறகு துன்பம், இன்பம் போன்ற எல்லா அம்சங்களைப் பற்றியும் பாடுகிற கவிஞர்களைக் காணச் சென்றேன், அப்போது எனக்குள்ளேயே, 'இனி உன் னுடைய உண்மைத்திறன் வெளிப்பட்டு விடும். அவர்களை எல்லாம் விட, நீதான் அறிவிலி என்று தெரிந்து கொள்வாய் பார்' என்று சொல்லிக் கொண்டேன். அந்தக் கவிஞர்களிடம் சென்று அவர்கள் எழுதிய நூல்களிலிருந்தே விரிவான பல பகுதிகளை எடுத்துக் காட்டி, 'இவைகளுக்கு என்ன பொருள்?' என்று கேட்டேன். நான் சொல்வதை நம்புவீர்களா? உண்மையைச் சொல்ல எனக்கு வெட்க மாக இருக்கிறது. ஆனால் சொல்லித்தான் ஆகவேண்டும். அங்கே இருந்த மற்றவர்கள்கூட அந்தக் கவிதைகளைப் பற்றி அவர்களை விட நன்றாகப் பேசியிருப்பார்கள். அந்தக் கவிஞர்களின் விளக்கம் அவ்வளவு குறைந்த தரத்தில் இருந்தது. பெரும் அறிவு இருப்ப தால் கவிஞர்கள் கவிதைகளை எழுதிவிடவில்லை, ஏதோ மேதையும்

உள்ளுணர்வும் காரணமாகத்தான் எழுதுகிறார்கள் என்று தெரிந்து கொண்டேன். ஆரூடம், குறி எல்லாம் சொல்லுகிறார் சிலர். பேசும் விஷயம் நன்றாகத்தான் இருக்கும், ஆனால் அவர்களுக்கோ அவற்றின் பொருள் புரியாது:

**கலைஞர்களிடம் உண்மையிலேயே சற்று அறிவு இருந்தது. ஆனால் அவர்களுக்கும் தங்களுக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றித் தெரிந்ததாக ஒருவிதச் செருக்கு இருந்தது.**

கலைஞர்களும் பெரும்பாலும் அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தாம் என்று எனக்குப் பட்டது. அவர்களுக்குக் கவிதா சக்தி இருப்பதால் அவர்களுக்குத் தெரியாத மற்ற விஷயங்களிலும் வல்லவர்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிந்தது. ஆகவே, அரசியல் வாதிகளைவிட நான் அறிவில் மேம்பட்டவன் என்று முடிவு கட்டியது போலவே, இந்தக் கவிஞர்களையும் விட நான் அறிவாளி என்றே தீர்மானித்தேன்; அங்கிருந்து புறப்பட்டு விட்டேன்.

**கைவினைஞர்களிடமும் ஓரளவு அறிவு காணப்படுகிறது; ஆனால் அவர்களும், அவர்களுக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றித் தெரிந்திருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்**

கடைசியாக கைவினைஞர்களிடம் போனேன். அப்போது, எனக்கு ஒன்றும் தெரியாது; அவர்களுக்குத்தான் அருமையான பல விஷயங்கள்பற்றித் தெரியும் என்று உணர்ந்தே அங்கே சென்றேன். நான் நினைத்தது தவறல்ல. எனக்குத் தெரியாத பல விஷயங்கள் அவர்களுக்குத் தெரிந்திருந்தன; ஆனால், 'சிறந்த கைவினைஞர்களும் (கவிஞர்களைப் போலவேதான் தவறாகத்) தங்களைப்பற்றிப் பிரமாதமாக எண்ணிக்கொண்டிருந்தார்கள்' என்று தெரிந்தது. கலையில் தேர்ந்தவர்களாதலால் பெரிய பெரிய விஷயங்களைப்பற்றியும் எல்லாம் தெரியும் என்று இவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்தக் குறைபாடு இவர்களின் அறிவின் பெருமையையே மறைத்தது. ஆகவே, தெய்வத்தின் சார்பாக நானே என்னை இப்படிக் கேட்டுக்கொண்டேன்:

"இந்த அரசியல் வாதிகள் முதலியவர்களுக்கு இருப்பது போன்ற அறிவோ அல்லது அறியாமையோ வேண்டுமா? அல்லது

முன்னே இருந்ததுபோல இருந்து விடுவோமா? இல்லாவிட்டால் இவர்களைப் போலவே இரண்டுங் கெட்டானாக இருக்கலாமா?'' இப்போது இருப்பது போலவே இருந்துவிடுவது மேல் என்று எனக்குத் தோன்றியது,

இப்படி விசாரித்துக்கொண்டே போனதால் மிகவும் (கெட்ட அபாயகரமான) பகைவர்கள் பெருகிவிட்டார்கள். என்மேல் வீண் அபவாதங்கள் தோன்ற இடம் ஏற்பட்டுவிட்டது. நான்பேசுவதைக் கேட்பவர்களோ என்னை அறிஞன் என்று சொல்லுகிறார்கள்; மற்றவர்களிடம் நான் காணாத ஏதோ அறிவு என்னிடம் இருப்பதாக எண்ணிக்கொள்கிறார்கள்.

**தெய்வ வாக்குக் கூறிய கூற்று சாக்ரடீஸ் சம்பந்தப்பட்டதல்ல; தங்கள் அறிவு எதற்கும் பயனில்லை என்று தெரிகிறவர்கள் யாவருக்குமாகக் கூறியதாகும்.**

ஏதென்ஸ் வாசிகளே, உண்மை என்ன தெரியுமா? கடவுள் ஒருவர்தான் எல்லாம் தெரிந்தவர். அது சொன்ன பதிலின் கருத்து "மனிதர்களுக்கு இருக்கும் அறிவு வெகு சொற்பம்; ஏன் துளிக்கூட இல்லை'' என்பதுதான். தெய்வம் சாக்ரடீஸைப்பற்றிப் பேசவில்லை. தன் அறிவு, உண்மையில் சொற்பமே என்று (சாக்ரடீஸைப்போல்) கண்டுகொண்டிருப்பவன்தான் அறிவாளி'' என்பதை உதாரணம் மூலம் விளக்குவதற்குத்தான் என்பெயரைக் கூறிற்று. ஆகவே, தெய்வத்தின் உத்தரவுப்படி நான் உலகெங்கும் சுற்றி, அறிஞன் என்று தோன்றுபவனை அவன் உள்ளூர் மகனாக இருந்தாலும் சரி, முன்பின் தெரியாதவனாக இருந்தாலும் சரி—உண்மையிலேயே அப்படி அறிவாளிதானா என்று விசாரித்தறிகிறேன். அவன் அறிவாளியாக இராவிட்டால் தெய்வவாக்கு சரிதான் என்பதை நிரூபிக்க, அவன் அறிவாளியே அல்ல என்பதை அவனுக்கு எடுத்துக் காட்டுகிறேன். இந்தமாதிரி ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பதால், பொது விஷயங்களிலோ அல்லது என் சொந்த அலுவல்களிலோ கவனம் செலுத்த எனக்கு நேரம் இல்லை. நான், தெய்வத்தினிடம் உள்ள பற்றுதலால் வறுமையில் ஆழ்ந்து கிடக்கிறேன்.

**சில வாலிபர்கள் நான் விசாரணை செய்வதுபோல, போலி அறிஞர்களை ஆராய்கிறார்கள்; அவர்கள் போலித்தன்மையையும் கண்டுகொள்கிறார்கள். ஆனால் அதனால் ஏற்படுகிற பகைமை என்னைப் பாதிக்கிறது.**

இன்னும் ஒரு விஷயம்: பணக்கார வகுப்பைச் சேர்ந்த வாலிபர்களுக்கு வேலை அதிகமாக இராது. எனவே அவர்கள் தாங்களாகவே என்னிடம் வருகிறார்கள். அறிவாளிகளாகப் பாவனை செய்கிறவர்களை நான் விசாரிக்கும்போது அதைக் கேட்கவேண்டும் என்று அந்த வாலிபர்களுக்கு ஆவலாக இருக்கிறது. என்னைப் போலவே அவர்களும் இப்படி மற்றவர்களை விசாரிக்கத் தொடங்கி விடுகிறார்கள். சொற்ப அறிவோ, துளி அறிவோ கூட இராத பலர், தங்களுக்கு ஏதோ தெரியும் என்றுதானே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்! இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று இந்த வாலிபர்கள் விரைவில் தெரிந்துகொண்டு விடுகிறார்கள். இவ்வாறு விசாரிக்கப்படுகிறவர்கள் வாலிபர்களைக் கோபிக்காமல் என்மீது சீறுகிறார்கள். குழம்பிய சிந்தனையுடைய இந்தச் சாக்ரடீஸ் "வாலிபர்களைக் கெடுக்க வந்துவிட்டான்!" என்று கூறுகிறார்கள். அப்போது யாரேனும் அவர்களிடம், "ஏன் ஐயா, அவர் என்ன தவறு செய்துவிட்டார். அல்லது என்ன தீங்கைப் போதித்துவிட்டார்?" என்று கேட்டால், அவர்களுக்குப் பதிலளிக்கத் தெரியவில்லை. தங்கள் போலித்தன்மை வெளிப்பட்டு விடாமல் இருப்பதற்காக, தத்துவ ஞானிகளின்மேல் சுமத்தப்படுகிற குற்றச்சாட்டுக்களை யெல்லாம்—வானத்திலும் பூமியின் அடியிலும் ஏதேதோ இருப்பதாக நான் போதிக்கிறேனென்றும், தெய்வம் தேவாதியே இல்லை என்கிறேன் என்பதாகவும், தீயதை நல்லது போலவும் நல்லதைத் தீயதுபோலவும் நான் காட்டுவதாகவும்—குற்றச்சாட்டுக்களைக் கூறுகிறார்கள். அவர்கள் அறிவாளிகள் என்று வேஷம் போட்டதெல்லாம் வெளிப்பட்டுவிட்டதை ஒப்புக்கொள்ள இவர்களுக்குப் பிடிக்கவில்லை! ஆனால், உண்மை அதுதான். இத்தகையோர் ஏராளமானவர்கள் இருப்பதாலும் இவர்களுக்கு அளவற்ற பேராசையும் வலிமையும் இருப்பதாலும் அவர்கள் வலுச் சண்டைக்குத் தயாராக நிற்கிறார்கள். அவர்களுக்கு நயமாகப் பேசி என்னைத் தூற்றவும் முடிகிறது; உங்கள் காதில் இந்தவிதமான

அவதூறுகளெல்லாம் நன்ருகப்பதியும்படி உரக்கவும் இடைவிடாமலும் பிரசாரம் செய்திருக்கிருர்கள். மெலிட்டஸ், அனிட்டஸ்' லைகோன் ஆகிய மூவரும் இதனுல்தான் என்மேல் குற்றஞ் சுமத்தியிருக்கிருர்கள். கவிஞர்களின் சார்பில் மெலிட்டஸுக்கு என்னிடம் கோபமுண்டு; அனிட்டஸ் கைவினைஞர்கள், அரசியல் வாதிகள் ஆகியோரின் சார்பிலும், லைகோன் சொல்வன்மை மிகுந்த சொற்பொழிவாளர்களின் சார்பிலும் என்மேல் வழக்குத் தொடுத்திருக்கிருர்கள். முதலிலேயே சொல்லியிருக்கிறேன்: இவ்வளவு பெரிய அபாண்டத்தை ஒரேசமயத்தில் எதிர்த்துச் சமாளிக்க முடியும் என்று நான் எதிர்பார்ப்பதற்கில்லை என்று ஆரம்பத்திலேயே கூறியிருக்கிறேன். ஆகவே, ஏதென்ஸ் வாசிகளே, இதுதான் உண்மை; முற்றும் உண்மை! நான் ஒன்றையும் மறைக்கவில்லை; திரித்துக் கூறவுமில்லை. ஆயினும், நான் வெளிப்படையாகப் பேசுவதால் இவர்களுக்கு என்மேல் வெறுப்பு ஏற்படுகிறது. இந்த வெறுப்புக்கு என்ன பொருள்? நான் சொல்வது உண்மைதான் என்பதுதானே! இதனுல்தான் என்மேல் வெறுப்பு மூண்டிருக்கிறது; காரணம் இதுதான். இந்த விசாரணையின் போதோ அல்லது பிறகு நடக்கும் விசாரணையின்போதோ இந்த விஷயம் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

**என்னைக் குறை கூறுவோரில் இரண்டாம் சாரார்.**

என்மேல் குற்றம் குறை கூறும் முதல் சாராரின் புகார்களுக்குத் தக்க பதில் சொல்லியாயிற்று. இப்போது இரண்டாவது சாராரின் புகார்களுக்குப் பதில் சொல்லப்போகிறேன். இவர்களுக்குத் தலைவர் மெலிட்டஸ். அவரே கூறிக்கொள்வதுபோல் அவர் நல்லவர்தான். தேசாபிமானி; தேசபக்தர்தான். இந்த இரண்டாம் சாராரின் குற்றச்சாட்டுக்கும் நான் பதில் சொல்லவேண்டும்! அவர்கள் குற்றச்சாட்டைப் படிக்கச் சொல்லுங்கள். 'சாக்ரடீஸ் தீயசெயல் புரிபவர்; வாலிபர்கள் மனத்தைத் தீய வழியில் திருப்புகிருர். நம் நாட்டுத் தெய்வங்களில் அவருக்கு நம்பிக்கை இல்லை. தமக்குத் தோன்றிய தெய்வம் தேவாதிகளை யெல்லாம் சிருஷ்டி செய்கிருர்?' என்பதுதான் அவர்களின் குற்றச்சாட்டுகள். இனி, ஒவ்வொரு குற்றச்சாட்டாக ஆராயலாம். நான் தீய செயல் புரிபவன். வாலிபர்

களின் மனத்தைக் கலைத்து அவர்களைக் கெடுக்கிறேன் என்று அவர் குற்றம் சுமத்துகிறார். ஏதென்ஸ் வாசிகளே! மெலிட்டஸ்தான் அந்தமாதிரி தீயசெயல் புரிகிறார். தமக்குத் துளியும் அக்கறையில்லாத விஷயங்களில் அக்கறையும் ஆர்வமும் காட்டிக்கொண்டு மனிதர்களை வழக்கில் இழுத்துவிடுகிறார்; இந்த விஷயத்தில் மிகவும் சிரத்தை இருப்பதுபோல் நடிக்கிறார் என்று நான் கூறுகிறேன். இந்த உண்மையை உங்களுக்கு நிரூபிக்க நான் முயலுவேன்.

இங்கே வாருங்கள் மெலிட்டஸ்! நான் ஒரு கேள்வி கேட்கிறேன்; வாலிபர்களை எப்படிச் சீர்திருத்த வேண்டுமென்றுதானே நீங்கள் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**சாக்ரடீஸ் ஒருவரைத் தவிர மற்ற எல்லாரும் வாலிபர்களைச் சீர்திருத்தி வருகிறார்கள்.**

ஆமாம்.

அப்படியானால், வாலிபர்களைச் சீர்திருத்துவது யார் என்பதை நீதிபதிக்குத் தெரிவியுங்கள். உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும்; ஏனென்றால் வாலிபர்களின் மனத்தைக் கலைத்து அவர்களைக் கெடுப்பது யார் என்று கண்டுபிடிக்க நீங்கள்தான் வந்திருக்கிறீர்கள். நீதிபதிகளின் எதிரே என்மீது குற்றம் சுமத்துவதும் நீங்கள்தானே; அப்படியானால் அந்த வாலிபர்களை, யார் சீர்திருத்துகிறார்கள் என்பதை நீதிபதிகளிடம் கூறுங்கள். என்ன மெலிட்டஸ், ஒன்றுமே பேசாமல் இருக்கிறீர்கள். உங்களுக்கு வெட்கமாக இல்லையா? நான் சொன்னதுபோல, இந்த விஷயத்தில் உங்களுக்கு ஆர்வமே இல்லை என்பதற்கு இது சிறந்த அத்தாட்சி அல்லவா? சொல்லுங்கள் ஐயா. வாலிபர்களைச் சீர்திருத்துகிறவர்கள்யார் என்பதைச் சொல்லுங்கள்.

சட்டங்கள்.

ஐயா! நான் சொல்வது அதல்ல; யார் அவர்களைச் சீர்திருத்துகிறார்கள். இந்தச் சட்டத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் யாவர் என்றுதான் நான் கேட்கிறேன். இதற்கு முதலில் பதில் சொல்லுங்கள்.

இதோ நீதிமன்றத்தில் வீற்றிருக்கும் நீதிபதிகள், சாக்ரடீஸ்.

என்ன மெலிட்டஸ்! இவர்கள் தாம் வாலிபர்களுக்குப் போதனை புரிந்து அவர்களைச் சீர்திருத்தி வருகிறார்கள் என்கிறீர்களா?

ஆமாம், நிச்சயமாக, இவர்கள்தாம்.

என்ன, இவர்கள் எல்லோருமா அல்லது சிலபேர் மட்டுந்தானா? மற்றவர்கள் அப்படிச் செய்யவில்லையா?

எல்லாருந்தான்,

தேவியின் மீது ஆணை! இது நல்ல சேதிதான். அப்படியானால் வாலிபர்களைச் சீர்திருத்துகிறவர்கள் ஏராளமாகத்தான் இருக்கிறார்கள்! இதோ கூடியிருக்கிறார்களே, இந்த மக்கள், இவர்களும் அவர்களைச் சீர்திருத்தி வருகிறார்களா?

ஆமாம், இவர்களுந்தான்.

செனட் சபை அங்கத்தினர்கள்?

ஆமாம், அவர்களும் வாலிபர்களைச் சீர்திருத்துகிறார்கள்.

அப்படியானால் அரசாங்கச் சட்டசபை அங்கத்தினர்கள் வாலிபர்களைக் கலைத்துக் கெடுக்கிறார்கள் போலும். அல்லது அவர்களும் வாலிபர்களைச் சீர்திருத்துகிறார்களா?

அவர்களுந்தான்.

ஆகவே, என்னைத் தவிர ஏதென்ஸ் வாசிகள் எல்லாரும் வாலிபர்களைச் சீர்திருத்தி, மேம்படுத்துகிறார்கள், நான்தான் அவர்களைக் கெடுக்கிறேன்; அப்படித்தானே?

அதைத்தான் நானும் நிச்சயமாகச் சொல்கிறேன்.

**ஆனால் இந்த துரதிருஷ்டமான விஷயத்தை விலங்குகளின் உதாரணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாகத் தோன்றவில்லை.**

நீங்கள் சொல்வது சரியாக இருந்தால் நான் துரதிருஷ்டசாலி தான்; ஆனால் ஒரு கேள்வி கேட்கிறேன். குதிரைகளை எடுத்துக்

கொள்வோம், 'அவைகளை ஒருவன் மட்டிலும் துன்புறுத்த உலகிலுள்ள மற்றெல்லாரும் அதற்கு நன்மை செய்கிறார்களா? அப்படிச் சொல்வது உண்மைக்கு நேர்மாறான தல்லவா? ஒருவனுக்குத்தான் அவைகளுக்கு நன்மை செய்ய முடிகிறது; பலபேர் அப்படிச் செய்ய முடியவில்லை. அதாவது, குதிரைகளைப் பழக்குகிறவன் அவைகளுக்கு நன்மை செய்கிறான்; அவைகளைப் பயன் படுத்துகிறவர்கள் அவைகளுக்குத் தீங்குதானே புரிகிறார்கள், அப்படித்தானே? குதிரைகளையோ அல்லது மற்ற விலங்குகளையோ சம்பந்தப்பட்ட வரையில் இது உண்மைதானே?' மெலிட்டஸ்...... நீங்களும் அனிட்டஸும் அதை ஒப்புக் கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளா விட்டாலும் சரி, அதுதான் உண்மை. உலகத்தில் வாலிபர்களின் மனத்தைக் கெடுப்பவன் ஒருவன் மட்டுமே இருந்து, மற்றவர்கள் எல்லோரும் அவர்களைச் சீர்திருத்துகிறவர்களாக இருந்தால் அவர்களின் நிலைமை சந்தோஷமானது, ஆனால், மெலிட்டஸ், அந்த வாலிபர்களைப் பற்றி நீங்கள் துளிக்கூட கவலைப்படுவதில்லை என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. என் மீது சுமத்துகிற குற்றச் சாட்டுகளைப் பற்றி உமக்குக் கவலை இல்லாதிருப்பதிலிருந்தே உங்கள் அசிரத்தைத் தெளிவாகத் தெரிகிறது.

மெலிட்டஸ், இன்னும் ஒரு கேள்வி கேட்கிறேன், (ஆண்டவன் சாட்சியாக) தீய மக்களோடு வாழ்வது நல்லதா, நல்லவர்களோடு வாழ்வது நல்லதா?—இதற்குப் பதில் சொல்லுங்கள். இந்தக் கேள்விக்கு எளிதில் பதில் சொல்லி விடலாமே! நல்லவர்கள் தம் அண்டை அயலாருக்கு நன்மையும் தீயவர்கள் தீமையுந்தானே புரிவார்கள்?

நிச்சயமாக அப்படித்தான்.

இன்னும் ஒன்று, தன்னோடு இருப்பவர்களால் தனக்கு நன்மை ஏற்படுவதைவிட, தீங்குதான் ஏற்பட வேண்டு மென்று யாராவது நினைப்பார்களா? இதற்குப் பதில் சொல்லுங்கள், சட்டப்படி நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். பிறரால் தனக்குத் தீங்கு நேர வேண்டுமென்று யாராவது விரும்புவார்களா?

நிச்சயமாக விரும்ப மாட்டார்கள்.

நான் வாலிபர்கள் மனத்தைக் கெடுக்கிறேன் என்று குற்றஞ் சாட்டுகிறீர்களே! தெரிந்து சொல்கிறீர்களா? அல்லது தெரியாமலே தான் சொல்கிறீர்களா?

தெரிந்தே தான் சொல்கிறேன்.

**என் அண்டையில் உள்ளவருக்குத் தீங்கு செய்வதால் எனக்குத் தீங்கு செய்தவனுகிறேன். ஆகவே தெரிந்து கொண்டுதான் நான் இப்படி அவர்களுக்குத் தீங்கிழைக்கிறேன் என்று கருதுவதற்கு இல்லை.**

ஆனுல், இப்போது நல்லவர்கள் தம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு நன்மையும், தீயவர்கள் அவர்களுக்குத் தீமையும் புரிவார்கள் என்று நீங்களே இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறீர்களே! அப்படியானுல் என்னேடு வாழ்கிற ஒருவன் என்னுல் கெட்டுப்போய் விடுகிருன், அவனுல் எனக்குத் தீங்கு ஏற்படுகிறது, அப்படியும் வேண்டுமென்றே நான் அவனைக் கெடுக்கிறேன். இவ்வளவு வயதாகியும் இதை உணராமல் அவ்வளவு மடமையிருளில் மூழ்கிக் கிடக்கிறேன், நீங்களோ இந்த உண்மையை இந்த இளவயதிலேயே உங்கள் அபார அறிவினுல் கண்டு விட்டேன் என்றுதானே சொல்கிறீர்கள்? நீங்கள் சொன்னுலும் என்னையோ மற்றவர்களையோ இதைச் சரியென்று ஒப்புக் கொள்ளும்படி செய்ய முடியாது. 'ஒன்று, அவர்களின் மனத்தைக் கலைத்துக் கெடுக்கவில்லை, இல்லாவிட்டால் என்னை அறியாமலேயே அவர்களைக் கெடுக்கிறேன்' என்பதுதான் உம்முடைய கருத்துக்களென்ருல் அவை இரண்டுமே உண்மையல்ல. எனக்குத் தெரியாமல் நான் குற்றம் புரிந்திருந்தால் அறியாமற் செய்த பிழைகளைச் சட்டம் (இங்கே) தவருகக் கொள்வதில்லை. நீங்கள் என்னைத் தனியாகக் கண்டுபேசி அந்தப் பிழை பற்றி எச்சரித்தும் கண்டித்தும் இருக்க வேண்டும். எனக்கு நல்லபடியாகச் சொல்லியிருந்தால் எனக்குத் தெரியாமல் செய்து வந்த ஒரு காரியத்தை அதோடு நிறுத்தியிருப்பேன். அந்த மாதிரி செய்வதை நிறுத்தியிருக்க வேண்டியதுதான்; சந்தேகமேயில்லை, ஆனுல் நீங்களோ என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை. எனக்கு நல்லது எது என்று போதிக்கவுமில்லை. இப்போதோ இந்த நீதி மன்றத்தில் குற்றம் சுமத்துகிறீர்கள். இது உபதேசம் நடைபெறுகிற இடமல்ல; இங்கே தண்டனைதான் கிடைக்கும்.

ஏதென்ஸ் வாசிகளே, நான் ஏற்கனவே சொன்னது போல் விஷயம் தெளிவாகி விட்டதல்லவா? மெலிட்டஸுக்கு இந்த விவகாரத்தைப் பற்றித் துளியும் அக்கறையே இல்லை; மெலிட்டஸ், வாலிபர்களின் மனத்தை நான் எந்த விஷயத்தில் கெடுக்கிறேன் என்பது பற்றி எனக்குத் தெரிய வேண்டும்.

நீங்கள் இந்தமாதிரி குற்றஞ்சாட்டுவதிலிருந்து, "நம் நாட்டுத் தெய்வங்களை மதிக்கக்கூடாது; வேறு புதிய தெய்வம் தேவாதிகளை ஏற்கவேண்டும்' என்று நான் அவர்களுக்குப் போதனை செய்வதாக நீங்கள் குற்றம் சுமத்துகிறீர்கள். இவ்விதமாகத்தான் நான் வாலிபர்களைக் கெடுக்கிறேன் என்கிறீர்கள், அப்படித்தானே?

**மெலிட்டஸ், வாலிபர்களைக் கெடுக்கிறார் என்று சாக்ரடீஸ் மீது பழி சுமத்தல்.**

ஆமாம்; நிச்சயமாக அப்படித்தான்.

இதோ நீதிமன்றத்தில் அந்தத் தெய்வங்களின்மேல் ஆணையாகச் சொல்லுங்கள். உங்கள் மனத்திலிருப்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள். மெலிட்டஸ், 'வேறு சில தெய்வம் தேவாதிகளை ஏற்க வேண்டும்' என்று நான் மற்றவர்களுக்குப் போதிப்பதாகவா சொல்லுகிறீர்கள்? உங்கள் கருத்து எனக்கு இன்னும் விளங்கவில்லை! நான் தெய்வங்களை நம்புகிறேன்; நாஸ்திகன் அல்ல—அப்படி நாஸ்திகன்தான் என்று நீங்கள் சுமத்தவுமில்லை—ஆனால் நான் வணங்கவிரும்பும் தெய்வங்கள் நம் நாட்டினர் ஏற்கும் தெய்வங்கள் அல்ல அவை, வேறு தெய்வங்கள்' என்று தானே குற்றம் சாட்டுகிறீர்கள்? அல்லது நான் முழுநாஸ்திகன், நாஸ்திகத்தையே போதிக்கிறேன் என்று கூறுகிறீர்களா?

நீங்கள் முழுக்க முழுக்க நாஸ்திகர்தான், என்றுதான் நான் கூறுகிறேன்.

உங்கள் பேச்சு ஆச்சரியமாக இருக்கிறதே! அப்படியானால் மற்ற மனிதர்களைப்போல் நான் சூரிய சந்திரர்களைத் தெய்வங்களாக நம்பவில்லை என்கிறீர்களா?

நீதிபதிகளே! இவர் அப்படி நம்பவில்லை என்று உறுதியாகச் சொல்கிறேன். சூரியனைக் கல் என்றும், சந்திரனை மண் என்றும் சொல்கிறார்.

**மெலிட்டஸ் அனெக்ஸ கோராஸின் கொள்கையைச் சாக்ரடீஸின் கருத்தாக எண்ணிக் குழப்புதல்**

மெலிட்டஸ்! அனெக்ஸ கோராஸின் மீது குற்றம் சுமத்துவ தாக நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலும்? அனெக்ஸ கோராஸ், கிளாஸோ மேனியன் இவர்கள் எழுதிய புத்தகங்களில்தான் இந்த மாதிரியான கொள்கைகள் எல்லாம் நிறைய இருக்கின்றன. நம் நீதிபதிகள் இதுகூடத் தெரியாதவர் கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? அவர்களைப் பற்றி அவ்வளவு மோசமான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்? அடிக்கடி நாடகமேடைகளில் இப்படியெல்லாம் பார்க்க வாலிபர்களுக்கு வசதி இருக்கிறது; அவர்கள் (அதிகப்படி பிரவேசக் கட்டணம் ஒரு டிராக்மாதான்) பணங் கொடுத்துப் பார்த்துவிட்டு இந்த விநோதக் கருத்துக்களை யெல்லாம் சாக்ரடீஸ் போதித்ததாகக் கூறினால் அவர்களைப் பார்த்துச் சிரிக்கத்தானே சிரிப்பார்கள்! ஆகவே- உண்மையாகவே நான் எந்தத் தெய்வத்தையும் நம்பவில்லை என்று கூறுகிறீர்கள்?

தேவாதி தேவன் ஜீயஸ்மேல் ஆணையாகச் சொல்கிறேன் நீங்கள் எந்தத் தெய்வத்தையும் நம்பவில்லை.

மெலிட்டஸ்! நீங்கள் சொல்வதை யாரும் நம்பமாட்டார்கள். உங்களைப்பற்றி உங்களுக்கே நம்பிக்கையில்லை என்பது உறுதியாக எனக்குத் தெரியும்.

**மெலிட்டஸ் தமக்குத்தாமே முரணாகப் பேசுகிறார்.**

ஏதென்ஸ் வாசிகளே! மெலிட்டஸ் கண்மூடித்தனமாகவும் திமிராகவும் நடந்து கொள்கிறார். இளமையின் முரட்டுத் துணிச் சல் காரணமாக வேண்டுமென்றே இப்படிச் செய்கிறார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. என்னை விசாரணை செய்வதாக நினைத்துக் கொண்டு ஒரு புதிரையே உண்டு பண்ணிவிட்டாரே இவர்! தமக்

குள்ளே இவர் என்ன சொல்லிக் கொள்கிருர், தெரியுமா? 'நான் வேடிக்கையாக இப்படி முரண்பாடாகப் பேசுவதை இந்த அறிஞர் சாக்ரடீஸ் கண்டு பிடிக்கிருரா, பார்க்கலாமே!' என்றுதான். உண்மையிலேயே இவர் முன்னுக்குப் பின் முரணுகப் பேசியிருக்கிருர்; அதாவது, "சாக்ரடீஸ் தெய்வங்களை நம்பாததால் குற்றவாளி, அதே சமயம் நம்பவும் நம்புகிருர் அவைகளை" என்பது போலத்தான் பேசியிருக்கிருர்—இது உண்மை ஆர்வம் உள்ளவர்கள் பேசும் பேச்சாகப் படவில்லையே. ஏதென்ஸ் வாசிகளே! நீங்களும் இவருடைய முரணுன போக்கை என்னேடு ஆராய வேண்டும்...... மெலிட்டஸ்! இதற்குப் பதில் சொல்லுங்கள்......மகா ஜனங்களே! உங்களுக்கு ஒரு வேண்டுகோள்; எனக்கு இயல்பான முறையில் பேசுவேன்; தயை செய்து குறுக்கிடாமல் இருக்க வேண்டுகிறேன்.

**தெய்வ வாக்குப் போன்றவற்றில் நம்பிக்கையுள்ள சாக்ரடீஸ் தெய்வங்களை நம்பாதிருக்க முடியுமா?**

மனிதர்கள் உண்டு என்ற விஷயத்தை நம்பாமல், மனிதனேடு சம்பந்தப்பட்ட பொருள்கள் உண்டென்பதை யாராவது நம்பியிருக்கிருர்களா மெலிட்டஸ்?...ஏதென்ஸ் வாசிகளே! இவர் கண்டபடி குறுக்கிட்டுப் பேசிக் கொண்டிராமல் இதற்குப் பதில் சொல்லட்டும். மனிதன் குதிரைகளை நம்பாமல் அவைகளின் மேல் சவாரி செய்வதில் மட்டும் நம்பிக்கை கொண்டதுண்டா? குழல் ஊதுபவர்களிடம் நம்பிக்கை இராமல், குழல் ஊதுவதில் மட்டும் நம்பிக்கை கொண்டதுதான் உண்டா? இல்லையே மெலிட்டஸ்!... நீங்களே பதில் சொல்ல மறுப்பதால் உங்களுக்கும் இந்த நீதிமன்றத்துக்கும் விளங்கும்படி இதோ நானே பதில் சொல்கிறேன்; அந்த மாதிரி ஒன்றை மட்டும் நம்பி இன்னென்றை நம்பாமல் யாரும் இருந்ததில்லை. இனி அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்:

தெய்வவாக்கு, தெய்வம் ஆவிர்ப்பவிப்பது ஆகியவற்றை நம்புகிற மனிதன் பூதங்கள், (யட்சயட்சிணிகள் போன்ற) குட்டித் தெய்வங்கள் ஆகியவற்றை நம்பாமல் இருக்க முடியுமா?

முடியாது.

நீதி மன்றத்தின் உதவியால் உங்கள் வாயிலிருந்தே பதிலை வரவழைத்து விட்டேனே; அதிர்ஷ்டசாலிதான் நான்; ஆனால் நீங்கள் என்மீது பழிசுமத்தி ஆணைவேறு இட்டிருக்கிறீர்கள். எப்படியோ நான் ஆத்மிக விஷயத்தில் நம்பிக்கையுடையவன் என்று தெரிகிறது. அப்படித்தானே உங்கள் வாக்குமூலத்தில் கூறி ஆணையிட்டிருக்கிறீர்கள்! அந்த மாதிரி தெய்வம் தேவாதிகளை நம்புகிறவனாக இருந்தால், பூதங்கள் (யட்ச யட்சிணிகள் போன்ற) குட்டித் தெய்வங்கள் இவற்றையும் நம்பாமல் நான் எப்படி இருக்க முடியும்? நிச்சயமாக அப்படி நம்பித்தானே ஆகவேண்டும்? ஆகவே நீங்கள் இப்போது பதில் சொல்லாதிருப்பதிலிருந்தே நான் சொல்வது சரி என்று தோன்றுகிறது. பூதங்கள், குட்டித் தெய்வங்கள் என்றால் என்ன? அவை தெய்வ வகையைச் சேர்ந்தவை அல்லது தெய்வங்களுக்குப் பிறந்தவைதானே?

ஆமாம்; நிச்சயமாக அப்படித்தான்.

இதைத்தான் நீங்கள் கண்டு பிடித்த வேடிக்கையான புதிர் என்று நான் சொல்லுகிறேன். பூதங்களோ அல்லது குட்டித் தெய்வங்களோ எல்லாம் கடவுள்கள்தாம்; எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாதென்று முதலில் கூறினீர்கள், கடவுள் நம்பிக்கையுடையவன் என்று பிறகு கூறுகிறீர்கள்—அதாவது குட்டித் தெய்வங்களில் எனக்கு நம்பிக்கையிருந்தால்—கடவுளின் குழந்தைகள் கடவுளல்ல என்று யார்தான் சொல்லுவார்கள்; என்மீது பழிசுமத்துவதற்காகவே மெலிட்டஸ் இப்படிக் கூறுகிறார்; என்னைக் குறை கூறுவதற்கு உண்மையான காரணங்கள் இல்லை; தெய்விகத் தன்மையிலும் மனிதனிலும் உயர்ந்த பொருள்கள் இருப்பதாக நம்புகிற ஒருவன், கடவுளும் குட்டித் தேவதைகளும் இருக்கிறதை நம்பவில்லை என்று சொல்வதை விஷயம் தெரிந்த ஒருவரும் நம்பமாட்டார்கள். மெலிட்டஸின் குற்றச் சாட்டுகளுக்குத் தகுந்த பதில் சொல்லியாகி விட்டது. இனி விரிவாகத் தற்காப்புக்கு வாதம் ஏதும் புரியத் தேவையில்லை. ஆனால் இதனால் என்மீது எவ்வளவு பகைமை ஏற்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அப்படி நான் அழிவதாக இருந்தால் அந்தப் பகையினால்தான் அழிவேன்; மெலிட்டஸோ அனிட்டஸோ அதற்குக் காரணமாக மாட்டார்கள். உலகத்தின்

பொறுமையும் வெறுப்பும்தான் காரணம்; அதனால் எத்தனையோ நல்லவர்கள் மடிந்திருக்கிறார்கள்; இன்னும் பலபேர் இறக்க நேரலாம். அப்படி மடிபவர்களில் நான்தான் கடைசியாக இருப்பேனோ என்பதுமில்லை.

**அவமானத்தைக்கண்டு அஞ்ச வேண்டுமே தவிர யாரும் சாவுக்கு அஞ்சக்கூடாது.**

"சாக்ரடீஸ்! இப்படி நடந்து கொண்டால் அகால மரணம் நேருமே உனக்கு; இது உனக்கே வெட்கமாக இல்லையா?" என்று நீங்கள் யாராவது கேட்கலாம். அவருக்கு நான் இதோ தெளிவாகப் பதில் சொல்லுகிறேன்: 'நீங்கள் எண்ணுவது தவறு. நல்ல மனிதன் எவனும் சாவைப் பற்றியோ வாழ்வைப்பற்றியோ எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது; தான் செய்யும் காரியம் சரியா, தவறா என்று மட்டுமே அவன் யோசித்துப் பார்க்க வேண்டும்; அதாவது ஒன்று நல்லவனாகவோ அல்லது கெட்டவனாகவோ அவன் நடந்து கொள்ள வேண்டும்.' ஆனால் உங்கள் கருத்துப்படி பார்த்தால், டிராய் நகரில் மடிந்த வீரர்கள் எதற்குமே தகுதியற்றவர்கள் என்று ஆகிவிடுமே! அவர்களில், 'மானமிழந்து வாழ்வதைவிட ஆபத்தில் சிக்கி வாழ்வது சிறந்தது' என்று கருதிய தெடிஸின் மகனை (அகில்லஸ்*) நீங்கள் வீரனாக மதிக்க மாட்டீர்கள் என்றுதான் ஆகிவிடும். அவன் ஹெக்டரைக் கொல்லத் துடித்தபோது அவனுடைய தெய்வத்தாய் (தெடிஸ்தேவி), "உன் தோழனை பட்ராக்ளஸை ஹெக்டர் கொன்றான் என்பதற்காக இப்படிப் பழிவாங்கினால் நீயும் சாக நேரும். ஹெக்டர் மடிந்ததும் விதி உன்னை இதே மாதிரி பழிவாங்கக் காத்திருக்கிறது" என்ற ரீதியில் எச்சரித்திருக்கிறாள். இவ்வளவு எச்சரித்தும் தெடிஸ் தேவியின் மகன் (அகில்லஸ்) ஆபத்தையும் சாவையும் பொருட்படுத்தவில்லை; அவற்றுக்கு அஞ்சவும் இல்லை. மானம் இழந்து வாழ்கிறோமே, நம் நண்பன் மடிந்ததற்குப் பழிவாங்காமல் இருக்கிறோமே என்றுதான்

---

* தெடிஸ்தேவியின் மகன். பட்ராகிளஸ் என்ற அவன் தோழன் டிராய் போருக்கு முன் ஹெக்டர் கையால் மாண்டான். டிராய் அரசனான பிரியம் என்பவனுடைய மகன் ஹெக்டர். ஹெக்டரைப் பழிவாங்க அகில்லஸ் அவனுடன் போர்புரிந்து அவனைக் கொன்றான்.

அஞ்சினான். "இப்போதே நான் சாகத்தயார்தான், இப்படி இங்கே (பகைவர் மரக்கலத்தைத் தாக்கிக் கொண்டிருக்கையில்) குத்தீட்டியுடன் நிற்கும் கப்பல்களுக்கு அருகில், ஊர்சிரிக்க, உலகத்துக்குப் பாரமாக நான் இருப்பதைவிட என் பகைவனைப் பழிவாங்கப் போய்ச் செத்தாலும் சாகிறேன்" என்கிறான். அகில்லஸ் தனக்குச்சாவோ அபாயமோ நேரிடுவதைப்பற்றிக் கவலைப் பட்டானா? மனிதன் என்றால் தனக்கென விதித்த இடத்தில்—அது தானே விரும்பி ஏற்றதாகவும் இருக்கலாம்; அல்லது தலைவன் கட்டளைப்படி ஏற்றதாகவும் இருக்கலாம்; எப்படியிருந்தாலும் சரி, ஆபத்தான சந்தர்ப்பத்தில் உறுதி தளராமல் அந்த இடத்தில்—நிற்க வேண்டும். அவமானம் நேருமே என்று கவலைப்பட வேண்டுமே தவிர, சாவு பற்றியோ, வேறு ஏதாவது நேருமென்றோ கவலைப்படக்கூடாது.

**போரில் சாவை எதிர்நோக்கியிருந்த சாக்ரடீஸ், தம் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டி நிபந்தனைகளுக்கு இடங்கொடார். சாவு என்பது நல்லதா தீயதா என்று தெரியாதிருக்கும்போது அப்படிச் செய்வானேன் என்றுதான் சொல்கிறார்.**

ஏதென்ஸ் வாசிகளே! இது சத்தியவாக்கு. பொடீதே, அம்பிபொலிஸ், டெலியம் ஆகிய இடங்களில் நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய படைத்தலைவர்கள் கட்டளையிட்டபோது நான் மற்ற எல்லாரையும் போலவே அவர்கள் குறித்த இடத்தில் சாகத் துணிந்து நின்றேன். அத்தகைய நான், இதோ ஆண்டவன் என்னையும் மற்றவர்களையும் தத்துவ ரீதியில் ஆராய்ந்து அறியும்படி கட்டளையிட்டிருப்பதாக நான் கருதும் நேரத்தில், சாவுக்கோ வேறெதற்கோ அஞ்சி நிலைகுலைவதென்றால் அது விநோதமாகத் தானே இருக்கும்? அறிவாளியாக இராதிருக்கையில் நான் ஏதோ அறிந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு சாவுக்கு அஞ்சித் தெய்வ வாக்கை மதியாமல் சும்மா இருந்திருந்தால், இப்படி நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டி நிறுத்துவது நியாயந்தான், சாவுக்கு அஞ்சுவதே, ஏதோ அறிந்துவிட்டதாக நாம் பாவித்துக் கொள்வதால்தான். நாம் சாவுக்கு அஞ்சுகிறோம். அறியஇயலாத ஒன்றை அறிந்துவிட்டதாக எண்ணிக்கொள்வது அறிவுடைமையாகாது; வெறும் பாசாங்கே

யாகும். மரணத்தைப்பற்றி எவரும் தெரிந்துகொள்ளமுடியாது. தங்களுக்கிருக்கும் பயம் காரணமாகச் சாவைப் பெருங்கேடாகக் கருதுகிறார்கள்; அது ஏன் பெருநன்மையாக இருக்கக்கூடாது?—இப்படி அறிவற்றுக் கிடப்பது அவமானம் அல்லவா?—அதுவும் தனக்குத் தெரியாத ஒன்றை மனிதன் தான் அறிந்திருப்பதாகக் காட்டிக்கொள்வது வெட்கக்கேடுதானே? இந்த ஒரு விஷயத்தில் தான் மற்றவர்கள் பொதுவாகஎண்ணுவதற்கு மாறான கருத்துக்கொண்டிருப்பதாக நான் நம்புகிறேன். அப்படிப் பார்க்கும்போது மற்றவர்களைவிட நான் அறிவாளி என்றுகூட சொல்லிக்கொள்ளலாம். கீழே உள்ள உலகத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதிருக்கும் போது, அப்படித் தெரிந்துகொண்டதாக நான் பாவிப்பதற்கில்லை; ஆயினும், 'மேலோருக்கு—அவர்கள் தெய்வமாக இருந்தாலும் சரி, மனிதர்களாக இருந்தாலும் சரி—அநீதி இழைப்பதோ அவர்கள் சொல்லை மீறி நடப்பதோ பாவம்; அவமானம்' என்பது எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது. ஏதாவது ஒரு நன்மை ஏற்படக்கூடும் என்றால், அதற்கு அஞ்சி அப்படி நேராமல், பார்த்துக்கொள்பவன் நான். நீங்கள் என்மேல் குற்றவாளி என்று வழக்குத் தொடுத்திருப்பதால் (ஏதென்ஸ் நகரச் சட்டப்படி) எனக்கு மரணதண்டனை விதிக்கவேண்டும் என்கிறார் அனிட்டஸ். (இல்லாவிட்டால் என் மேல் வழக்குத் தொடுத்திருக்க வேண்டாமே!) அவர் சொல்வது உங்களுக்குச் சம்மதமில்லை என்று என்னை இப்போது விட்டுவிட்டீர்களானால், இப்போது தண்டனை பெறாமல் நான் தப்பிவிட்டேனானால், உங்கள் பிள்ளைகள் என் பேச்சைக் கேட்டுக் கெட்டுவிடுவார்கள், ஜாக்கிரதை!

**எப்போதும் தத்துவ விசாரணை செய்பவராகவே சாக்ரடீஸ் இருந்தாக வேண்டும்.**

"சாக்ரடீஸ்! இந்தத் தடவை அனிட்டஸ் சொல்வதை நாங்கள் மதிக்கவில்லை; ஆனால் ஒரு நிபந்தனையின்மேல் உங்களை விட்டுவிடுகிறோம். இனி இப்படியெல்லாம் (தத்துவ) விசாரணையில் ஈடுபடக்கூடாது. அப்படிச் செய்தால் மரணதண்டனை விதிப்போம்" என்று நீங்கள் சொன்னால் நான் என்ன பதில் கூறுவேன், தெரியுமா? "ஏதென்ஸ் வாசிகளே! உங்களிடம் எனக்கு மதிப்பும்

அன்பும் உண்டு; ஆனாலும் ஆண்டவன் கட்டளைக்குப் பணிந்து நடப்பேனே தவிர உங்கள் உத்தரவுக்குப் பணியமாட்டேன்" என்றுதான் கூறுவேன். உயிரும் வலிவும் இருக்கும் வரையில் இந்தத் தத்துவ விசார முறையையும் இப்படிப் போதிப்பதையும் நான் நிறுத்தப்போவதில்லை, ஒவ்வொருவரையும் கண்டு எனக்கு இயல்பான முறையில் இப்படிக் கேட்பேன்: 'பெருமையும் வலிமையும் அறிவும் பொருந்திய ஏதென்ஸ் நகரில் வாழும் குடிமகனே! ஞானம், சத்தியம், இவைகளைப்பற்றி, ஆத்ம விசாரத்தால் உன்னை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதைப் பற்றித் துளியும் கவலை இல்லாமல், பணத்தையும் புகழையும் சேர்த்துக்கொண்டிருக்கிறாயே?' என்றுதான் கேட்பேன். அவன் அதற்குப் பதிலளிக்கும் முறையில் "நான் இவைகளை மதித்துத்தானே நடக்கிறேன்?" என்றால், அவனை அதோடு விட்டுவிடுவதில்லை, குறுக்குக்கேள்வி கேட்டு விசாரித்துப் பரீட்சிக்கத் தொடங்கிவிடுகிறேன். 'தன்னிடம் ஏதோ நல்லது இருப்பதாக இவன் சொல்லிக்கொள்கிறானே தவிர இவனிடம் அப்படியொன்றும் இல்லையே!' என்று எனக்குப் பட்டுவிட்டால், "இப்படி மதிப்பற்ற விஷயத்தைப் பெரிதாக எண்ணி, மதிப்புள்ளதைக் குறைவாகக்கருதுகிறாயே!" என்று கண்டித்துக் கேட்கிறேன்.

**இப்படித்தான் செய்தாக வேண்டும்; 'நான் கடவுளின் ஆணைக்கு அடங்கியாக வேண்டும்.'**

நான் காணப்போகும் ஒவ்வொருவரையும்—அவர்கள் வாலிபர்களாக இருந்தாலும் சரி, வயோதிகர்களாக இருந்தாலும் சரி, இப்படித்தான் கேட்பேன், அவர்களிலும் முக்கியமாக நம் ஊராரையே இப்படி விசாரிக்கிறேன்; நம் ஊரார் என்றால் என் உடன் பிறந்தவர்கள் மாதிரி யல்லவா; ஏன் இப்படிக் கேட்கிறேன் தெரியுமா? ஆண்டவன் கட்டளை இது. என் தெய்வ சேவையைவிட வேறெந்த நல்ல விஷயமும் இந்த நாட்டில் நிகழ்ந்துவிடவில்லை. வாலிபர்கள், முதியவர்கள் இப்படி எல்லாரிடமும் நான், "உங்கள் சொந்த நலனைப்பற்றியோ, சொத்துக்களைப்பற்றியோ எண்ணிக் கொண்டிராதீர்கள்! முதல்முதலாக, முக்கியமாக உங்கள் ஆத்மிக முன்னேற்றத்தைக் கவனியுங்கள்; அதுவே மகத்தானது" என்று

தான் சொல்லிவருகிறேன். செல்வத்தால் நல்லொழுக்கம் தோன்றி விடாது; நல்லொழுக்கத்தால்தான் பொதுவாழ்விலும் தனிவாழ்வி லும் செல்வம், மனிதருக்குரிய பிறநலன் எல்லாம் தோன்றும். இதைத்தான் நான் போதிக்கிறேன். இந்தக் கொள்கை வாலிபர் களைக் கெடுப்பதாக இருந்தால், நான் விஷமக்காரன்தான்; ஆனால் இப்படியெல்லாம் நான் போதிக்கவில்லை; யாராவது அப்படிச் சொன்னால் அதுதான் பொய். ஆகவே, ஏதென்ஸ்வாசிகளே, உங்களுக்கு நான் சொல்வது இதுதான்: ஒன்று அனிட்டஸ் சொல்கிறபடி செய்யுங்கள்; அல்லது அதற்கு மாறாக முடிவு செய் யுங்கள். அதாவது, என்னை விடுவிக்காதிருங்கள், அல்லது விடுவி யுங்கள்—எப்படிச் செய்தாலும் சரி, நான் என் போக்கை மாற்றிக் கொள்ளப்போவதில்லை; இதற்காகப் பலமுறை சாக வேண்டி யிருந்தாலும் சரி, இதை நான் மாற்றிக்கொள்ளப் போவதில்லை; இதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**நீங்களோ அல்லது மெலிட்டஸோ யாருமே எனக்குத் தீங்கு செய்ய முடியாது.**

ஏதென்ஸ் வாசிகளே! குறுக்கிடாமல் நான் சொல்வதைக் கேளுங்கள்: நான் சொல்லி முடிக்கும் வரையில் அப்படிக் கேட் பதாக ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள், இன்னும் சில விஷயம் சொல்ல வேண்டும். அவற்றைக் கேட்டால் நீங்கள்...... ஆனால், நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேளுங்கள். உங் கள் நன்மைக்காகத்தான் இப்படிச் சொல்கிறேன். ஆகவே கூவி ஆரவாரம் செய்யாதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒன்று தெரிந்துகொள்ளுங்கள்: என்னைப் போன்ற ஒருவனைக் கொன்றால். என்னைவிட உங்களுக்குத்தான் அது பெருந்தீங்காக முடியும். என்னை அது அவ்வளவாகப் பாதிக்காது. மெலிட்டஸ், அனிட்டஸ் இவர்களால் எனக்குத் தீங்கு விளைவிக்க முடியாது. ஏனென்றால் தீயவன் தன்னைவிட நேர்மையானவனைக் கொல்லும்படி யாரும் அநுமதிக்கமாட்டார்கள். என்னைப் போன்றவனை அனிட்டஸ் கொல்லலாம்; நாடு கடத்தலாம்; எனக்கு பிரஜா உரிமைகள் இல்லாதபடி செய்துவிடலாம். அவரும் சரி, மற்றவர்களும் சரி, என்னைப் போன்றவர்களுக்குப் பெருந்தீங்கு விளைத்துவிட்டதாக

எண்ணிக் கொள்ளலாம்; ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. அனிட்டஸ் செய்வது போல் தீமை புரிவது—மற்றொருவனுடைய உயிரை அநியாயமாகப் போக்குவது—மிகப் பெருந் தீங்காகும்.

'ஏதென்ஸ் மக்களைத் தூண்டி அவர்கள் சுறுசுறுப்பாக
இருக்கும்படி செய்வதற்காக ஆண்டவன் அருளிய மாட்டு ஈ நான்.
என்னைக் கொன்று விட்டால் மறுபடியும் அப்படி ஓர் ஈ கிடைக்காது.

ஏதென்ஸ் வாசிகளே! என்னைக் காத்துக் கொள்ள நான் வாதாடுவதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம், அப்படியல்ல; உங்களுக்காகத்தான் நான் வாதாடுகிறேன். என்னைத் தண்டித்தால், அது ஆண்டவனுக்கே தீங்கு இழைப்பதாகுமே, பெரும் பாவமாயிற்றே என்றுதான் சொல்கிறேன். ஆண்டவன் உங்களுக்கு அளித்துதவிய அரும்பொருள் நான். என்னைக் கொன்றுவிட்டால் எளிதில் என்னைப்போல் ஒருவன் கிட்டமாட்டான்; ஆண்டவன் இந்த (நாட்டுக்கு) அரசாங்கத்துக்கு அளித்த மாட்டு ஈ என்று கூடச் சொல்வேன், இப்படிப் பேசுகிறேனே என்று நீங்கள் நகைக்கலாம். அரசாங்கம் என்பது உயர்ந்தவகையைச் சேர்ந்த பெரிய குதிரை மாதிரி. இப்படி உருவம் பெரிதாக இருப்பதால் அது நிதானமாகச் செல்லும். அப்போது அதற்கு உணர்வூட்டித் தூண்டவேண்டியிருக்கும். அரசாங்கம் என்ற குதிரையைக் கடித்து விரைவாகச் செல்லத் தூண்டும் உண்ணி நான். எப்போதும் நாள் முழுவதும் உங்களோடு கெட்டியாக ஒட்டிக் கொண்டு உங்களை விழிப்போடு இருக்கும்படி செய்து, என்ன, என்ன செய்யவேண்டுமென்று சொல்லி வருகிறேன், இவையெல்லாம் தகாது என்று கண்டிக்கிறேன். உங்களுக்கு என்னைப்போன்ற ஒருவன் எளிதில் கிடைக்கமாட்டான். ஆகவேதான் என்னைவிட்டு வைக்கும்படி சொல்கிறேன். இவ்விதம் சொல்கிறேனே என்று உங்களுக்கும் (தூக்கத்திலிருந்து திடீரென்று எழுப்பிய ஒருவனைப்போல்) ஆத்திரம் வரலாம். அனிட்டஸ் சொல்வதுபோல் எளிதில் என்னைச் சாக அடித்து மீதி வாழ்நாளெல்லாம் (நிம்மதியாகத்) தூங்கலாம் என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கலாம்—உங்கள் மேல் தனக்கு இருக்கிற அக்கறையில் அந்தமாதிரி மற்றோர் உண்ணியை ஆண்டவன் அனுப்பாதவரையில் இப்படி இருக்கலாம்! 'ஆண்டவன் உங்களுக்காகவே என்னை அளித்திருக்கிறான்' என்று

சொல்கிறேனே, அதற்கு ஆதாரம் வேண்டுமா? மற்றவர்களைப் போல் நான் இருந்திருந்தால்—இத்தனை ஆண்டுகளாக என் சொந்த அலுவல்களைக் கவனிக்காமலோ, அவை வீணாவதைப் பொறுமையோடு பார்த்துக்கொண்டோ இருக்கமாட்டேன்; தந்தையைப் போலவும் தமையனைப் போலவும் உங்கள் ஒவ்வொருவரிடமும் வந்து நல்லொழுக்கத்தை மதித்து வரவேண்டுமென்றெல்லாம் சொல்லியிருப்பேனா? இந்தமாதிரி நடந்துகொள்வது சாதாரண மனிதர்களுக்கு இயல்பு அல்ல. இதனால் எனக்கு ஏதாவது லாபம் இருந்திருந்தால், என் பேச்சுக்கு ஏற்ற ஊதியம் எனக்குக் கிடைத்திருந்தால் நான் இப்படிப் பேசுவதில் அர்த்தம் உண்டு (பேசக் காரணம் உண்டு) என்று சொல்லலாம். இதோ என்மேல் இப்படிப் பிடிவாதமாகக் குற்றஞ் சாட்டி யிருக்கிறார்களே, இவர்கள்கூட நான் யாரிடமிருந்தேனும் பணம் வாங்கிக்கொண்டதாகவோ, யாருக்கேனும் பணம் கொடுத்ததாகவோ சொல்லத் துணியவில்லை. அப்படிச் சாட்சி சொல்ல யாரேனும் இருந்தால்தானே? நான் சொல்வது உண்மை என்பதற்கு என் வறுமையே போதுமான சான்றாகும்.

**அவரது அந்தராத்மா அரசியலில் அவர் ஈடுபடக்கூடாது என்று அறிவித்தது. அப்படி ஈடுபட்டிருந்தால் என்றோ அழிந்திருப்பார்.**

யாரேனும், "ஏன் இப்படி நீங்கள் தனித்தனியாகப் பிறருக்குப் புத்தி கூறவேண்டும்? மற்றவர்கள் விஷயத்தில் உங்களுக்கு ஏன் இந்த அக்கறை? ஏன் நீங்கள் பொதுவிடத்தில் வந்து அரசாங்கத்துக்குப் புத்தி சொல்லக்கூடாது?" என்று கேட்கலாம். அதற்கும் பதில் சொல்கிறேன். பல சந்தர்ப்பங்களில், பல இடங்களில், "எனக்குத் தெய்வ வாக்கு புலப்படுவது உண்டு" என்று சொல்லியிருக்கிறேன்; இதைநீங்கள் கேட்டிருக்கலாம். இந்தத் தெய்விகத் தன்மையைத்தான் மெலிட்டஸ் தம் குற்றச்சாட்டில் கேலி செய்திருக்கிறார். இந்தத் தெய்வ வாக்கு நான் குழந்தையாக இருந்தபோது முதல் முதல் தோன்றியது. நான் ஏதாவது செய்யப்போனால், இது கூடாது என்று தெய்வ வாக்குத் தடுக்குமேயொழிய இதைச் செய் என்று அது கட்டளையிட்டதில்லை. இதனால்தான் நான் அரசியல் வாதியாகாமல் இருக்கிறேன். அது சரியான முடிவுதான் என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஏதென்ஸ் வாசிகளே! நான் மட்டும்

அரசியலில் ஈடுபட்டிருந்தால், நிச்சயமாக என்றைக்கோ அழிந்து போயிருப்பேன். அதனால் உங்களுக்கோ எனக்கோ ஒரு நன்மையும் ஏற்பட்டிருக்காது. இப்படி உண்மையைச் சொல்லுகிறேன் என்று என்மேல் கோபங்கொள்ள வேண்டாம். நேர்மையைக் கடைப்பிடித்து அரசாங்கத்தில் நடக்கும் பல அநீதிகளையும் அதர்மச் செயல்களையும் எதிர்த்து நிற்பவன், உங்களுடனே பிறமக்களுடனே சண்டையிட்டுக்கொண்டு தன் உயிரைக் காப்பாற்ற முயற்சிக்கமாட்டான். இதுதான் உண்மை. நேர்மைக்காகப் போராடுபவன், தான் சிறிது காலமே வாழ்வதாக இருந்தாலும் தனிப்பட்ட ஓர் அந்தஸ்தே (இடமே) அவனுக்கு வேண்டும். அம்பலம் அவனுக்கு வேண்டாம்.

**முப்பதுபேர் கொண்ட கொடுங்கோலாட்சியில் படைத்தலைவர்களை விசாரணை செய்தபோது அவர்களுக்கு அநீதி செய்வதைவிடத் தாம் விரைவில் சாகத் தயாராயிருந்ததை எடுத்துக்காட்டுகிறார்.**

நான் சொல்வதற்குப் பொருத்தமான சான்று காட்டுகிறேன். வெறும் வாய்ச்சொல்லை மட்டும் காட்டவில்லை; அதையும்விட உயர்வாக நீங்கள் மதிக்கும் செயலையுந்தான் குறிப்பிடுகிறேன். என் சொந்த வாழ்விலிருந்தே ஒரு பகுதியை எடுத்துச் சொல்கிறேன். நான் சாவுக்குப் பயந்து அநீதிக்குப் பணிந்துவிடக் கூடாது என்பது அதிலிருந்தே தெரியும். அப்படிப் பணிய மறுத்ததால் நான் உடனே செத்திருக்க வேண்டியதுதானே? அப்போது நீதி ஸ்தலத்தில் நடந்த ஒருவிஷயத்தைச் சொல்கிறேன், கேளுங்கள்: ஒருவேளை அது அவ்வளவு சுவாரஸ்யமாக இல்லாமலிருக்கலாம். இருந்தாலும் அது உண்மை வரலாறு. ஏதென்ஸ் மக்களே! அரசாங்கத்தில் நான் வகித்த ஒரே பதவி மேல்சபை (செனட்டர்) அங்கத்தினனாக இருந்ததுதான். நான் **ஆண்டியோகிஸ்** மரபைச் சேர்ந்தவன். **ஆர்க்கினூஸே*** போர் முடிந்ததும்

---

* ஆர்க்கினூஸே தீவுகளுக்கருகில் நடந்த கடற்போரில் ஏதினியர்கள் ஸ்பார்ட்டன் வீரர்களை முடியடித்தனர். பருவநிலை சரியாக இராததனால் சில ஏதினியக் கப்பல்கள் மூழ்கிவிட்டன; அவற்றில் இருந்தவர்களை மீட்க முடியவில்லை. 'இதைப்பார்த்துக் கொண்டிருந்து சும்மா இருந்தீர்களா?' என்று ஏதினியப் படைத்தலைவர்களைப் பழித்து அவர்களை விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள். விசாரணை முடிவில் ஆறு படைத்தலைவர்களுக்குச் சிரச்சேத தண்டனை என்று தீர்ப்பாயிற்று; அதை நிறைவேற்றியும் முடித்தார்கள் ஏதென்ஸ் வாசிகள்.

அதில் மடிந்தவர்களுடைய சவங்களை எடுத்து வராததால் படைத் தலைவர்களை விசாரணைக்குக் கொண்டுவந்தார்கள். நீங்கள் அந்தப் படைத்தலைவர்களை மொத்தமாக நிறுத்தி விசாரணை செய்ய வேண்டும் என்று சொன்னீர்கள். அது சட்டத்துக்கே முரணானது; பிறகுதான் உங்களுக்கும் அது இப்படி முரண்தான் என்று தெரிந்தது. ஆனால் அப்போது நான் ஒருவன் மாத்திரம்தான், (ஐம்பது பேர் கொண்ட) பிரிதனேஸ்* (என்ற நிர்வாக) சபையில், 'இது சட்டத்துக்கே முரண் என்று வாதித்து உங்களுக்கு எதிராக என் வாக்கைப் பிரயோகித்தேன்; (சொல்வன்மை மிகுந்த) சொற்பொழிவாளர்கள் என்னைக் குற்றவாளியாக நிறுத்திச் சிறை (கைது) செய்வோம் என்று பயமுறுத்திப் பார்த்தார்கள். நீங்களும் கூச்சல் போட்டு ஆரவாரம்செய்தீர்கள். அப்போதே நான், 'நம் பக்கம் சட்டமும் நீதியும் இருக்க, சிறைவாசத்துக்கும் சாவுக்கும் அஞ்சி அநீதியான செயலில் பங்கு கொள்வதாவது!' என்று துணிவோடு இருந்தேன். இது நடந்தது (பழைய) ஜனநாயக ஆட்சிக்காலத்தில். (பின்னல்) முப்பதுபேர்† கொண்ட ஆலிகார்க்கி சபையார் அதிகாரத்தில் இருந்த நாளில், அவர்கள் என்னையும் இன்னும் நாலு பேரையும் ரொடெண்டா (என்ற வட்டவடிவமுள்ள அரசாங்கக்) கட்டடத்துக்குள் வரவழைத்து, ஸலாமிஸ் பிரதேசத்தைச் சேர்ந்த லியான் என்பவனை அழைத்து வரச் சொன்னார்கள்; அவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்பது அவர்கள் எண்ணம். தாங்கள் செய்யும் கொடுமைகளில் எத்தனைபேரைச் சேர்க்கலாம் என்றுதான் அவர்கள் முயன்றார்கள். நான் அப்போது வாய்ச் சொல்லால் அல்லாமல், செயலால், 'சாவு வெறும் துரும்புக்குச் சமானம். நான் அதற்கு அஞ்சவில்லை, அதர்மம், பாபம் இவற்றில் ஈடுபடாதபடி பார்த்துக்கொள்வதே முக்கியம்' என்று தெரியும்படி நடந்துகொண்டேன். வலிமை மிகுந்த அந்த அடக்குமுறை ஆட்

---

* 50 பேர் கொண்ட ஒருசபை. இது ஒரு மாதகாலம் ராஜாங்க சபையின் நிர்வாகத்தை ஏற்று நடத்தி வந்தது.

† ஸ்பார்ட்டா நாடும் பெர்ஷியாவும் சேர்ந்து ஏதென்ஸை முறியடித்தன; (கி. மு. 411-இல்) அப்போது ஒரு புரட்சி மூண்டு 30 சர்வாதிகாரிகள் (இவர்களைக் ' கொடுங்கோலர்கள் ' என்பது வழக்கம்) சிறிது காலம் ஆட்சி புரிந்தனர்.

சிக்கு அஞ்சி நான் தவறு இழைத்துவிடவில்லை. நாங்கள் ரொடெண்டாவிலிருந்து வெளியே வந்தோம். மற்ற நான்குபேரும் ஸலாமிஸ் பிரதேசம் போய் லியான் என்பவனை அழைத்து வந்தார்கள். நான் நேராக வீடு வந்து சேர்ந்தேன். விரைவிலேயே அந்த முப்பது பேரின் கூட்டாட்சி முடிவுக்கு வந்தது. இல்லாவிட்டால், அவர்கள் உத்தரவை மீறியதற்காக நான் உயிரையே இழந்திருப்பேன். நான் சொல்வது உண்மைதான் என்பதற்கு அநேக சாட்சிகள் இருக்கிறார்கள்.

ஊராரோடு எப்பொழுதும் தாம் பேசிவந்தாலும் யாருக்கும் ஒன்றும் போதித்து விடவில்லை என்றும் பணமும் வாங்குவதில்லை ; ரகசியம் ஏதும் தன்னிடம் இல்லை என்றும் கூறுகிறார்.

நான் பொதுவாழ்வில் ஈடுபட்டு, எப்போதும் போல் நேர்மை, நீதி இவற்றையே கடைப்பிடித்து நல்லவனாக வாழ்ந்திருந்தால்—அதுதானே நல்லவனுக்கு அவசியம்?—இத்தனை ஆண்டுகளாக நான் தப்பிப் பிழைத்திருக்க முடியுமா? ஏதென்ஸ் வாசிகளே! நானாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, அந்த நிலையில் நெடுங்காலம் வாழ்ந்திருக்கவே முடியாது. ஆனால் நான் எந்தக் காரியம் செய்தாலும்—அது பொதுப்பணியாக இருப்பினும் சரி, தனிப்பட்ட செயலாக இருப்பினும் சரி—ஒரேமாதிரிதான் நடந்துகொண்டிருக்கிறேன், இப்போது என் 'சிஷ்யர்'கள் என்பதாக (தோன்றியபடியெல்லாம் என்னை இழிவுபடுத்த வேண்டி) சிலரைக் குறிப்பிடுகிறார்களே, அந்தச் 'சிஷ்யர்'களோ மற்றவர்களோ, கண்டதையும் (இழிசெயல் ஏதேனும்) செய்யச் சொன்னால் அப்படிச் செய்கிறவனும் அல்ல நான். எனக்கு முறையான சிஷ்யர்கள் இல்லாமலில்லை. ஆனால் நான் சர்ச்சை செய்யும்போது யார் வந்தாலும்—அவர் வாலிபரானாலும் சரி, வயோதிகரானாலும் சரி—வரவேண்டாம் என்று விலக்குவதில்லை. பணம் கொடுக்கக் கூடியவர்களிடம் மட்டுந்தான் பேசிப் பழகுகிறேனே என்றால் அதுவும் இல்லை; ஏழையாக இருந்தாலும் சரி, செல்வனாக இருந்தாலும் சரி, அவர்கள் என்னிடம் எதைப்பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம்; நான் கேட்பதற்குப் பதில் சொல்லலாம். நான் சொல்வதையும் கேட்டுவிட்டுப் போகலாம். அப்புறம் அவர் கெட்டவராகவோ

நல்லவராகவோ நடந்துகொண்டால் அதற்கு நான் பொறுப்பாளி என்று சொல்வதற்குமில்லை. ஏனென்றால், அப்படி வந்தவருக்கு நான் எதுவும் போதித்ததுமில்லை; போதிப்பதாகச் சொல்லிக் கொண்டதுமில்லை. அவ்விதம் எவரேனும், என்னிடமிருந்து உலகம் இதுவரை கேட்டிராத ஒன்றைத் தனிமையில் நான் அவருக்கு உபதேசித்ததாகவோ என்னிடமிருந்து கேட்டதாகவோ சொன்னால், அவர் பொய் சொல்லுகிறார் என்று தெரிந்துகொள்ளுங்கள்.

**தாம் யாரைக் கெடுத்து விட்டதாகக் குற்றம் சாட்டுகிறார்களோ அவர்களுடைய பெற்றோரும் தமக்கு எதிராகச் சாட்சியம் சொல்ல வராததைக் குறிப்பிடுகிறார்.**

"உங்களுடன் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதில் மக்கள் ஏன் சந்தோஷப்படுகிறார்கள்?" என்று நீங்கள் கேட்கலாம். ஏதென்ஸ் வாசிகளே! நான்தான் ஏற்கனவே இதைப்பற்றிய உண்மை முழுவதையும் சொல்லிவிட்டேன். என் பேச்சைக் கேட்டு விட்டுப் போகிறவர்கள், அறிவாளிகள் என்று கூறிக்கொள்பவரைக் (என்னைப் போலவே விசாரித்து) குறுக்குக் கேள்வி கேட்டு. மடக்கத் தொடங்கிவிடுகிறார்கள் அது அவர்களுக்குப் பொழுதுபோக்காக இருக்கிறது. இப்படிக் குறுக்குக் கேள்வி கேட்டு விசாரிக்கும் கடமையை, ஆண்டவன் எனக்கு விதித்திருக்கிறான்; தெய்வ வாக்கு, கனவு ஆகியவை மூலம் தெய்வசக்தி எந்தவிதமெல்லாம் வெளிப்பட முடியுமோ அந்த விதத்திலிருந்தெல்லாம், 'ஆண்டவன் ஆணை இது' என்று தெரிந்துகொண்டேன். இது சத்தியம். ஏதென்ஸ் வாசிகளே! அப்படி இல்லையென்றால், இதை உடனே மறுத்துவிட முடிந்திருக்கும். வாலிபர்களைக் கெடுக்கிறேன் என்றால்,—என் வார்த்தையைக் கேட்ட அவர்களில் பலர், இன்று முதியவர்களாகி விட்டார்கள்; அவர்கள் வாலிபர்களாக இருந்தபோது அவர்களுக்கு நான் துர்ப்போதனை செய்தேன் என்பதை இப்போது தெரிந்து கொண்டு என்மேல் குற்றஞ்சாட்டிப் பழி தீர்த்துக்கொள்ள முன் வந்திருக்கமாட்டார்களா? அப்படி அவர்களே முன்வர விரும்பா விட்டாலும், அவர்களுடைய உறவினர்கள், தாய்தந்தையர் அல்லது பிற சுற்றத்தாரேனும் வந்து என்னால் அவர்களின் குடும்பத்துக்கு எவ்வளவு தீங்கு நேர்ந்தது என்று சொல்லியிருக்க மாட்டார்களா?

இதுதான் அவர்களுக்கு ஏற்ற சந்தர்ப்பம். அவர்களில் பலர் இதோ நீதிமன்றத்தில் இருக்கிருர்கள். இதோ **கிரிட்டோ** இருக் கிருர். அவருக்கும் என் வயதே ஆகிறது. நானும் அவரும் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள். இதோ அவருடைய மகன் **கிரிடோ புலஸ்** இருக்கிருர். அதோ ஸ்பெட்டஸ் பிரதேசத்தைச் சேர்ந்த ஈஷினஸின் தந்தை **லையானியஸ¤ம்** இருக்கிருர். இன்னும் ஸெபியஸ் பிரதேசத்தைச் சேர்ந்த எபிக்னெஸின் தந்தை **ஆண்டி போன்** இருக்கிருர்; என்னேடு பழகியவர்கள் பலருடைய உடன் பிறந்தவர்கள் வேறு இருக்கிருர்கள். அதோ தியோஸ்டோடி டஸின் மகன் **ரிகோஸ்ட்ராடஸ்** இருக்கிருர்; தியோடோடஸின் சகோதரன் அவர்: (தியோடோடஸ் இறந்துவிட்டார்; எனவே நிகோஸ்ட்ராட ஸைத் தடுத்து நிறுத்தமுடியாது.) டெமோடோகஸின் மகன் **பராலஸ்** இருக்கிருர் இதோ. அவருக்குத் தியாகஸ் என்று ஒரு சகோதரர் இருந்தார். அரிஸ்டோனின் மகன் **அடிமாண்டஸ¤ம்** அவருடைய சகோதரன் **பிளேட்டோவும்** இதோ இருக்கிருர்கள். அபோலோ டோரஸின் சகோதரன் **ஈண்டோடோரஸ¤ம்** இதோ நிற்பது தெரிகிறது. இன்னும் பலபேரைக் குறிப்பிடமுடியும். என்மீது குற்றம் சுமத்தும் மெலிட்டஸ் இவர்களில் சிலரை அவ ருடைய சாட்சிகளாக அழைத்திருக்கலாமே! அப்படி மறந்திருந்தால் இப்போதும் தாராளமாக அழைக்கலாமே. நான் தடை செய்ய வில்லை! எந்தச் சாட்சியையேனும் தருவிக்க முடியுமானல் கூறட் டுமே! ஏதென்ஸ் வாசிகளே! உண்மை இவர் சொல்வதற்கு மாருக இருக்கிறது. அதுதான் விஷயம். ஏனென்ருல், மெலிட்டஸ், அனிட்டஸ் ஆகியோரால், 'கலைப்பவன்,' 'இவர்கள் குடும்பத்தைக் கெடுப்பவன்' என்றெல்லாம் என்மீது குற்றம் சுமத்தப்படுகிற என் சார்பாக இதோ இவர்களெல்லாம் சாட்சி சொல்லத் தயாராக இருக்கிருர்கள்; நான் 'கெடுத்துவிட்ட' இந்த வாலிபர்கள் மட்டுமா சாட்சி சொல்லத் தயாராக இருக்கிருர்கள்?—இவர்கள் சொல்வதற்காவது காரணம் இருக்கலாம்—இவர்களுடைய வயதான உறவினர்களை யாரும் கெடுக்கவில்லையே; அவர்களுந்தான் என் சார்பாகச் சாட்சி சொல்லத் தயாராயிருக்கிருர்கள். என் பக்கமாக அவர்கள் இப்படிச் சாட்சி சொல்வதற்குக் காரணமென்ன தெரியுமா? நான், சத்தியம், நீதி இவற்றுக்காகப் பேசுகிறேன்

என்றும், மெலிட்டஸ்தான் பொய்யர் என்றும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

'நான் சதையினுலும் ரத்தத்தினுலும் ஆக்கப்பட்ட மனிதன்,
ஆனுல் நீதிபதிகளின் தயவைக்கோரி நிற்கமாட்டேன்;
முன்னெல்லாம் அடிக்கடி அழுது ஆர்பாட்டம் செய்வார்களே
அந்த மாதிரி அலங்கோலம் செய்து ஊரைக் கூட்டமாட்டேன்' என்கிருர்.

ஏதென்ஸ் மக்களே! என் தற்காப்பாக—என் சார்பாக—நான் பேசக்கூடியது இவ்வளவுதான். இன்னும் ஒரே ஒரு வார்த்தை. இங்கே யாருக்காவது என்மீது கோபமிருக்கலாம். இதேமாதிரி நிலையிலோ, இதைவிடச் சற்று ஆபத்தில்லாத நிலையிலோ அவர் இருந்திருக்கலாம்; அப்போது தாம் அழுது கண்ணீர் வடித்து நீதிபதிகளைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதும், உறவினர், நண்பர் முதலியவர்களுடன் வந்து தம் குழந்தைகளையும் நீதி மன்றத்தில் கொண்டு நிறுத்தியதும், (மிகவும் உருக்கமான காட்சிதான்) அவருக்கு இப்போது நினைவுக்கு வரலாம்; நானே, என் உயிருக்கே ஆபத்து நேரலாம் என்ற நிலையிலும் அவரைப் போலச் செய்யாமல் சும்மா இருக்கிறேன். அவர் அன்று நடந்துகொண்ட விதத்தையும், நான் இப்போது நடந்துகொள்கிற விதத்தையும் மனத்துக்குள்ளேயே ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டால் அவருக்கு என்மேல் ஆத்திரம் வரலாம். இதனுல் என்மேல் வெறுப்பும் மூளலாம் அவருக்கு. அப்படிப்பட்டவர் ஆத்திரத்தில் எனக்கு எதிராகப் பேசக்கூடும். இப்போது உங்களிடையே அந்த மாதிரி எவரேனும் ஒருவர் இருந்தால்—இருக்கிருர்கள் என்று நான் சொல்லவில்லை—அவருக்கு நான் இதோ தெளிவாகப் பதில் அளிக்கத் தயார்: "நண்பா! நானும் மற்றவர்களைப் போல ஒரு மனிதன்தான் ரத்தமும் மாமிசமும் சேர்ந்து உருவான ஜீவன்தான். ஹோமர் சொல்வதுபோல், 'மரத்தாலோ கல்லாலோ செய்து வைத்த' படைப்பு அல்ல. எனக்கும் ஒரு குடும்பம் இருக்கிறது: ஆமாம், ஏதென்ஸ்வாசிகளே, மூன்றுபுதல்வர்கள் இருக்கிருர்கள். அவர்களில் ஒருவன் வயது வந்த ஆண்மகன்; மற்ற இரண்டுபேரும் சிறுவர்கள்; ஆயினும் என்னை விடுவிக்க வேண்டுமென்று கெஞ்சுவதற்காக அவர்களை இங்கே அழைத்து வரவேமாட்டேன். 'அழைத்து வந்தால் என்ன?' உங்களிடம் மதிப்பில்லாமலோ அல்லது என்

னுடைய செருக்கினுலோ அல்ல. சாவு என்ருல் எனக்குப் பயமாக இருக்கிறதா இல்லையா என்பது வேறு கேள்வி. அதைப்பற்றி இப்போது பேசப்போவதில்லை. ஆனுல், பொதுவாகக் கவனித்தால், அந்தமாதிரி நான் நடந்துகொள்வது எனக்கும், உங்களுக்கும், நாடு முழுவதற்குமே இழுக்காகும். என்னைப்போல் வயதான ஒருவன், அறிஞன் என்று பெயர் எடுத்தவன், தன்னை இவ்வளவு தூரம் இழிவாக்கிக் கொள்ளக்கூடாது. இப்படி என்னைப் பற்றி எண்ணுவது தகுதியோ இல்லையோ, 'சாக்ரடீஸ் மற்றவர்களைவிடச் சில விஷயங்களில் உயர்வானவன்' என்று உலகம் தீர்மானித்திருக் கிறது. உங்களில் சிலரை அறிவிலும், தீரத்திலும், பிற நல்லொ ழுக்கங்களிலும் சிறந்தவர்கள் என்று சொல்கிருர்கள். அவர்கள் தங்களை இழிவாக்கிக் கொண்டால் எவ்வளவு வெட்கக்கேடு! மதிப்பு வாய்ந்த சிலர், இதுபோன்ற தண்டனை கிட்டும் என்ற சந்தர்ப்பத்தில் விநோதமாக நடந்துகொண்டதை நான் கண்டிருக் கிறேன். சாவு என்பது விபரீதமான ஒன்றை அநுபவிக்கப் போவதாகும் என்றும், நீங்கள் அவர்களை வாழவிட்டால் சிரஞ்சீவி களாய் வாழப் போவதாகவும் எண்ணிக்கொண்டிக்கிருர்கள். 'அவர்கள் நாட்டின் பெருமைக்கே இழுக்கைத் தருகிறவர்கள்' என்று எனக்குத் தோன்றுகிறது. அந்நியன் எவனேனும் இங்கே வந்தால் அவர்களைப்பற்றி என்ன சொல்லியிருப்பான்? "ஏதென்ஸில் மிகவும் பெரிய மனிதர்கள் என்று அம்மக்களே மதித்துப் போற்று கிறவர்கள் பெண்களுக்குச் சமம்" என்றுதான் கூறுவான். நம்மைப் போல் மதிப்பானவர்கள் இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று கூறுகிறேன். நீங்கள் அதை அநுமதிக்கக்கூடாது. இப்படி ஊர்ப்பெயரையே கெடுக்கும்படி கதறியழுது கெஞ்சி ஆர்ப்பாட்டம் செய்கிறவனைத் தண்டிப்பதையே நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

'நம்முடைய உணர்ச்சிகளைக்கண்டு நீதிபதி மனம் இரங்கும்படி செய்வது கூடாது. நாம் சொல்வதில் நியாயம் இருப்பதை அவர்கள் உணரும்படி செய்யவேண்டும்.

பொதுமக்களின் அபிப்பிராயம் இருக்கட்டும். விஷயத்தை நீதிபதிக்குத் திருப்தி ஏற்படும்படி விளக்குவதை விட்டு, அவரைக் கெஞ்சிக் கேட்டு விடுதலைபெறுவது மிகவும் தவறு. நீதிபதியின்

கடமை தீர்ப்பு வழங்குவதே தவிர, நீதியை அன்பளிப்பாக வழங்குவ தன்று; அவர் சட்ட விதிகளின்படி தீர்ப்பளிப்பதாக ஆணையிட்டிருக்கிருரே தவிரத் தம் மனம் போனபடியல்ல. இப்படிச் செய்யும்படி நாங்கள் உங்களைத் தூண்டவும் கூடாது; நீங்களும் அதை அநுமதிக்கவும் கூடாது. இதில் புண்ணியம் ஏதும் இல்லை. ஆகவே, எவற்றையெல்லாம் நான் அவமானம், நெறிகேடு, தவறு என்று கருதுகிறேனே அவற்றை நானே செய்யும்படி சொல்லாதீர்கள்—அதுவும் மெலிட்டஸின் குற்றச் சாட்டுப்படி நெறி கெட்டவன் என்று என்னைக் கருதி விசாரிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படிச் செய்யும்படி சொல்லாதீர்கள். ஏன் தெரியுமா? ஏதென்ஸ் வாசிகளே! நான் அப்படிப் பக்குவமாக உங்களைக் கெஞ்சி மன்ருடிக் கேட்டு, நீங்களே செய்த ஆணையை நீங்களே மீறும்படி செய்துவிட்டேனுல், அது, 'கடவுளே இல்லை' என்று நம்புமாறுதான் நான் உங்களுக்குப் போதிப்பதாகிவிடும். நான் தற்காப்பாக வாதம் புரியும்போது என் சொல்லாலேயே நான், 'கடவுளை நம்பவில்லை' என்று சொல்லி என்னையே தண்டித்துக் கொண்டதாக முடியும். ஆனுல் உண்மை அப்படியில்லை. அதற்கு நேர்மாருக இருக்கிறது. ஏனென்ருல், தெய்வங்கள் உண்டு என்பதை நான் நம்புகிறேன்; என்மேல் குற்றஞ் சுமத்துகிறவர்களை விடச் சிறந்த முறையில் தெய்வத்திடம் நம்பிக்கை வைத்திருக்கிறேன். இதோ உங்களிடமும் ஆண்டவன் முன்பும் நான் சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்; நீங்கள், உங்களுக்கும் எனக்கும் நல்லது என்று எது படுகிறதோ அப்படிச் செய்யுங்கள்.

★

★

என்னைத் தண்டிக்க வேண்டும் என்று வாக்கு அளித்துத் தீர்மானித்திருப்பதைக் கண்டு நான் வருந்தவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதுவும் நான் எதிர்பார்த்ததுதான். கிட்டத்தட்டச் சரிபாதியாக இரண்டு தரப்பிலும் வாக்கு அளிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கத்தான் எனக்கு வியப்பாக இருக்கிறது. இதைவிடப் பெரும்பான்மையோர் எனக்கெதிராக வாக்கு அளித்திருப்பார்கள் என்றுதான் நான் எண்ணியிருந்தேன். ஆனால் இப்போது முப்பது பேர் மறுதரப்பில் (என்பக்கம்) வாக்குகள்† அளித்திருந்தால் என்னை விடுதலை செய்ய வேண்டியதாயிருக்கும் என்று தெரிகிறது. மெலிட்டஸிடமிருந்து தப்பி விட்டேன் என்றே எனக்குத் தோன்றுகிறது, இன்னும் ஒன்று; அனிட்டஸ், லைகான் இவர்கள் இருவரின் துணையில்லா விட்டால் மெலிட்டஸுக்கு ஐந்தில் ஒரு பங்கு‡ வாக்குக்கூடக் கிடைத்திராது. சட்டப்படி அவ்வளவாவது கிடைத்தாக வேண்டும்; இல்லாவிட்டால் மெலிட்டஸுக்கு ஆயிரம் டிராக்மா அபராதம் விதிக்கப் பட்டிருக்கும்.

---

* இந்தப்பக்கத்திலிருந்து இரண்டாம் உரையாடல் தொடங்குகிறது.

† மொத்தம் 500 வாக்காளர்கள்; 280 வாக்குகள் சாக்ரடீஸுக்கு எதிராக அளிக்கப் பெற்றன. 30 வாக்குகள் குறைந்திருந்தால் இரண்டு தரப்பிலும் வாக்கின் எண்ணிக்கை சமமாக இருந்திருக்கும்.

‡ தம்மீது வழக்குத் தொடர்ந்திருக்கும் மெலிட்டஸ், அனிட்டஸ், லைகான் இம்மூவரும் தனித்தனியே 280-இல் மூன்றில் ஒரு பங்கு வாக்குகள் கிடைப்பதற்குப் பொறுப்பாளிகள் என்று சொல்லிச் சாதிக்கப் பார்க்கிறார் சாக்ரடீஸ். அதாவது 280-இல் 1/3 பங்கு என்றால் 93 வாக்குகள். மொத்தத்தில் 1/5 பங்கு என்றால் 100 வாக்குகள். ஆகவே அனிட்டஸ், லைகான் இவர்களுடைய உதவியால் கிடைத்த (93+93) வாக்குகள் இல்லாவிட்டால் 100-க்கும் குறைவான 93 தான் மிஞ்சியிருக்கும்; அது மெலிட்டஸுக்குப் பாதகமாக முடிந்து அவன் குறிப்பிட்ட ஒரு தொகையை அபராதமாகச் செலுத்த வேண்டியிருந்திருக்கும். ஆகவே அனிட்டஸ், லைகான் இவர்களின் உதவியால் அவ்வாறு நேராதபடி தப்பினான் மெலிட்டஸ் என்கிறார் சாக்ரடீஸ்.

**சாக்ரடீஸ் வாழ்நாள் முழுவதும் ஏதென்ஸ் வாசிகளுக்குப் பெருநன்மை புரிவதே நோக்கமாக இருக்கிறார்.**

எனக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று மெலிட்டஸ் சொல்கிறார். ஏதென்ஸ் வாசிகளே! எனக்கு வேண்டியது என்ன என்பதை நான் தெளிவாகச் சொல்ல வேண்டாமா? வாழ்நாள் முழுவதும் சோம்பித் திரிந்தறியாத ஒருவனுக்கு என்ன கிடைக்க வேண்டும்? மற்றப் பெரும்பாலோர் விரும்புவது போல் செல்வம், குடும்பத்துக்குத் தேவையான வசதிகள், ராணுவப் பதவி, சட்ட சபையில் பேசும் வாய்ப்பு, நீதிபதிப் பதவி, சதித்திட்டம், கட்சிகள் இவைகளைப் பற்றிக்கவலை கொள்ளாத எனக்கு என்ன தரப்போகிறீர்கள்; என்னைப்போல் உண்மையில் நேர்மையானவன் அரசியல் வாதியாக இருக்கக்கூடாது என்று யோசித்து முடிவு செய்ததால்தான் நான் அரசியல் வாதியாகவில்லை. உங்களுக்கும் எனக்கும் நன்மை செய்ய முடியாத அந்தப் பதவியை நாடவில்லை; தனிப்பட உங்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அதிகமாக நன்மை புரிய வேண்டுமோ அவ்வளவும் செய்ய முனைந்தேன். உங்கள் ஒவ்வொருவரையும் கண்டு ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டும், சொந்த நலத்தைவிட ஒழுக்கம், நல்லறிவு இவைகளையே நாடவேண்டும், நாட்டிலிருந்து கிடைக்கிற நலத்தை விட நாட்டின் நலத்தையே பெரிதாகப் போற்ற வேண்டும். இந்த முறையில் தான் எல்லா விஷயங்களையும் கவனித்துச் செய்ய வேண்டும். அப்படிச் செயல் புரியும் ஒருவனுக்கு மற்றவர்கள் செய்ய வேண்டியது என்ன? அவனுக்கு வெகுமதியாக ஏதாவது நன்மை புரியத்தானே வேண்டும்? ஏதென்ஸ் வாசிகளே! அந்த நன்மை அவனுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

**பிரிதானியக் கூடத்தில் தம்மை வைத்துப் போஷிக்கலாமே என்று கூறுகிறார்.**

இப்படி உங்களுக்கு நன்மை புரிய வந்தவனுக்கு—உங்களுக்கு மேலும் நல்லது செய்ய நேரம் கிடைக்குமா என்று ஏங்கும் ஒருவனுக்கு—ஏற்ற வெகுமதி என்ன? பிரிதானியக் (நகரசபைப் போஜன) கூடத்தில் வைத்துப் போஷிக்க ஏற்பாடு செய்யுங்கள். ஏதென்ஸ் வாசிகளே! அதை விடச்சிறந்த வெகுமதி வேறு என்ன

உண்டு? ஒலிம்பியா மைதானத்தில் நடக்கும் குதிரைப் பந்தயத்திலும் தேரோட்டும் பந்தயத்திலும் (இரண்டு குதிரைகள் அதை ஓட்டினால் என்ன? நான்கு குதிரைகள் ஓட்டினல்தான் என்ன?) பரிசு பெற்றவனை விட இவன் இந்த வெகுமதிக்குத் தகுதி உடையவன்...... நான் ஏழை; ஒலிம்பியாவில் பரிசு பெற்றவனுக்கோ போதுமான சொத்து இருக்கிறது. வெளித் தோற்றத்துக்கு அவன் உங்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகப் பட்டாலும் உண்மையில் நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்கும்படி செய்பவன் நான்தான். எனக்குப் பொருத்தமான—சரியான—தண்டனை எது தெரியுமா? இப்படிப் பிரிதானியம் (போஜன) கூடத்தில் வைத்து என்னைப் போஷிப்பதுதான். கண்ணீர் விட்டுக் கெஞ்சுவது, மன்றாடி வேண்டுவது ஆகியவற்றைக் கண்டித்துப் பேசும்போது நான் கூறியது வீறுப்புப் பேச்சு என்று இதையும் நீங்கள் ஒருவேளை எண்ணிக் கொண்டிருக்கலாம். இது அப்படியல்ல. நான் மனம் துணிந்து யாருக்கும் தீங்கு விளைத்ததில்லை என்று நிச்சயமாக எனக்குத் தோன்றுவதால்தான் நான் இப்படிப் பேசுகிறேன். நான் சொல்வது சரிதான் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்ய என்னால் முடியாமல் இருக்கலாம். அதற்குப் போதிய சமயமில்லை. பிற ஊர்களில் (நாடுகளில்) இருப்பது போல் ஏதென்ஸிலும் பெரிய வழக்குகளை ஒரே நாளில் முடிவு செய்யக்கூடாது என்ற சட்டம் அமலில் இருந்தால், நான் சொல்வது சரி என்று உங்களை ஒப்புக்கொள்ளும்படி செய்திருக்க முடியும். இந்தக் கணநேரத்தில் பெரும் குற்றச் சாட்டுக்களை மறுத்துப்பேச என்னால் எப்படி முடியும்?

**நான் நிரபராதி என்று நிச்சயமாகத் தெரிவதால்**
**நம்பிக்கை ஏற்படுகிறது.**

என்னைப் பொறுத்தவரையில் நான் எவருக்கும் தீங்கிழைக்கவில்லை என்று நிச்சயமாகத் தெரியும்; அதே மாதிரி நிச்சயமாக எனக்கு நானே தீங்கு விளைத்துக் கொள்ளவும் மாட்டேன். எனக்குத் தீங்குதான் நேரவேண்டுமென்றோ, தண்டனைதான் கிடைக்கவேண்டுமென்றோ சொல்லவும் மாட்டேன். நான் எதற்காக அப்படிச் சொல்ல வேண்டும்? மெலிட்டஸ் எனக்கு மரண

தண்டனை விதிக்க வேண்டுமென்கிருரே; அதற்குப் பயந்தா அப்படிச் சொல்கிறேன்? சாவு என்பது நல்லதா, கெட்டதா என்று தெரியாதிருக்கும்போது எந்தவிதமான தண்டனையும் கெடுதல்தான் என்று தெரிந்து, அதை நானே விரும்புவானேன்? சிறைவாசம் வேண்டுமென்று கேட்கட்டுமா? ஏன் நான் சிறையில் வாழ வேண்டும்? நகர நீதிபதிகள் பதினேரு பேரில் ஒருவரின் அடிமையாக ஏன் ஓர் ஆண்டு முழுவதும் இருக்க வேண்டும்? அபராதம் விதியுங்கள் அதைச் செலுத்தும் வரையில் சிறைவாசம் விதியுங்கள் என்று சொல்லட்டுமா? அதற்கும் ஆட்சேபம் உண்டு. என் கையில் பணமில்லை. ஆகவே, நான் சிறையில் வாழவேண்டியதுதான்.

**'சாவைவிட எனக்கு வேறு எது வேண்டும்?' என்கிருர்.**

'என்னை நாடு கடத்துங்கள்' என்று சொன்னுல் (நீங்கள் தீர்மானிப்பதும் அதுவாகத்தான் இருக்கும்) உயிர் வாழ்வதில் எனக்குக் குருட்டு மோகம் இருக்கிறது என்றுதான் ஆகிவிடும்; என் ஊர்க்காரர்களான உங்களுக்கே என் பேச்சு வார்த்தையைப் பொறுக்க முடியவில்லை. உங்களை அவ்வளவு பாதிக்கின்றன, வெறுப்பூட்டுகின்றன. இதுவே போதும் என்று நீங்களே எண்ணுகிறபோது மற்றவர்களா அவற்றைப் பொறுத்துக் கொள்ளப் போகிருர்கள்? அதோடு இந்தத் தள்ளாத வயதில் எப்போதும் அங்கங்கே உள்ளவர்கள் துரத்திக் கொண்டிருக்க, ஒரு நாட்டிலிருந்து ஒரு நாட்டுக்கும், ஊர் ஊராகவும் அலைந்து கொண்டா வாழவேண்டும்?

**'எங்கே போனுலும் உண்மை பேசியே
திருவேன்' என்கிருர்.**

எங்கே போனுலும் இங்கே இருப்பதுபோல் வாலிபர்கள் என்னைச் சூழ்ந்து கொள்வார்கள்; அது நிச்சயம். அவர்களை விரட்டினேனுனுல் அவர்களின் வீட்டுப் பெரியவர்கள் அந்த வாலிபர்களின் சொல்லைக் கேட்டுக் கொண்டு என்னை விரட்டியடித்து விடுவார்கள். அப்படி வாலிபர்களை என்னிடம் வர நான் அநுமதித்தால் அவர்களுடைய தந்தையர்களும் நண்பர்களும் தங்களுக்கு ஆபத்தாயிற்றே என்று என்னை விரட்டி விடுவார்கள்.

"ஆமாம். சாக்ரடீஸ், நீ நாவடக்கத்தோடு இருந்தால் என்ன? வெளியூரில் போய் அப்படி இருக்கலாமே! அப்போது உன் விஷயத்தில் யாரும் தலையிடமாட்டார்களே" என்று உங்களில் யாரேனும் கேட்கலாம். நீங்கள் புரிந்து கொள்ளும்படி இதற்குப் பதில் சொல்வது சிரமம். "நீங்கள் சொல்வது போல் செய்வது ஆண்டவன் ஆணையை மீறியதாகும். ஆகவே, நான் நாக்கை அடக்குவதற்கில்லை" என்று சொன்னால் நீங்கள் அது உண்மை என்று நம்பமாட்டீர்களே! மறுபடியும், "நாள்தோறும் நல்லொழுக்கத்தைப் பற்றிச் சர்ச்சை செய்யவேண்டும்; நானாகவும் ஆத்ம சோதனை புரிந்து கொள்ள வேண்டும்; அதுதான் மனிதனுக்கு உறுதி பயப்பது. ஆராயாமல் வாழுகிற வாழ்வு வாழத் தகுதியற்றது" என்று சொன்னாலும் நீங்கள் நம்பப் போவதில்லை. நான் சொல்வதென்னவோ உண்மைதான்; ஆயினும், அதைச் சரியென்று நீங்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்வதுதான் சிரமம். 'எனக்குத் தீங்கு நேரத்தான் வேண்டும்; நான் அப்படித்தான் அவதிப்பட வேண்டும்' என்று எண்ணியதும் இல்லை. என்னிடம் பணம் இருந்திருந்தால் அபராதத் தொகையின் அளவிலிருந்து குற்றம் எத்தகையது என்று கண்டு கொண்டிருப்பேன்; அப்போது அதைச் செலுத்துவதால் ஒன்றும் குடிமூழ்கிப் போவதுமில்லை, ஆனால், என்னிடமோ பணம் இல்லை. ஆகவே, என் நிலைமைக்கு ஏற்றபடி ஏதாவது அபராதத் தொகை விதியுங்கள். ஒரு வெள்ளிக் காசு (மைனா - ஒரு வெள்ளிக்காசு) வேண்டுமானால் செலுத்த முடியும். அதை அபராதமாக விதியுங்கள். பிளேட்டோ, கிரிட்டோ, கிரிட்டோபுலஸ், அப்போலோடோரஸ் முதலிய என் நண்பர்கள் முப்பது வெள்ளிக் காசு விதிக்கும்படியாகச் சொல்ல விரும்புகிறார்கள். அவர்கள் அந்தத் தொகைக்கு உத்தரவாதம் அளிக்கிறார்களாம். ஆகவே முப்பது வெள்ளிக்காசு அபராதமாக விதியுங்கள் (அந்தத் தொகைக்குப் போதிய உத்தரவாதம் அவர்கள் அளிப்பார்கள்).

நல்லவன் ஒருவனைக் கொன்றதாகத் தூற்றுவார்கள்.

ஏதென்ஸ் வாசிகளே! ஊரைக் கெடுக்கும் இவர்களிடமிருந்து நீங்கள் கெட்டபெயர் வாங்க அதிகநேரம் பிடிக்காது. இவர்கள் பிறகு என்ன சொல்வார்கள் தெரியுமா?, "நீங்கள்தான் சாக்ரடீஸைக் கொன்றீர்கள்! அறிஞனைக் கொன்றீர்கள்!" என்று சொல்

வார்கள். நான் அறிஞனுக இராவிட்டாலும், நான் இறந்த பிறகு அப்படித்தான் சொல்வார்கள்—(உலகம்) உங்களைத் தூற்றுவதற்காகத்தான் இப்படிப் பேசுவார்கள்.

**இவர்கள் இன்னும் சில ஆண்டுகள் காத்திருக்கக் கூடாதா?**

இன்னும் சிறிது காலம் பொறுத்துக்கொண்டிருந்தால் இயல்பாகவே நான் மாண்டுவிடுவேன். எனக்கு வயதாகிறது. சாவும் வெகுதூரத்தில் இல்லை; உங்கள் எல்லோரிடமும் இப்படிப் பேசுவதாக எண்ணவேண்டாம்; எனக்கு மரணதண்டனை விதித்தார்களே, அவர்களைப் பார்த்துத் தான் சொல்லுகிறேன். இன்னும் ஒரு விஷயமும் அவர்களிடம் சொல்லவேண்டும். என் விடுதலையைப் பெறுமளவு, பக்குவமாகப் பேச எனக்குச் சொல்வன்மைஇல்லை. அதனுல் தான் எனக்கு இந்தத் தண்டனை கிட்டியது என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி ஒன்றும் இல்லை. எனக்கு இந்தத் தண்டனை கிடைத்ததற்குக் காரணம் என்னிடம் சொல்வன்மை இல்லாததால் நிச்சயமாக இல்லை! நீங்கள் விரும்புவதுபோல் அழுது கதறியும் புலம்பியும் உங்களை வேண்டிக் கொள்ளும் (அளவு) துணிவோ, தைரியமோ எனக்கு இல்லை. மற்றவர்கள் அப்படியெல்லாம் சொல்வதையும் செய்வதையும் பார்த்திருப்பீர்கள். அப்படிச் சொல்வதும் செய்வதும் என் தகுதிக்கு ஏற்றதல்ல. ஆபத்து நேரும் சமயத்தில் சாமானிய மனிதர்களைப் போலவோ அல்லதுஇழிவாகவோ நடந்துகொள்ளக்கூடாது என்று கருதினேன். இப்போதும்கூட நான் தற்காப்புக்கான வாதம் புரிந்த விதம்பற்றி வருந்தவில்லை. உங்களைப்போல ரீதியாகப் பேசி வாழ்வதைவிட எனக்கு இயல்பான முறையில் பேசிமடிகிறேன்; போர் முறைபபடியோ, நியாய நீதியாகவோ கவனித்தால், நானே பிறரோ சாவுக்கு அஞ்சி ஓட முயற்சிக்கக்கூடாது. போரில் ஒருவன் ஆயுதங்களை அப்படியே போட்டுவிட்டுத் தன்னைத் துரத்துபவருக்கு அடிபணிந்துவிட்டால், அவன் சாகாமல் தப்பலாம். ஆபத்தான மற்றச் சந்தர்ப்பங்களிலும் எதையாவது சொல்லி, ஏதாவது செய்து மனிதன் தப்பிவிட இன்னும் பலவழிகள் இருக்கின்றன. நண்பர்களே! சாவிலிருந்து தப்புவது சிரமமல்ல; அதர்மத்திலிருந்து தப்புவதுதான் சிரமம். சாவையும் மிஞ்சிய வேகம் அதற்கு உண்டு. நானே வயதானவன்; (இந்த வாழ்வெனும் பந்தயத்தில்) நிதானமாக

நடந்து செல்பவன். ஆகவே அதர்மத்தையும்விட மெதுவாகச் செல்லும் சாவு என்னைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. என்மீது குற்றம் சுமத்தியவர்கள் வாழ்க்கையெனும் இந்தப் பந்தயத்தில் சுறு சுறுப்பாகவும் நயமாகவும் செல்வதால், அதிவேகமாகச் செல்லும் அதர்மம் அவர்களைக் கைப்பற்றிக்கொண்டுவிட்டது. இதோ நான் நீங்கள் விதித்த மரணதண்டனையை ஏற்கச் செல்லுகிறேன். அவர்களும் அவர்கள் வழியில் செல்லட்டும், அவர்கள் செய்த மாபாதகத்துக்கும் தவறுகளுக்கும் ஏற்ற தண்டனை அவர்களுக்கும் கிடைக்கும். சத்தியமே அவற்றைக் கவனித்துக்கொள்ளும். என் தண்டனையை நான் ஏற்று அநுபவிக்கவேண்டும். அதேபோல் அவர்களும் அநுபவிக்கட்டும். இவையெல்லாம் ஏற்கனவே விதித்துள்ள படி நடப்பதாகவே கொள்ளலாம். எல்லாம் நன்மைக்காகவே என்றுதான் எனக்குத் தோன்றுகிறது;

**பிழைகளைச் சுட்டிக் காட்டுவதால் சாக்ரடீஸை அவர்கள் கொல்லப் போகிறார்கள். ஆனால் அவர் போனபின் இன்னும் பலர் தோன்றி அவர்களைக் கடுமையாகத் தாக்கப் போகிறார்கள்.**

எனக்குத் தண்டனை வழங்கியோரே! நான் வருங்காலத்தைப் பற்றிச் சொல்கிறேன். இதோ சாகப் போகிறேன். சாகும் சந்தர்ப்பத்தில் மனிதர்களுக்குத் தீர்க்க தரிசன சக்தி ஏற்படுவது உண்டு. கொலைகாரர்களே! நான் இறந்ததும் உங்களுக்கு இதைவிடக் கடுமையான தண்டனை கிட்டப்போகிறது; இது நிச்சயம். உங்கள் குற்றங்குறைகளை ஒப்புக்கொள்ள உங்களுக்கு மனமில்லை. அவற்றை எடுத்துக்காட்டினேன் என்றுதானே என்னைக்கொன்றீர்கள்? ஆனால் நீங்கள் நினைத்தது பலிக்கப் போவதில்லை; அதற்கு மாறாகவே நடக்கும். நான் இறந்ததும் இப்போது இருப்பவர்களைவிட ஏராளமான பேர் உங்கள் குற்றங் குறைகளை அம்பலப்படுத்தப் போகிறார்கள். இதுவரை நான் தடுத்துவைத்திருந்தவர்கள் இனிக் கிளம்பிவிடுவார்கள். அவர்கள் வாலிபர்களாகையால் என்னைவிடக் கடுமையாக உங்களைத்தூற்றப்போகிறார்கள்; நீங்கள் அதனால் இன்னும் வேதனையடையப் போகிறீர்கள்; மனிதர்களைக் கொன்றுவிடுவதன் மூலம், உங்கள் தீய வாழ்க்கையை எவரும் குறைகூறாதபடி தடுத்துவிட முடியும்என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களேயானால், அது தவறு.

அப்படித் தப்புவது சாத்தியமும் இல்லே; பெருமையும் இல்லே. உங்களைத் திருத்திக் கொள்வதுதான் சுலபமான நேர்மையான வழி. நான் போவதற்கு முன்னுல் என்னைத் தண்டித்த நீதிபதிகளுக்குச் சொல்லிவிட்டேன். இது நிச்சயமாக நடக்கப்போகிறது. என்னை விடுதலேசெய்ய முயன்ற நண்பர்களே! உங்களோடும் இப்படி நேர்ந்தைப்பற்றிச் சிறிதளவு பேசவேண்டும்; மாஜிஸ்ட்ரேட்டுகள் (தண்டனைக்குரிய) ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருக்கையில், தூக்குமேடையில் நான் சாவதற்கு முன்னுல்-உங்களோடு பேச நான் விரும்புகிறேன். ஆகவே சற்று இருங்கள்; நேரம் இருப்பதால் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளலாம்; நீங்கள் என் நண்பர்கள். எனக்கு நேர்ந்திருப்பது என்ன? இதன் கருத்தை உங்களுக்கு விளக்கவேண்டும்; எனக்கு நீதி வழங்கியவர்களே—ஆமாம்; ஆமாம்; உங்களைத்தான் உண்மையில் நீதிபதிகள் என்பேன்—ஓர் அதிசயமான சூழ்நிலேயைப்பற்றி உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். சாதாரண விஷயங்களில், தவருக நடக்கவிருந்தாலும் என் உள்ளத்திலிருந்து தோன்றும் ஒரு தெய்வசக்தி (வாக்கு) என்னைத் தடுத்து வந்தது. இதோ இறுதியாகவரும் பெருந்தீங்கு என்று பொதுவாக எல்லோரும் கருதுகிற மரணம் நேர இருக்கிறது. இந்தச் சமயத்தில் அதைத்தடுக்கும் தெய்வவாக்கு எதுவும் காணவில்லே.

**சாக்ரடீஸுக்கு நன்மையே ஏற்படப் போகிறது:**
**ஏனென்ருல் தெய்வவாக்கு எதிர்க்கவில்லே.**

நான் இன்றுகாலே வீட்டை விட்டுப் புறப்பட்டபோதும், நீதிமன்றத்திற்கு வந்து கொண்டிருந்தபோதும், இங்கே பேசிக்கொண்டிருந்த போதும் அப்படி ஏதும் தடை செய்யவில்லே. முன்னெல்லாம் நான் பேசும்போது, பாதியில் ஏதோ ஒன்று தடுத்துவிடும். ஆனுல் இன்றே நான் பேசும் போதோ, இந்த விவகாரம் பற்றியோ தெய்வவாக்கு எதுவும் தடுத்துக் கூறவில்லே. இந்த மௌனத்தின் பொருள்தான் என்ன? இதோ சொல்லுகிறேன்: அதாவது, ‘இப்போது எனக்கு நேர்ந்திருப்பது நன்மையே, மரணம் தீங்காகும் என்று எண்ணுபவர்களின் கருத்துத் தவருனது’ என்பது இதிலிருந்து தெரிகிறது. அப்படி எனக்கு நன்மை

நேராமல் தீங்கு நேரப்போனால், வழக்கமாகத் தடுக்கிற தெய்வம் தோன்றித் தடுத்திருக்கும்.

இன்னொருவிதமாக எண்ணிப் பார்த்தாலும், சாவினால் நன்மையே ஏற்படும் என்பதற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு; ஒன்று சாவு என்றால் ஒன்றுமே இல்லாத ஒரு நிலையாக (சூனியமாக) இருக்க வேண்டும். இல்லா விட்டால் நினைவிழந்த நிலையாக—சிலர் சொல்வதுபோல் ஒரு மாறுதலாக—நமது ஆவி இவ்வுலகத்திலிருந்து மறு உலகத்துக்குச் செல்வதாகவும் இருக்கலாம்.

மரணம் என்பது நன்மையோ அல்லது வெறும் சூனியமோ,
இரண்டில் ஒன்று. நிம்மதியான நித்திரை நிலை அது.

இனி நீங்கள் எண்ணுவதுபோல் சாவானது, 'நினைவே இராத—கனவிலும் கலையாத (கனவற்ற)—ஒருவித நித்திரை நிலை அது' என்றால், அதைவிட நன்மை ஏது சொல்லுங்கள்? ஓர் இரவு இப்படிக் கனவிலும் கலையாத (கனவற்ற) நித்திரை புரிந்த ஒருவன், அதைவிட நிம்மதியாகவும் இன்பமாகவும் வாழ்வின் மற்ற நாட்களில் பகலும் இரவுமாக எத்தனை நாள் கழித்திருப்பான்?' என்று ஆராய்ந்து பார்த்தால், சாதாரண மனிதன் மட்டுமல்ல, ஒரு பேரரசன்கூட, 'அந்த ஓர் இரவுக்கு ஈடில்லை; அப்படி இன்பங் கண்டதில்லை' என்பதை உணர்ந்து கொள்வான். மரணத்தின் இயல்பு இத்தகையது என்றால், இறந்துபோவது நல்லது தானே? இதிலிருந்து நிலைபேறு என்பது ஓரே இரவு என்றுதான் ஆகிறது. 'மரணம் என்றால் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பயணம் போவதுதான்; இறந்தவர்கள் எல்லாரும் அங்கேதான் இருக்கிறார்கள்' என்றால் அதைவிட வேறு இன்பம் என்ன இருக்கிறது!

நேர்மையான தீர்ப்பு நமக்குக் கிடைக்கும் என்றால், அது எவ்வளவு
பெரும்பாக்கியம்! ஹோமருடனும் ஹெஸியாருடனும் பேசக்
கொடுத்து வைப்பதாக இருந்தாலும் டிராய் நகர வீரர்களை
நேரில்காணும் பேறு பெறுவதென்றாலும்தான் என்ன அதிர்ஷ்டம்!
இதே போல் தொடர்ந்து மறுவுலகிலும் தத்துவ விசாரணையில்
ஈடுபடுவதும் பாக்கியமே.

ஆகவே, மனிதன் அந்த மறு உலகத்துக்கு வந்து சேரும்போது இந்த உலகத்தில் நீதிபதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களிட

மிருந்து மீண்டு விடுகிறுன். அங்கே உண்மையிலேயே நீதிவழங்கும மைனுஸ், ராடமாந்தஸ், ஈசஸ், டிரிப்டோலெமஸ்* போன்றவர் களும், மற்றத் தெய்வப் பிறவிகளும் இருக்கிருர்கள். முன்னே அவர் கள் எல்லாரும் நேர்மையையே கடைப்பிடித்து வந்தவர்கள். ஆகவே, அங்கே பயணம் புறப்படுவது நல்லதுதான். அங்கே ஆர்ஃபூஸ், மியூஆயஸ், ஹெஸியாட், ஹோமர் ஆகியவர்களோடு அளவளாவுவ தென்ருல், எதையும் (உயிரையும்) கொடுக்கலாமே! இது உண்மை யாக இருந்தால் நான் மீண்டும் மீண்டும் சாகத்தயார். அங்கே பாலமீடஸ், டெலமான் மகன் அஜாக்ஸ்,† இன்னும் அநீதி காரண மாக மடிந்த பழைய வீரர்கள் எவர் இருந்தாலும் அவர்களைக் கண்டு பேசுவதென்ருல், எவ்வளவு ஆவலாக இருக்கும் தெரியுமா? நான் பட்ட துன்பங்களைக் கூவர்கள் அநுபவித்த இன்னல்களோடு ஒப் பிட்டால் (எனக்கு நேர்ந்தது ஒன்றும் இல்லை என்றுதான் எண்ண வேண்டியிருக்கும்)மகிழ்ச்சியே ஏற்படும். இவை யெல்லாவற்றை யும்விட ஒன்றை அங்கே அறிந்து கொள்ளலாம். மெய்ஞானத்துக் கும் பொய்யறிவுக்கும் உள்ள வேற்றுமையை அங்கே தொடர்ந்து நான் ஆராய முடியும். இந்த உலகில் நடந்து கொண்டதுபோல் மறு உலகிலும் நடந்து கொள்வேன். அங்கே யார் மெய்ஞானிகள், யார் போலிவேதாந்திகள் என்பதைக் கண்டறிவேன். அந்நாளில் வாழ்ந்த டிரேஜன் (டிராய் நகரத்து) வீரர்களின் தலைவனையோ, கிரேக்க வீரர்களான ஒடீஸியஸ், சிசி:பஸ்,‡ இன்னும் இவர்களைப் போன்ற ஆண் பெண்கள் ஆகியவர்களையோ அந்த உலகத்தில் கண்டு விசாரிக்க முடியுமென்ருல், எதைத்தான் (உயிரைத்தான்)

---

* இவர்கள் மறுவுலகில் (பாதாளம் என்பது கிரேக்கர் கருத்து) நீதிபதி களாக நியமிக்கப் பெற்றவர்கள். தேவராஜனுகிய ஜூஸின் மானிட புத்திரர்கள்.

† டிராய் அரசனுன பிரியம் தந்த தொகையை வாங்கிக் கொண்டு தன் கிரேக்கத் தோழர்களைப் பாலமீடஸ் காட்டிக் கொடுத்ததாக அநியாயமாய்க் குற்றஞ் சாட்டினுர்கள் கிரேக்கர்கள். அகில்லஸ் மடிந்ததும் அவனுடைய ஆயுதங்களைப் பெருததால் அஜாக்ஸ் என்னும் கிரேக்க வீரனுக்கு வெறி பிடித்து விடவே, அவன் தற்கொலை புரிந்து கொண்டான். முறைதவறி ஒடீஸியஸ் என்ற கிரேக்க வீரனுக்கு அந்த ஆயுதங்களை அளித்ததே காரணம்.

‡ இருவரும் தந்திரத்தில் தேர்ந்த கிரேக்க வீரர்கள்.

தியாகம் செய்யக்கூடாது? அவர்களோடு அளவளாவி அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்பதிலேதான் எவ்வளவு எல்லையற்ற இன்பங்காண்பேன்! மறு உலகில் இப்படி யெல்லாம் கேள்வி கேட்பவனுக்கு மரண தண்டனை விதிக்க மாட்டார்கள். மறுமையைப் பற்றிச் சொல்வது உண்மை யென்றால், நம்மைவிட அங்கே வாழுவோர் இன்புற்றிருப்பதோடு, அமரர்களாகவும் இருப்பார்கள் என்றே கருதுகிறேன்.

**நான் உங்களுக்குச் செய்ததுபோல் என் மக்களுக்கு நீங்கள் செய்யுங்கள்; தொல்லை கொடுங்கள்.**

ஆகவே நீதிபதிகளே! மரணம் என்றால், (அஞ்சாதீர்கள்) மகிழ்ச்சியோடு இருங்கள். நிச்சயம் இங்கே வாழும்போதோ இறந்த பிறகோ நல்லவனுக்குத் தீங்கு ஏதும் நேராது. தேவர்கள் அவர்களைக் கைவிடமாட்டார்கள். இப்படி நான் இறப்பதும் ஏதோ சந்தர்ப்ப வசத்தால் நேர்ந்ததன்று; நான் சாவதே நல்லது. 'இந்தச் சங்கடங்களிலிருந்து மீளும் சமயம் இதோ வந்துவிட்டது' என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதனால்தான் தெய்வ வாக்கு ஒன்றும் கேட்கவில்லை. அதனால்தான் என்னைத் தண்டித்தவர்களிடமோ என்மேல் குற்றம் சுமத்தியவர்களிடமோ எனக்குக் கோபமே இல்லை. அவர்கள் எனக்கு நன்மை செய்ய விரும்பாவிட்டாலும் தீங்கு புரிந்ததாக நான் எண்ணவில்லை; தீங்கு புரிய விரும்பியும் எனக்கு நன்மை ஏற்படும்படி செய்து விட்டார்களே என்றுதான் அவர்களை அன்பாகக் குறைகூற வேண்டியிருக்கிறது. இருந்தாலும் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன்...

நண்பர்களே! என் புதல்வர்கள் பெரியவர்களானதும் அவர்களை நீங்கள் நன்றாகத் தண்டிக்கவேண்டும்—அவர்கள் நல்லொழுக்கத்தையும் விட்டுச் செல்வத்துக்கோ, வேறு எதற்கோ ஆசைப்பட்டால் நான் உங்களுக்குத் தொல்லை கொடுத்துவந்தது போல் நீங்களும் அவர்களுக்குத் தொல்லை விளைக்க வேண்டும். ஒரு பெருமையும் இராமல் தாம் ஏதோ அறிஞர்கள் என்பதாக அவர்கள் பாசாங்கு செய்தால் நான் உங்களைக் கண்டித்தது போலவே "எது அவசியமோ அதைவிட்டு அவசியமற்றதைப் பெரிதாக எண்ணி, ஒரு தகுதி இல்லாத நீங்கள் அறிஞர்கள் என்று உங்களை

எண்ணிக் கொண்டிருக்கிறீர்களே!" என்று தாராளமாய்க் கண்டியுங்கள். இப்படி நீங்கள் செய்தால்தான் எனக்கும் என் புதல்வர்களுக்கும் நீங்கள் நீதி வழங்கியவர்கள் ஆவீர்கள்!

இதோ நான் புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது; இனி அவரவர்கள் வழியே செல்வோம். நான் சாகச் செல்கிறேன். நீங்கள் வாழச் செல்லுங்கள்! எது நல்லது என்பதை ஆண்டவனே அறிவான்!

# கிரிட்டோ

# இந்த உரையாடல்

**சா**க்ரடீஸின் விசாரணைக்கும் அவர் இறப்பதற்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் இது. அவர் சிறையில் இருக்கும் பொழுது அவருடைய பழைய நண்பர் கிரிட்டோ அங்கே வருகிறார். அவர் சாக்ரடீஸ் தப்பிச் செல்வதற்கான உபாயமொன்றை வகுத்துக் கொண்டே அங்கே வந்திருக்கிறார். கிரிட்டோ, 'சாக்ரடீஸின் நண்பர்கள் பணம் உதவத் தயாராயிருக்கிறார்களென்றும் தெஸ்ஸாலியில் அவருக்குப் புகலிடம் கிடைக்கும்' என்றும் கூறு கிறார். ஆகவே, 'சாக்ரடீஸ் இப்படி எதீனிய நீதிமன்றத்தார் விதித்த தண்டனைக்குப் பணியக் கூடாது' என்றும், 'அப்படிச் செய்வது அவருடைய நண்பர்களுக்கும். குடும்பத்தார்க்கும் தமக்கும் தவறிழைத்ததாகும்' என்றும் வாதிக்கிறார்.

சாக்ரடீஸ் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'அப்படித்தாம் தப்பி ஓடினால் பொதுமக்களின் கருத்துக்குப் பணிந்து விட்டதாகிவிடும் என்றும் தமது கொள்கைக்கு அது முற்றிலும் மாறாகும் என்றும் விசாரணையின் முடிவாக நாடு கடத்தப் பெற்று வாழ்வதைவிடத் தாம் சாவையே விரும்புவதாக முன்னால் கூறியது இதனால் வெறும் புரட்டாகிவிடும்' என்றும் கூறுகிறார்; 'தாம் அரசாங்கத்தோடு ஒத்துப் போகாமல் அதைக் கண்டிப்பவராக இருந்தாலும் சட்ட அதிகாரத்தையும் தம் சொந்த மனச்சாட்சியையும் மதித்தே நடப் பவர்' என்று அவர் கூறுகிறார். விசாரணை நேர்மையற்றதாகவும், குற்றச்சாட்டுகள் பொய்யாகவும் இருப்பினும், ஏதென்ஸ் சட்டப்படி தண்டனை விதிக்கப் பெற்றிருப்பதால், அதற்குப் பணிவதே தம் கடமை என்கிறார் சாக்ரடீஸ். (ஏசுநாதரின்) மலையுபதேசத்துக்கு முன்னறிவிப்பாக விளங்குகிறது இவருடைய செயல்: இவருடைய கொள்கையும், "நமக்கு யார் என்னதான் தீங்கு இழைத்திருந்தாலும் அவர்களைப் பதிலுக்குத் தாக்குவதோ, தீங்குக்குப் பதில் தீங்கு இழைப்பதோ கூடாது" என்பதே. ஏதென்ஸ் சட்டத்தை (மனிதனாக) உருவகப்படுத்தி அதனுடன் இவர் கற்பனையாகச் சம்பாஷணை செய் கிறார்; அதில், 'அதிகாரம் எனக்குத் தவறு இழைந்திருந்தாலும்

அதன் பாதுகாப்பில்தானே நான் வளர்ந்தேன்' என்பதை எடுத்துக் காட்டுகிருர். சட்டத்தின் குரல் அவர் செவிகளில் ஒலிக்கிறது— 'யோகியின் செவியில் விழுகிற குழலிசையைப்போல்' சாக்ரடீஸ் தமக்கு விதிக்கப் பெற்ற தண்டனையை ஏற்பது ஒன்றே நேர்மையான வழி என்று கொள்கிருர்.

## 2. கிரிட்டோ

**சாக்ரடீஸ் :** ஏன் இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டாய், கிரிட்டோ? மிகவும் அதிகாலையில் வந்துவிட்டாய் போல் இருக்கிறதே?

**கிரிட்டோ :** ஆமாம்; உண்மை!

**சாக்ரடீஸ் :** சரியான நேரம் என்ன?

**கிரிட்டோ :** பொழுது விடியப்போகிறது. (அருணோதய நேரம்)

**சாக் :** சிறைக்காவலாளன் எப்படி உன்னை அனுமதித்தான் என்றுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!

**கிரிட் :** ஏற்கனவே நான் இங்கு அடிக்கடி வந்திருப்பதால் அவனுக்கு என்னைத்தெரியும் சாக்ரடீஸ்! அதுமட்டுமல்ல அவனுக்கு ஓர் உபகாரமும் செய்திருக்கிறேன்.

**சாக் :** இப்போதுதான் வந்தாயா?

**கிரிட் :** இல்லை; சற்று நேரம் ஆகிறது.

**சாக் :** ஏன் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருக்கிறாய்? உடனே ஏன் எழுப்பவில்லை?

**அதிகாலையில் கிரிட்டோ, சாக்ரடீஸ் இருக்கும் சிறைக்கு வருகிறார்; சாக்ரடீஸ் நித்திரையில் ஆழ்ந்திருப்பதைக் காண்கிறார்.**

**கிரிட் :** உங்களைப்போல் இவ்வளவு பேராபத்திலும் குழப்பமான நிலையிலும் இருக்க நான் விரும்பமாட்டேன். இம்மாதிரி நிலையில் இருப்பதாக எண்ணிப்பார்க்கவும் என்னால் முடியாது. நீங்கள் இப்படி அமைதியாகத் தூங்குவதைப் பார்க்க எனக்கு வியப்பாக இருந்தது. அதனால் உங்களை எழுப்பவில்லை; மேலும் உங்களுக்கு வேதனை சரக் கூடாது என்றுதான் இப்படிச் சும்மா இருந்தேன்.

எப்போதும் நீங்கள் மகிழ்ச்சியோடுதான் இருப்பீர்கள்; ஆயினும் இத்தகைய பேராபத்தை மிகவும் சகஜமாகவும், அமைதியாகவும் நீங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதுபோல இதுவரை நான் எங்கும் கண்டதில்லை.

**சாக்:** ஏன் கிரிட்டோ, என்னைப்போல வயதான மனிதன் 'சாவு நெருங்கிவிட்டதே!' என்று வருந்திக்கொண்டிருக்கலாமா?

**கிரிட்:** ஆயினும் வயோதிகர்கள் இதேமாதிரி துன்பம் அனுபவிக்கும்போது, வயோதிகராயும் அவர்கள் வருந்தாமல் இல்லை.

**சாக்:** அது உண்மைதான்; இவ்வளவு அதிகாலையில் எதற்காக வந்தாய், நீ சொல்லவில்லையே?

**டெலாஸிலிருந்து கப்பல் வரும் என்று எதிர்பார்ப்பதாகச் சேதி.**

**கிரிட்:** துயரமும் வேதனையும் தரும் செய்தி ஒன்றைச் சொல்ல வந்தேன். நண்பரே, உமக்கு அப்படித் தோன்ருது என்பது எனக்குத் தெரியும். ஆயினும் உம் நண்பர்களாகிய எங்களுக்கெல்லாம்—அதுவும் எனக்கு மிகவும் வருத்தமும் வேதனையுமாக இருக்கிறது.

**சாக்:** என்ன, அப்படியானல், டெலாஸிலிருந்து கப்பல் வந்துவிட்டதா? வந்த பிறகுதானே எனக்கு மரண தண்டனை விதிக்கப்படும்?

**கிரிட்:** கப்பல் இன்னும் இங்கே வந்து சேரவில்லை; இருப்பினும் இன்று வந்துவிடலாம். சுனியம் பிரதேசத்திலிருந்து இங்கே வந்தவர்கள் அங்கே கப்பலைப் பார்த்ததாகச் சொன்னர்கள். ஆகவே, சாக்ரடீஸ், நாளையோடு உங்கள் வாழ்வு முடிந்துவிடும்!......

**சாக்:** அதுவும் நல்லதுதானே கிரிட்டோ! ஆண்டவன் விருப்பம் அதுவாக இருந்தால், எனக்குச் சம்மதமே. ஆனல் எனக்கென்னவோ இன்னும் ஒருநாள் தாமதமாகும் என்று தோன்றுகிறது.

**கிரிட்:** ஏன் அப்படித் தோன்றுகிறது?

**சாக்:** இதோ சொல்கிறேன், கப்பல் வந்த மறுநாள்தானே நான் சாகவேண்டும்.

**கிரிட் :** ஆமாம்; அப்படித்தான் அதிகாரிகள் சொல்லு கிருர்கள்.

**சாக் :** ஆனல் நாளைக் காலைக்குள் இங்கே கப்பல் வந்து சேரும் என்று எனக்குத் தோன்றவில்லை. நேற்று இரவு—அது தான் சற்று முன்னே ஒரு கனவு கண்டேன். அதிலிருந்துதான் இப்படி ஊகித்தேன். நல்லவேளை, நீ என்னை எழுப்பாமல் இருந் தாயே! (என்னைத் தூங்கவிட்டாயே!)

**கிரிட் :** அது என்ன கனவு?

**அழகிய பெண்ணொருத்தி, கனவில் தோன்றி, சாக்ரடீஸ் மூன்றும்நாள் இறப்பார் என்கிருள்.**

**சாக் :** பழபழப்பான ஆடையை உடுத்த கம்பீரமான அழகிய பெண்மணி ஒருத்தி என்னைப் பார்த்து, 'ஓ சாக்ரடீஸ்! இன்றையி லிருந்து மூன்றும்நாள் வளம் மிகுந்த மறு உலகத்துக்கு (பிதியா வுக்கு)ச் செல்வாய்!' என்ருள்.

**கிரிட் :** ஆ! என்ன அதிசயமான கனவு சாக்ரடீஸ்!

**சாக் :** இதற்கு என்ன பொருள் என்பதுபற்றிச் சந்தேகமே இல்லை; தெரிந்ததா கிரிட்டோ?

**கிரிட்டோ பலவித வாதங்களைக்கூறி, சாக்ரடீஸைத் தப்பிஓடச் செய்யும்படி முயற்சிக்கிருர். அதற்கான ஏற்பாடுகளை எளிதில் செய்யமுடியும்; அதனல் எவருக்கும் ஆபத்து நேராது என்கிருர்.**

**கிரிட் :** தெரிந்தது; தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஆனலும் சாக்ரடீஸ் இங்கிருந்து தப்பி ஓடிவிடுங்கள்; உங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இறந்து போனல் உங் களுக்கு ஈடான நண்பர் எனக்கு எங்கே கிடைக்கப் போகிருர்! அதோடு இன்னும் ஒரு சங்கடம் நேருமே! என்னுடைய குணத்தை யும் உங்களுடைய குணத்தையும் தெரியாதவர்கள் என்ன சொல் வார்கள், தெரியுமா? நான் மட்டும் விரும்பியிருந்தால் உங்களைக் காப்பாற்றியிருக்க முடியும், ஆனல் நான்தான் அதைப்பற்றி ஆர்வம் காட்டவில்லை என்றுதான் சொல்வார்கள். இதைவிட வேறு அவமானம் எனக்கு வேண்டுமா?—'ஒரு நண்பனின் உயிரைவிட

இவன் தன் பணத்தைத்தானே பெரிதாகக் கருதினன்' என்று அவர்கள் சொல்வார்களே! 'நான் உங்களைத் தப்பியோடும்படி செய்யப் பார்த்தேன். நீங்கள் அப்படிச் செய்ய மறுத்துவிட்டீர்கள்' என்று, என்னதான் வலியுறுத்திச் சொன்னலும் அவர்கள் நம்புவார்களா?

**சாக்:** அவர்கள் சொல்வதைப்பற்றி நாம் கவலைப் படுவானேன்; கிரிட்டோ? நல்லவர்கள் சொல்வதுதான் நமக்கு முக்கியம்; நடந்ததை நடந்தபடி அவர்கள் உணர்ந்துகொள்வார்கள்.

**கிரிட்:** ஆனல், சாக்ரடீஸ், அவர்கள் சொல்வதையும் நாம் கவனித்துத்தானே ஆகவேண்டும்? அவர்களுக்குப் பிடிக்காதவர்களை அவர்கள் எவ்வளவு பெரிய தீங்குகளுக்கு ஆளாக்குகிருர்கள் என்பது இந்தச் சம்பவத்திலிருந்தே தெரிகிறது!

**சாக்:** அப்படித்தான் இருக்கட்டுமே, கிரிட்டோ! ஒருசில பேர் பெருந்தீங்கு விளைவிக்கட்டுமே; அப்படியென்ருல் அவர்களே கூடப் பெருநன்மை செய்யமுடியும் அல்லவா?—அப்படிச் செய்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்!—ஆனல் உண்மையில் அவர்களால் இரண்டும் செய்யமுடியாது; ஒரு மனிதனை ஞானியாகவோ, மூடனுகவோ ஆக்க அவர்களால் முடியவே முடியாது! அவர்கள் எதைச் செய்தாலும் சரி, தற்செயலாக அப்படியெல்லாம் நேருகிறதே தவிர வேறென்றுமில்லை.

**கிரிட்;** சரி; நான் உங்களை மறுத்துப்பேசவில்லை. ஆனல் ஒன்று கேட்கிறேன். சாக்ரடீஸ்! எனக்கும் உங்களுடைய மற்ற நண்பர்களுக்காகவுந்தானே யோசிக்கிறீர்கள்? எங்களுக்கு ஏதாவது நேருமோ என்பதனல்தானே நீங்கள் இப்படிச் சும்மாயிருக்கிறீர்கள்? 'நீங்கள் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டால் வேவுகாரர்கள் நாங்கள் உங்களைத் திருட்டுத்தனமாக மீட்டுவிட்டதற்காக எங்களைச் சிக்கலில் மாட்டிவிடுவார்கள், எங்கள் சொத்து முழுவதையுமோ பெரும்பகுதியையோ இதனல் நாங்கள் இழக்க நேருமோ, இன்னும் பேராபத்து ஏதாவது நேருமோ?' என்றுதானே பயப்படுகிறீர்கள்? எங்களைப்பற்றி அப்படி அஞ்சத்தேவையில்லை. உங்களைக் காப்பாற்றவேண்டி நாங்கள் இப்படித் துணிந்துநிற்க வேண்டியது

தான்; இன்னும் பேராபத்தாக இருந்தாலும்சரி, நாங்கள் துணிந்து விட்டோம். ஆகவே, நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்; சம்மதம் என்று சொல்லுங்கள்.

**சாக்:** ஆமாம் கிரிட்டோ! அந்தப் பயமும் ஒரு காரணம் தான். ஆனால் அதுமட்டுமன்று.

**கிரிட்:** அஞ்சவேண்டாம்; செலவில்லாமல் உங்களைச்சிறையி லிருந்து தப்புவிக்க எத்தனையோ பேர் தயாராக இருக்கிறார்கள்; வேவுகாரர்களைப்பற்றி என்ன என்கிறீர்களா?—அவர்கள் அப்படி ஒன்றும் அதிகமாகக் கேட்டுவிடவில்லை. சிறிது தொகை கொடுத் தாலே போதும்; அவர்களைத் திருப்தி செய்து விடலாம். எனக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. எல்லாவற்றையும் உங்களுக்கே செலவிடத் தயார். அப்படி என் சொத்தைச் செலவிடுவது உங் களுக்கு விருப்பமில்லை என்றால், உங்களுக்குச் சிறிதும் முன்பின் பழக்கம் இல்லாத வெளியார் கொடுக்கத்தயார். தீபஸ் பிரதேசத் தைச் சேர்ந்த ஸிம்மியாஸ் இதோ இருக்கிறார். இதற்கென்றே இவர் பெருந்தொகை கொண்டு வந்திருக்கிறார். மேலும் சீப்ஸ் என்பவரும் இன்னும் பலபேரும் நீங்கள் தப்பி ஓடப் பணம் செலவிடத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, எங்களுக்காகத் தயங்க வேண்டாம். "வேறு எங்கே போனாலும் என் போன்ற குணமுடையவனுக்கும் சங்கடந்தானே? என்ன செய்வது?" என்றெல்லாம் நீதிமன்றத்தில் கூறியது போல இப்பொழுது கூறவேண்டாம். ஏதென்ஸில் நாங்கள் உங்களிடம் அன்பு செலுத்திவந்ததுபோல் நீங்கள் செல்லுமிடங்களிலும் ஏராள மானவர் அன்பு பாராட்டுவார்கள். தெஸ்ஸாலியில் உங்களைக் கொண்டாடி பாதுகாப்பாகவைத்துக் கொள்வார்கள். தெஸ்ஸாலி யில் யாரும் உங்களுக்குத் தொல்லை ஏதும் தரமாட்டார்கள். எனக் கென்னவோ நீங்கள் தப்பிக்கொள்வதற்கான வழியிருக்கும்போது உங்கள் வாழ்க்கையையே நீங்களே பாழாக்கிக்கொள்வது சரியென்று தோன்றவில்லை. இப்படி இருந்தால் உங்கள் பகைவர்களிடந்தான் வீணாக அகப்பட்டுக்கொள்ளப் போகிறீர்கள். அவர்களோ உங்களை எவ்வளவு விரைவில் அழிக்கலாம் என்று முயற்சிக்கிறார்கள்!

**சாக்ரடீஸ் தம் உயிரைத்துறப்பது நியாயம் அன்று; அவ்விதம் செய்வது, தம் குழந்தைகளை அவர் நிர்க்கதியாக விட்டுச் சென்றதற்குச் சமமாகும். இதனால் அவருடைய நண்பர்களைத்தான் கோழைகள் என்று பலரும் பழிப்பார்கள்.**

இன்னும் ஒன்று; உங்கள் சொந்தப்பிள்ளைகளைக் கைவிட்டுப் போகிறீர்களே! நீங்கள் அவர்களைவளர்த்துப் படிக்கவைக்கவேண்டியிருக்க,அவர்களை ஒரேஅடியாக விட்டுவிட்டுப் போய்விடுகிறீர்களே! பிறகு அவர்கள் கதி என்ன ஆவது? வழக்கமாக அநாதைகளுக்கு நேரும் கதி நேராவிட்டாலும் உங்களை ஒருவரும் வாழ்த்தப்போவதில்லை! கடைசிவரையில் குழந்தைகளை வளர்த்துப் படிக்கவைக்கப் பாடுபடத் தயாராயில்லாதவன், உலகத்தில் பிள்ளைகளைத்தான் பெற்றெடுப்பானேன்? நீங்களோ பொறுப்பிலிருந்து எளிதில் தப்பிவிடுகிறீர்கள்; உங்களைப்போல் எல்லாக் காரியங்களிலும் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்பவர், இப்படிச் செய்வது அழகல்ல; ஆண்பிள்ளைகளுக்கு ஏற்ற செயலாக இல்லை. நீங்கள் இப்படி நடந்துகொள்வதைப்பற்றி மட்டுமன்றி உங்கள் நண்பர்களான எங்கள் நிலையை எண்ணியும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. அதிலும், எங்களுக்குத் துணிச்சல் இராததால்தான் இவ்வளவும் நேர்ந்தது என்று எல்லாரும் சொல்வார்களே!—அதை எண்ணும் போதுதான் ஒரே அவமானமாக இருக்கிறது. இப்படி ஒரு வழக்கு விசாரணைக்கே வந்திருக்க வேண்டியதில்லை; அவ்விதம் வந்திருந்தாலும் வேறுவிதமாக அதைச் சமாளித்திருக்கலாம்; கடைசியில் இப்படி மோசமாக முடிகிறதே; இதற்கு எங்கள் அசிரத்தையும் கோழைத்தனமும்தான் காரணம்; நாங்கள் நல்லவர்களாக இருந்தால், உங்களைக் காப்பாற்றியிருக்கலாமே என்றுதானே எல்லாருக்கும் தோன்றும்? நீங்களேகூடச் சமாளித்து மீண்டிருக்கலாம். அதில் அப்படி ஒன்றும் சிரமமே இல்லை. இப்போது உங்கள் நிலையும் சரி, எங்கள் நிலையும் சரி. எப்படி ஆகிவிட்டதுபாருங்கள். எவ்வளவு சங்கடமாகவும் அவமானமாகவும் இருக்கிறது தெரியுமா? ஆகவே முடிவாகச் சொல்லுங்கள்! ஏற்கனவே முடிவு செய்திருந்தாலும்கூடச் சொல்லுங்கள்! இனி யோசிக்கநேரமில்லை; அதுவும் ஒன்றே ஒன்றுதான் செய்யலாம்; அதையும் இன்றிரவே செய்தாக வேண்டும். அப்படித் தாமதமானால் பிறகு அதுவும் சாத்தியம்

இல்லை. நடக்கவும் நடக்காது ...... ஆகவே சாக்ரடீஸ் உங்களை வேண்டிக்கொள்கிறேன். நான் சொல்வதுபோல் செய்யுங்கள்.

**சாக்.** அன்பனே கிரிட்டோ! நீங்கள் இவ்வளவு ஊக்கம் எடுத்துக் கொள்வதைப் பாராட்டுகிறேன்; அது நேரான வழியாக இருந்தால், சரிதான்; தவருக இருந்தால் இவ்வளவு முயற்சியும் பேராபத்தாக முடியுமே! ஆகவே நீங்கள் சொல்வதைச் செய்வதா கூடாதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

**பகுத்தறிவின்படி நடக்கும் மனிதர்களில் சாக்ரடீஸ் ஒருவர்.**

நான் எப்போதும் பகுத்தறிவைத் துணையாகக் கொண்டே நடக்க வேண்டியவன். இப்படி யோசித்துச் 'சிறந்தது' என்று எது எனக்குத் தோன்றுகிறதோ, அதன்படியே நடப்பவன் நான். இப்போது அதைச் சோதிக்க இந்த வாய்ப்புக் கிட்டியிருக்கிறது; நான் சொன்ன சொல்லை எப்படி மீற முடியும்? இதுவரை எந்த லட்சியங்களை மதித்து வந்தேனே அவற்றை எப்படி மறுப்பது? அவற்றை விடச் சிறந்த லட்சியங்களை நாம் கண்டுபிடிக்க முடியாதிருக்கும் வரையில் அவற்றை எப்படி மறுக்க முடியும்? அது நடக்கக் கூடாத விஷயம், பலர் கூடிச் சிறைவாசம் விதிப்பது. குழந்தைகளைப் பயமுறுத்துவது போல் மருட்டுவது—இப்படியெல்லாம் செய்தாலும் கூட அது சாத்தியமில்லை. நீங்கள் சொல்வதை யோசித்துப் பார்க்க வேண்டும் என்ருல், அதற்குச் சரியான முறை என்ன? நீங்கள் மனிதருடைய அபிப்பிராயங்களையும் கவனிக்க வேண்டும் என்றீர்களே,—சிலர் சொல்வதை மதித்து நடக்கவேண்டும், மற்றவர் சொல்வதைக் கவனிக்கவேண்டாம் என்று பேசிக் கொண்டிருந்தோமே—அந்தப் பழைய வாதத்தையே எடுத்துக் கொள்வோம். என்னைத் தண்டிப்பதற்குமுன் நாம் இந்த அபிப்பிராயம் கொண்டிருந்தது சரிதான? அப்போது சரி என்று பட்டவாதம் இப்போது வெறும் வாய்ப் பேச்சு ஆகி விட்டதா? குழந்தையின் பிதற்றலாகி விட்டதா என்ன?......கிரிட்டோ இதைத்தான் உன்னேடு சேர்ந்து ஆலோசிக்க விரும்புகிறேன்.

**பலர் சொல்கிறபடி அவர் நடக்க வேண்டுமா? நல்லோர் சொற்படியோ, தீயோர் சொற்படியோ நடப்பதா?**

நான் இப்போது இருக்கும் நிலையில் பழைய வாதம் (கொள்கை) மாறிவிட்டதா, அப்படியேதான் இருக்கிறதா என்று பார்க்க வேண்

டும்; அதை நான் ஏற்பதா வேண்டாமா என்றும் யோசிக்க வேண்டும். அதிகாரத்தில் இருக்கும் பலர் நான் சொன்னதுபோல், 'சில பேருடைய கருத்துக்களுக்கு மதிப்புத் தரவேண்டும்; மற்றவர்கள் கருத்துக்களுக்கு அப்படித் தரவேண்டாம்' என்றுதான் சொல்வதாக எனக்குத் தெரிகிறது. கிரிட்டோ! நீங்கள் நாளைக்கு இறந்துவிடப் போவதில்லை, அந்த மாதிரி நேரும் என்று யாரும் எண்ணும் நிலையிலும் நீங்கள் இல்லை—ஆகவே, எதிலும் ஈடுபாடு இல்லாமல் இருக்கிறீர்கள்; சந்தர்ப்பவசத்தால் ஏமாந்து நிற்கும் நிலையிலும் நீங்கள் இல்லை. ஆகவே, 'சில கருத்துக்களையே (சிலபேருடைய கருத்துக்களையே) மதித்துப் போற்றவேண்டும்; மற்றவர் கருத்துக்களை [பிறருடைய கருத்துக்களை] அப்படிப் போற்றுவதற்கு இல்லை' என்று நான் கருதுவது சரிதானே? சொல்லுங்கள்.

**கிரிட் :** சரிதான்.

**சாக் :** அதாவது, நல்லதைப் போற்றவேண்டும்; தீயதைப் போற்றக் கூடாது; இதுதானே சரி?

**கிரிட் :** ஆமாம்.

**சாக் :** சான்றோர்களுடைய கருத்துக்கள் நல்லவை; அறிவிலிகளின் கருத்துக்கள் தீயவை; இதுதானே சரி?

**கிரிட் :** ஆமாம்.

**சாக் :** இன்னும் ஒரு விஷயம்: உடற் பயிற்சியில் ஈடுபடுகிற மாணவன், ஒவ்வொருவரும் தன்னைப் பாராட்டுவதையும் குறை கூறுவதையும் கவனித்துக் கொண்டிருப்பதா அல்லது தன் ஆசிரியரோ அல்லது தனக்குப் பயிற்சி அளிப்பவரோ அவர்களில் ஒருவருடைய அபிப்பிராயத்தைக் கவனிப்பதா? எது முக்கியம்?

**கிரிட் :** அந்த ஒரு மனிதனுடைய அபிப்பிராயத்தைத் தான் கவனிக்க வேண்டும்,

**சாக் :** அந்த ஒரு மனிதன் கண்டிப்பான் என்று அஞ்சியோ அவன் பாராட்டுவதை விரும்பியோதான் இருக்க வேண்டும். எல்லாரும் சொல்வதைக் கவனிக்கக் கூடாது என்றுதானே சொல்கிறாய்?

**கிரிட் :** அதுவேதான்.

**சாக் :** மற்ற எல்லோருடைய கருத்தின்படி நடப்பதைவிடத் தன் ஆசிரியருக்கு எது நல்லது என்று படுகிறதோ அதன்படி செய்து, பயிற்சி பெற்று, ஆசிரியரைப்போல, தக்கதை உண்டும் பருகியும் வாழ வேண்டும். ஏனென்ருல், அந்த ஆசிரியரே விஷயம் அறிந்தவர்; சரிதானே ?

**கிரிட்:** உண்மைதான்.

**சாக் :** அந்த ஓர் ஆசிரியருடைய கருத்தை மீறி, "அவரது சம்பந்தம் தேவையில்லே; விஷயம் தெரியாத மற்றவர்களின் அபிப்பிராயமே முக்கியம்" என்று எண்ணினுல் உடற்பயிற்சியில் ஈடுபட்டவனுக்குத்தானே கேடுவரும்?

**கிரிட் :** ஆமாம் நிச்சயமாக அவனுக்குத்தான் கெடுதல்.

**சாக் :** இப்படி மீறுபவனுக்கு என்ன கெடுதல் நேரும் ; அது எவ்வளவு அபாயகரமாக இருக்கும், அவனே அது எப்படிப் பாதிக்கும் என்பது தெரியுமா ?

**கிரிட் :** அவன் உடலே நிச்சயமாகப் பாதிக்கும். இப்படிக் கெடுதல் காரணமாக அந்த உடல் கெட்டுவிடுகிறது.

**ஒரு ஞானி சொல்வதையே பின்பற்ற வேண்டும்.**

**சாக் :** சரி; ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்துக் கூறத் தேவையில்லே. இதுபோன்ற மற்ற விஷயங்களுக்கும் இது பொருந்தும் அல்லவா ? நீதி அநீதி, நேர்மை ஊழல், நன்மை தீமை போன்ற விஷயங்களேப் பற்றித்தானே இப்போது பேசுகிருேம். இந்த மாதிரி விஷயங்களில் நாம் பலருடைய கருத்தைப் பின்பற்ற வேண்டுமா ? அவர்களுக்கு அஞ்ச வேண்டுமா ? அல்லது விஷயம் அறிந்தவனுடைய கருத்துக்கு மதிப்புத் தரவேண்டுமா ? உலகத்தில் மற்ற எல்லாரையும்விட அவனுக்குத்தானே அஞ்சி நடக்க வேண்டும்? அவனேத்தானே மதித்து வரவேண்டும் ? அவனேக் கைவிட்டால் நாம் கொண்ட லட்சியத்தையே பாதிப்பாக, அழிப்பதாக முடியும் அல்லவா ? நியாயமாக இருந்தால் அந்த லட்சியம் பின்னும் வளர்ச்சி பெறுகிறது. அநியாயமாக இருந்தால் வளர்ச்சி குன்றுகிறது.—இப்படிப்பட்ட லட்சியம் ஒன்று உண்டல்லவா ?

**கிரிட் :** நிச்சயமாக உண்டு, சாக்ரடீஸ்!

**சாக் :** இதே மாதிரி இன்னும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். விஷயம் தெரியாதவர்கள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்கிறோம்; ஆரோக்கியத்தால் வளர்ச்சி பெற்றும், நோயால் குன்றியும் வருகிற உடலைப் பாழாக்கிக் கொள்கிறோம்; அதற்குப் பிறகு வாழ்ந்து என்ன பயன்?..., இப்படிப் பாழாவது இந்த உடம்புதானே?

**கிரிட் :** ஆமாம்.

**சாக் :** கெட்டுப்போன உடலைக்கொண்டு உயிர்வாழமுடியுமா?

**கிரிட் :** நிச்சயமாக முடியாது.

**சாக் :** ஆகவே, நீதியினால் வளர்ச்சி பெற்று, அநீதியினால் குன்றி விடுகிற மனிதனின் உயர்ந்த பகுதியாகிய மனிதப்பண்பு கெட்டுவிட்ட பிறகு, வாழ்ந்து என்னபயன்? இப்படி மனிதனிடம் உள்ள ஒரு பண்பு நீதியோடும் அநீதியோடும் சம்பந்தப்பட்ட ஒரு லட்சிய உடம்பைவிட மதிப்புக் குறைவானதா?

**கிரிட் :** நிச்சயமாக அப்படி ஆகாது.

**சாக் :** ஆகவே, உடம்பைவிட அது மதிக்கத் தக்கது என்கிறாய்; அது தானே?

**கிரிட் :** ஆமாம்; உடம்பையும்விட அது எவ்வளவோ உயர்ந்தது.

**பலர் சொல்வதைக் கவனிக்க வேண்டாம்.**

**சாக் :** அப்படியானால், நாலு பேர் நம்மைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதைப் பாராட்டக் கூடாது; நீதி, அநீதி இரண்டையும் கண்டறிந்த மனிதன் சொல்வதையே போற்ற வேண்டும். சத்தியத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஆகவே, 'நீங்கள் பலர் நீதி அநீதி, நன்மை தீமை, பெருமை, இழுக்கு இவைகளைப்பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மதித்து நடக்க வேண்டும்.' என்று பேச ஆரம்பித்ததே தவறு. 'அது சரி, அந்தப் பலர் நம்மைக் கொன்றும் விடலாமே!' என்று சிலர் சொல்லலாம் அல்லவா?

**கிரிட் :** ஆமாம், அப்படித்தான் சொல்வார்கள் நிச்சயமாக.

**சாக் :** அது உண்மையே... இவ்வளவு தூரம் ஆராய்ந்தும் நம் பழைய வாதத்தை அசைக்க முடியவில்லை பார்த்தாயா? அது தான் ஆச்சரியமாக இருக்கிறது! இன்னும் ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம்.

**வாழ்வது முக்கியமன்று; நல்வாழ்வுதான் மதிப்புக்குரியது.**

'வெறும் வாழ்வை முக்கியமாகக் கருதக்கூடாது; உயர்நீதி வாழ்வைத்தான் முக்கியமாகக் கருதவேண்டும்!'—இதுவும் அதே மாதிரி உண்மைதானே?

**கிரிட் :** ஆமாம்; இதுவும் அசைக்க முடியாத உண்மையே!

**சாக் :** நல்லபடியாக வாழ்வதென்ருல், நேர்மையாகவும் மதிப்போடும் வாழ்வது என்றுதானே பொருள்?

**கிரிட் :** அப்படித்தான்.

**சாக் :** இனி அதை அடிப்படையாகக் கொண்டு, 'எதீனியர்களின் சம்மதமன்றி நான் தப்பி ஒடுவதா, வேண்டாமா?' என்று வாதிக்கிறேன்...... அப்படித் தப்பி ஒடுவது சரிதான் என்று தெளிவாகப்பட்டு விட்டால், தப்ப முயன்று பார்க்கிறேன்; இல்லாவிட்டால் அப்படி முயற்சி ஏதும் செய்யாமல் இருந்து விடுகிறேன். நீங்கள் பணம், என் பெயர் கெட்டுவிடும், சொந்தக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க முடியாது என்றெல்லாம் சொல்கிறீர்களே, இவை சாமானிய-பெரும் மக்களின் கொள்கை. ஒரு காரணமும் இல்லாமல் மனிதரைக் கொல்லவும் அவர்கள் தயாராயிருப்பார்கள்; அதே மாதிரி, தங்களால் முடிந்தால் அவர்களுடைய உயிரை மீட்கவும் தயாராயிருப்பார்கள்.

**இந்த லட்சியங்களை ஏற்ற நான் தப்பியோடுவதா, கூடாதா?**

ஆனல், நான் முதலில் எடுத்துச் சொன்ன வாதம் அப்படியே நீடித்திருப்பதால் இனி, 'இப்படி நாம் தப்புவதும், நாம் தப்புவதற்கு மற்றவர்களை நமக்குத்துணை புரியும்படி அவர்களுக்குப் பணமும் நன்றியும் செலுத்துவதுந்தான் சரியா? இல்லாவிட்டால், உண்மையிலேயே அப்படிச் செய்வது தவறுதான?' என்பதையே ஆராயவேண்

டும். தவறுதானென்றால், நான் இங்கே இருந்து சாவதைப்பற்றியோ வேறு எவ்விதமாகவேனும் துன்பம் அநுபவிப்பதைப் பற்றியோ எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது.

கிரிட்: நீங்கள் சொல்வது சரி என்றுதான் எனக்குத் தோன்றுகிறது......வேறு என்னதான் செய்யலாம்; சொல்லுங்கள்?

சாக்: நாம் இரண்டு பேருமாகச் சேர்ந்து யோசிப்போம். நீ நான் சொல்வதற்குப் பொருத்தமானபடி மறுத்துக் கூறுவாயானால், நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். அது சாத்தியமில்லையானால், 'எதீனியர்களின் விருப்பம் நிறைவேறுதபடி தப்பி ஓடிவிடுங்கள்' என்று திரும்பத் திரும்பச் சொல்வதை நிறுத்திக் கொள். நீங்கள் இவ்விதமெல்லாம் என்னைத் தூண்டுவதை (உன் முயற்சியை) நான் பாராட்டத்தான் பாராட்டுகிறேன். ஆயினும் எனக்கு நல்லது என்று தோன்றுகிற ஒரு முடிவை மீறி, நீங்கள் சொல்வதை ஏற்பதற்கில்லை. இனி நான் முதலில் சொன்ன என் கொள்கையைக் கவனித்து அதற்குப் பொருத்தமான முறையில் பதில் சொல் பார்க்கலாம்.

கிரிட்: சொல்கிறேன்

**நன்மை ஏற்பட வேண்டும் என்பதற்காகச் சில சமயம் தீமை புரியலாமா?**

சாக்: 'வேண்டுமென்றே நாம் தவறு செய்வதில்லை என்றோ, ஒரு விதத்தில் பார்த்தால் தவறு செய்யலாம்; இன்னொருவிதத்தில் பார்த்தால் அப்படிச் செய்யக்கூடாது என்றோ' சொல்லலாமா? அல்லது, நான் சற்று முன் கூறியதுபோல் 'தவறு செய்வது எப்பொழுதும் கெடுதல், இழுக்கு' என்று கொள்ளலாமா? இதுதான் சரி என்று நாம் ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இப்படிச் சில நாட்களுக்கு முன் நாம் ஒப்புக் கொண்டவற்றை யெல்லாம் உதவி எறிவதா? வாழ்நாள் முழுவதும் ஒருவரோடொருவர் மனப்பூர்வமாகச் சர்ச்சை செய்து வந்திருந்தும்—இவ்வளவு வயதாகியும் குழந்தைகளைவிட மேலாக அறிவில் முதிர்ந்து விடவில்லை என்பதைத்தானு தெரிந்து கொண்டோம்! இல்லா விட்டால் நாலுபேர் சொல்வதையும் மீறி, அதனுல் நன்மையோ தீமையோ நேர்ந்தாலும் சரி, முன் சொன்னது போல் 'ஒருவன் (அநீதியாக) நேர்மையற்று

நடப்பது அவனுக்கு என்றென்றும் தீமையே பயக்கும்; இழுக்கே உண்டாகும்.' என்று வலியுறுத்திச் சொல்லலாமா?

கிரிட் : சொல்ல வேண்டியதுதான்.

சாக் : ஆகவே, நாம் தீமை புரியக்கூடாது; அதுதானே?

கிரிட் : புரியக் கூடாதுதான்.

சாக் ; 'அடியுண்டவன் பதிலுக்கு ஊறு செய்வது சகஜந்தான்' என்பதே பலருடைய அபிப்பிராயம்; நாம் யாருக்கும் ஊறு விளைவிக்கக்கூடாது. அதுதானே?

கிரிட் : ஆமாம்; நிச்சயமாகத் தாக்கவே கூடாதுதான் :

சாக் : மறுபடியும் கேட்கிறேன், கிரிட்டோ; சொல் : நாம் தீமை புரியலாமா?

கிரிட் : நிச்சயமாகக் கூடாது, சாக்ரடீஸ்!

சாக் : 'தீங்கு செய்வதற்குப் பழி தீர்த்துக்கொள்ள வேண்டும்' என்பது பலருடைய நீதிமுறை :—இது சரியா, தவறு?

கிரிட் : சரியன்று.

சாக் : ஏன் ஒருவனுக்குத் தீங்கு புரிவதென்றால் அவனைத் தாக்கின மாதிரிதானே?

கிரிட் : ஆமாம்; உண்மைதான்.

**தீமைக்குத் தீமை புரியலாமா?**

சாக் : ஆகவே, ஒருவன் தீங்கு செய்தாலும், அதனால் நாம் துன்பம் அனுபவித்தாலும் நாம் பதிலுக்குத் தீங்கு புரியக்கூடாது, பழிக்குப்பழி வாங்கக்கூடாது. ஆனால், கிரிட்டோ, நீ சொல்வதை எண்ணி உண்மையாகவே கடைப்பிடிக்கிறாயா என்றுதான் கேட்கிறேன். ஏனென்றால் இந்தமாதிரி ஒரு கருத்தைப் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டதும் இல்லை. இனிமேல் ஏற்றுக் கொள்ளப்போவதும் இல்லை. இந்த ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்பவர்கள், ஒப்புக்கொள்ளாதவர்கள் இந்த இரண்டு சாராரும் இணங்கிப் போகவே இடம் இல்லை. இருவர் கருத்துக்கும் அதிக

வேற்றுமை இருப்பதால் இவர்கள் ஒருவரையொருவர் பழித்துக் கொள்கிறார்கள். இனி என் முதல் லட்சியத்தை எடுத்துக்கொள்ளு வோம். பிறனுக்கு ஊறு செய்வதோ அல்லது அவனைப் பதிலுக்குத் தாக்குவதோ அல்லது அவனுக்குத் தீங்கிழைத்துத் தனக்கு அது நேராதபடி தடுத்துக்கொள்ளுவதோ இவையொன்றும் நேர்மை யாகாது. இது சரி என்று ஒப்புக்கொள்ளுகிறாயா? இதை ஆதாரமாகக் கொண்டு வாதிக்கலாமா, இல்லாவிட்டால் இது தவறு என்று மறுக்கிறாயா? அந்தமாதிரிதான் நான் எப்போதும் எண்ணி வருகிறேன், இன்னும் அப்படியேதான்.

**தீமையை என்றும் தீமையாகவே கருதுவதா? இவைகளைப்பற்றிய உன்னுடைய பழைய கருத்து மாறவில்லையா?**

உன் அபிப்பிராயம் வேறாக இருந்தால் சொல் கேட்கிறேன். அப்படி முன்போலவே கருத்து மாறாமல் இருக்குமானால் இதற்கு அடுத்தபடியாகச் சொல்லவேண்டிய விஷயத்தைத் தொடங்கு கிறேன்.

**கிரிட்டோ 'அப்படியேதான் இருக்கிறது' என்கிறார்.**

**கிரிட்:** சரி, சொல்லுங்கள் பழைய கருத்தை நான் மாற்றிக் கொள்ளவில்லை.

**சாக்:** சரி; அடுத்த விஷயத்தைக் கேள்வியாகக் கேட்கிறேன். தனக்குச் சரி என்று பட்டதை ஒருவன் செய்யவேண்டுமா? கூடாதா?

**கிரிட்:** சரியென்று பட்டதை அவன் செய்யத்தான் வேண்டும்.

**அப்படியானால் சாக்ரடீஸ் ஓடிவிடுவதா? கூடாதா?**

**சாக்:** இது உண்மையாக இருக்குமானால் அதை நடை முறையில் கொண்டு வருவது எப்படி? எதீனியர்களின் விருப்பத் திற்கு மாறாக நான் சிறையிலிருந்து தப்பிவிட்டால் அதனால் யாருக் காவது தவறு இழைக்கிறேனா? என்று பார்ப்போம். நான் யாருக்குத்

தவறு இழைக்கவே கூடாதோ அவர்களுக்கு இடையூறு விளைத்த தாகத்தானே அது முடியும்? அப்படிச் செய்வதானது நாம் நேர்மை யானவை என்று ஒப்புக்கொண்ட லட்சியங்களைக் கைவிட்டது போலத்தானே? இதற்கு என்ன சொல்லுகிருய்?

**கிரிட் :** என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை சாக்ரடீஸ்

**சாக் :** அப்படியானல் இந்த முறையில் ஆராயலாம். நான் தப்பி ஓடத் தயாராக இருக்கிறேன். (தப்பி ஓடுவது என்று சொல் லுங்கள் அல்லது வேறு எப்படி வேண்டுமென்றாலும் சொல்லிக் கொள்ளுங்கள்.) அப்போது ஏதென்ஸ் சட்டங்களும், அரசாங்கமும் என்னிடம் வந்து, "இதென்ன சாக்ரடீஸ் நீ செய்வது? நீ இப்படித் தான்தோன்றியாக வந்து எங்களை—சட்டம், அரசாங்கம் முழுவதை யும்தான்—அழித்துவிடப் பார்க்கிருயே! தனி மனிதர்கள் இப்படிச் சட்டத்தைப் புறக்கணித்து மிதித்து அவமதித்தால் சட்டப்படி செய்த முடிவுகளுக்குச் சக்தி இராது போனல் அந்தமாதிரி ஓர் அரசாங்கம் அழியாமல் அப்படியே இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கிருயா?" என்று கேட்டால் நாம் என்ன பதில் சொல்லு வது கிரிட்டோ? சட்டப்படி தண்டனை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். ஆகவே யாரும் முக்கியமாக வாக்கு வன்மை கொண்ட எவரும் சட்டத்தின் சார்பாக எவ்வளவோ பேசமுடியும். அவர் எப்படி வாதாடுவார் தெரியுமா? 'இச்சட்டத்தைப் புறக் கணிக்கக்கூடாது' என்று தான் சொல்வார். நாம் அவருக்கு 'அதுசரி ஆனல் அரசாங்கம் எங்களுக்கு ஊறு செய்துவிட்டதே; அநீதியான தண்டனையைக் கொடுத்திருக்கிறதே' என்றுதான் பதில் சொல்லவேண்டுமா? அப்படிச் சொல்வதாகக் கொள்வோம்!

**கிரிட் :** அதுதான் சரி, சாக்ரடீஸ்!

**சட்டம் அவர் எதிரில்தோன்றி அவரோடு வாதாடுகிறது.**

**சாக் :** அப்போது சட்டம், "நமக்குள் இப்படித்தான் மீறுவ தாக ஒப்பந்தமா?" அரசாங்கத்தின் தண்டனையை ஏற்கப் போவ தில்லையா?" என்று பதிலுக்குக் கேட்கிறது. இதைக்கேட்டு நான்

ஆச்சரியப்பட்டால், சட்டம் அதற்கு மேலும் சொல்லலாம். "கண்களை அப்படி அகல விரிப்பதை விட்டு நான் சொல்வதற்குப் பதில் கூறு, சாக்ரடீஸ்—நீ கேள்வி கேட்டுப் பதில் சொல்லிப் பழக்கப்பட்டிருக்கிருயே, சொல். எங்களையும், அரசாங்கத்தையும் அழிக்க முனைந்தாயே; எங்கள்மீது தவறு என்ன இருக்கிறது சொல். முதலாவதாக, நீ இன்று இருப்பதே எங்களால் தானே. உன் தந்தை, உன்தாயை எங்கள் துணைகொண்டுதானே மணந்து உன்னைப் பெற்றெடுத்தான்? மணவினையை வரையறுத்து வைத்திருக்கும் எங்களில் எவர் மேலேனும் குறைகூற ஏதாவது உண்டா சொல்?" என்று கேட்கும்.

சட்டங்களைச் சாக்ரடீஸ் குறைகூற முடியுமா?

இதற்கு, 'ஒன்றும் இல்லையே' என்று தான் பதில் சொல்ல வேண்டியிருக்கும். "அப்படி இல்லாவிட்டால் குழந்தைகள் பிறந்த பின், அவர்களை வளர்க்கும் போதும், கல்வி புகட்டும் போதும் எங்களில் சிலர் சட்டங்களை விதித்து வைத்திருக்கிறேமே அவர்கள் மீது குறைகள் ஏதாவது உண்டானல் சொல்; நீயும் அந்த முறையில்தான் வளர்ந்து பயிற்சி பெற்றிருக்கிருய். கல்விக்குரிய சட்ட விதிகளின்படி உன் தந்தை உன்னைச் சங்கீதத்திலும், உடற்பயிற்சியிலும்* பழக்கினனே, அச்சட்ட விதிகள் சொல்லுவது சரியல்லவா?" என்று சட்டம் கேட்கிறது, அதற்கு நான், 'சரிதான்' என்றே பதில் சொல்ல வேண்டியிருக்கும். "அது சரி; எங்களால் நீ இவ்வுலகத்தில் தோன்றினுய். உன்னை நாங்கள் வளர்த்துக் கல்வியைப் புகட்டினேமே; அப்படி இருக்கும்போது நீ எங்கள் குழந்தையும் அன்று, அடிமையும் அல்ல, என்று துணிந்து சொல்ல முடியுமா? உன் தந்தை முதலிய முன்னேர்களும் அப்படித்தான் எங்களுக்கு அடங்கி யிருந்தார்கள். இது உண்மையாக இருக்குமானல் நீயும் நாங்களும் சமம் என்று சொல்வதற்கில்லை. நாங்கள் உனக்கு என்ன செய்கிறேமோ அதற்குப் போட்டியாக நீ எங்களுக்கும் செய்ய உரிமை உண்டு, என்றும் எண்ணுதே!

---

* 'சங்கீதம்' என்று கிரேக்கர் கொண்டாடிவந்த துறையில் இலக்கியம், நுண்கலைகள் யாவும் அடங்கும். ஒன்பது தேவதைகள் ஒவ்வொன்றிற்கும் உரிய அதிதேவதைகளாக இருந்தன.

**தந்தை தாயைத் துன்புறுத்த யாருக்கும் உரிமை இராததுபோல் நாட்டைத் தாக்கவும் உரிமை கிடையாது.**

"உனக்குத் தந்தையோ எஜமானனோ இருந்து அவன் உன்னை அடித்தோ, திட்டியோ ஏதாவது தீங்கு செய்து இருந்தால் அதற்காக நீ அவனை அடிக்கவோ, திட்டவோ வேறு எதாவது தீங்கோ புரிவதற்கு உனக்கு உரிமை உண்டா! இருக்கிறது என்று சொல்ல மாட்டாயே? உன்னை நாங்கள் அழிப்பது சரிதான் என்று நாங்கள் எண்ணினல் நீயும் பதிலுக்கு எங்களையும், உன்னுடைய நாட்டையும் அழிக்க உனக்கு உரிமை உண்டு என்று சொல்லிவிடுவதா? சத்திய சந்தன் என்று சொல்லிக் கொள்கிருயே; இப்படி செய்வது நியாயம் என்று மனமாரச் சொல்லுவாயா? (இப்படிச் சொல்லுவது வெறும் பாசாங்கு தானே) தத்துவ வாதியான நீ, 'தாய் தந்தையர், மூதாதையர் இவர்களை யெல்லாம் விட (நமது) நாடு மிகவும் மதிப்புக்குரியது. மேலானது, புனிதமானது' என்பதைக்கண்டு கொள்ளத் தவறிவிட்டாய். தேவர்கள் ஞானிகள் இவர்களெல்லாம்கூட அதைப்பாராட்டிப் போற்றுகிருர்களே! அந்த நாடு கோபமுற்ருல் அதைப் பணிவாகச் சமாதானம் செய்து தந்தையிடம் செலுத்துவதைவிட அதிக பக்திசிரத்தை செலுத்தி வேண்டிக்கொள்வதே முறை. அதை நயமாகச் சமாதானப்படுத்திப்பார்த்து அது சாத்தியமில்லாவிட்டால் அதற்கு அடங்கி நடக்கவேண்டியதே முறை. தாய் நாடு நம்மைச் சிறையில் அடைத்தோ கசையடி கொடுத்தோ தண்டித்தால் மௌனமாக நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். போரில் காயமுறவோ சாகவோ தாய்நாடு அழைத்தாலும் நாம் போக வேண்டியதுதான்; அதுவே உத்தமம்; யாரும் (எதிரிக்குப்) பணியவோ, பின்வாங்கவோ, தன் இடத்தை விட்டு ஓடவோ கூடாது. போரிலும் சரி, நீதி மன்றத்திலும் சரி, பிற இடங்களிலும் சரி, ஒருவன் தன் நகரம் அல்லது நாடு உத்தரவு இடுகிறபடி நடந்தாக வேண்டும். இல்லாவிட்டால் நகரம் அல்லது நாட்டினிடம் இதுதான் நீதி என்று சொல்லி அதன் கருத்தை மாற்ற வேண்டும். தாய் தந்தையர்களுக்குத் தீங்கு செய்யாமலிருப்பது போல் நாட்டுக்கும் தீங்கிழைக்காமல் இருக்கவேண்டும் தெரிகிறதா?" என்று சட்டம் கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்லுவது, கிரிட்டோ? சட்டம் சொல்வது உண்மையா, இல்லையா?

கிரிட் ; உண்மைதான் என்று தோன்றுகிறது.

**சட்டத்தை மதித்து நடப்பதாக ஏற்கெனவே ஓர் அனுமான ஒப்பந்தம் செய்திருக்கிறேன். அதை உன் விருப்பம்போல மீறக்கூடாதென்று சட்டம் வாதிக்கிறது.**

சாக் : பிறகு சட்டம் என்ன சொல்லும் தெரியுமா? "இப்படி நீ செய்யப் பார்ப்பது எங்களுக்கு ஊறு செய்கிற மாதிரிதானே? நாங்கள் சொல்லுவது உண்மைதானே; சாக்ரடீஸ், நீயே யோசித்துப் பார்! உன்னை உலகத்தில் கொண்டுவந்து சேர்த்து. வளர்த்து உனக்குக் கல்வி புகட்டினேம்; உனக்கும் மற்ற எல்லாக் குடிமக்களுக்கும் எங்களாலான நன்மையெல்லாம் செய்தோம். இன்னும்கூட ஏதென்ஸ் வாசியாக—சுதந்திரமாக நடந்துகொள் வதற்கு உரிமை வழங்கி இருக்கிறேம். அதாவது அவனுக்கு உரிய வயது வந்து பிறகு நகரத்தின் போக்கைக் கவனித்து எங்களைத் தெரிந்து கொண்டபிறகு அப்படி எங்களுக்கு அவனிடம் வெறுப்பு மூண்டால் அவன் எங்கே வேண்டுமானாலும் புறப்பட்டுப் போகலாம் தன் ஆஸ்தி முதலியவற்றையும் உடன் கொண்டுபோகலாம். எந்தச் சட்டமும் அவனைத் தடுக்கவோ, அவன் விஷயத்தில் தலையிடவோ முன்வராது. எங்களையோ நகரத்தையோ யாருக்கேனும் பிடிக்கா விட்டால் இங்கிருந்து வேறு பிரதேசத்திற்கோ நகரத்திற்கோ அவன் போய் வசிக்க விரும்பினுல் தாராளமாகப் போகலாம். அவன் சொத்து அப்படியே இருக்கும், (பறிமுதல் செய்யப்படமாட்டாது.) ஆனுல் நாங்கள் நீதிபரிபாலனம் செய்யும் முறையையும் நாட்டை நிர்வகிக் கும் முறையையும் பெற்ற அனுபவமுள்ள ஒருவன், பிறகும் இந்த நாட்டிலேயே இருந்தால் அவன் எங்கள் உத்தரவுக்குப் பணிந்து நடக்கச் சம்மதிக்கிருன். அப்படி எவனேனும் எங்களை மீறி நடந்தால் எங்கள் கருத்துப்படி அவன் மூன்று விதத்தில் தவறு செய்வதாகக் கொள்ளுகிறேம்.

"முதலாவதாக எங்களை மீறிச் சட்டத்தை மீறுவதால் அவன் தன் பெற்றோரையும் மீறுகிருன் என்றுகிறது.

"இரண்டாவதாக அவனுடைய கல்விக்குக் காரணமாக இருந்த எங்களையே அவன் எதிர்க்கிருன்.

"மூன்ருவதாக அவன் எங்கள் கட்டளையை நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டிருந்தும் அவற்றிற்கு அடங்காமலும் நாங்கள் இடும் கட்டளைகள் அநீதியானவை என்று தெளிவுபடும்படி விளக்காமலும் இருக்கிருன்.

"இந்த உத்தரவுகளை நாங்கள் முரட்டுத்தனமாக அவன்மீது சுமத்தவில்லை, 'இவற்றிற்கு அடங்கிநட, இல்லாவிட்டால், எங்களுக்கு, நீ சொல்லுவது சரி என்று தெளிவுபடும்படி விளக்கிச் சொல்', என்றுதான் சொல்லுகிருேம். ஆனல் அவன் இவற்றில் ஒன்றையும் செய்வதில்லை.

"நீ உன் விருப்பப்படி நடந்தால் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் நீ ஆளாக வேண்டியிருக்கும்; தெரிகிறதா சாக்ரடீஸ்? மற்ற எதீனியர்களைவிட, முக்கியமாக நீதான் இவற்றிற்கெல்லாம் ஆளாக வேண்டியிருக்கும்" என்று சட்டம் சொல்லும். அப்போது நான், 'மற்றவர்களைவிட அப்படி என்ன நான் முக்கியம்?' என்று கேட்பதாக வைத்துக்கொள்வோம். சட்டம் உடனே, "மற்றெல்லாரையும் விடத் தெளிவாக நீ அடங்கி நடக்க ஒப்புக்கொண்டிருக்கிருய்! அதற்கு அத்தாட்சி என்ன தெரியுமா?, சாக்ரடீஸ், நாங்களோ இந்த நகரமோ உனக்கு அப்படி ஒன்றும் பிடிக்காமல் போய்விடவில்லை. மற்றெல்லா எதீனியர்களைவிட நீதான் இங்கே நிலையாக இருந்து வந்திருக்கிருய். இந்த ஊரை விட்டு வெளியே நீ போகவில்லை என்ருல் இந்த ஊர் உனக்குப் பிடித்திருக்கிறது என்றுதானே எண்ண வேண்டியிருக்கிறது. இராணுவ சேவையின் போது ஒரே ஒரு தடவை இந்துமஸ்* பிரதேசத்திற்கோ வேறு எங்கேயோ போயிருக்கிருயே தவிர, விளையாட்டு வேடிக்கைகளைப் பார்க்கக்கூட இந்த ஊரைவிட்டு வெளியே நீ போனதில்லை. மற்றவர்களைப் போல் வெளியூர் பயணமும் மேற்கொண்டதில்லை. மற்ற நாடுகளையோ அவற்றின் சட்டங்களைப் பற்றியோ அறிய வேண்டும் என்ற ஆசையும் உனக்கு இருந்ததில்லை. எங்களையும் நம் நாட்டையும் தவிர எந்த அந்நிய நாட்டின் மேலும் உனக்குப் பற்று இருந்த

* ஒன்று விட்டு ஒரு வருஷம் கொரிந்த் என்ற இடத்துக்கருகில் உள்ள பூசந்தியில் உடற்பயிற்சிப் போட்டி, குதிரைப் பந்தயம், கவிதை, சங்கீதப் போட்டி இவை நடக்கும்.

தில்லே. நாங்கள்தான் உனக்குப் பிடித்திருந்தோம்: நீயும் எங்கள் ஆட்சிக்குட்பட்டு அடங்கி நடந்தாய். இதே ஊரில்தான் மக்களைப் பெற்றெடுத்தாய். இது நீ திருப்தியோடு வாழ்வதற்கு அடையாளந் தானே? விசாரணையின் போது நீ விரும்பி இருந்தால் 'நாடு கடத்தி விடுங்கள்' என்று சொல்லியிருக்கலாம். இப்போது உன்னைப் போக விடாதபடி தடுக்கும் அரசாங்கம் அப்படி நீ சொல்லியிருந்தால் உன்னைப் போகவிட்டிருக்குமே! ஆனால் நீயோ; நாடுகடத்தப்பட்டு வாழ்வதைவிடச் சாவதே மேல். 'அப்படிச் சாகத் தயார்' என்று சொல்லிப் பாசாங்கு காட்டினாய். (நாட்டுப் பற்று போன்ற) இந்த அருமையான பண்புகளை எல்லாம் இப் போது நீ மறந்து விட்டாய்! எங்களுக்கு மரியாதை செலுத்துவ தில்லே, எங்களை அழிக்கப் பார்க்கிறாய். இந் நகரின் குடிமகனாக இருக்க இசைந்து அப்படி ஆணையெல்லாம் இட்ட நீ, இப்போது இழிந்த நிலையிலிருக்கும் ஓர் அடிமை செய்கிற காரியத்தைத்தானே செய்கிறாய், இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு. வெறும் வாய்ச் சொல்லாக மட்டுமா நீ எங்களுக்கு அடங்கி நடப்பதாக ஒப்புக் கொண்டாய்? நடை முறையிலும் அப்படி இருந்ததில்லையா? இது உண்மையா இல்லையா நீயே சொல்?" என்று கேட்கும். இதற்கு எப்படிப் பதில் சொல்லுவது, கிரிட்டோ? உண்மை என்றுதானே ஒப்புக் கொள்ளவேண்டும்:

**கிரிட்:** வேறு வழியில்லையே, ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும், சாக்ரடீஸ்!

**இந்த ஒப்பந்தத்தை மீறப்போகிறாயா? என்று சட்டம் கேட்கிறது.**

**சாக்:** அப்போது சட்டம், "சாக்ரடீஸ் நீ நிம்மதியாக இருந்த போது, எந்தவிதமான அவசரமோ, நிர்ப்பந்தமோ இராமல் வாழ்ந்த போது—ஏமாறுவதற்கே இடம் இல்லாத நிலையில்—இந்த விதிகளின்படியும் ஒப்பந்தங்களின்படியும் நடப்பதாக ஆணையிட் டாயே; இப்போது அவற்றை மீறுகிறாயே! எழுபது வருஷ காலம் இதைப்பற்றியெல்லாம் யோசிக்க நேரம் இருந்தும் சட்டத்தை மீறத்துணிகிறாயே! எங்களை (சட்டதிட்டம்) உனக்குப் பிடிக்கவில்லை யென்றால் நேர்மையற்றவை என்று உனக்குத் தோன்றினால் தாராளமாக இந்த நகரத்தை விட்டு நீ போயிருக்கலாமே! உன்

விருப்பம் போல் லாஸிடெமானுக்கோ, கிரிட்டுக்கோ (அந்த இரண்டு நாடுகளையுந்தான் நீ அடிக்கடி புகழ்வாய்; அங்கே நல்லாட்சி நடப்பதாகச் சொல்லுவாய்) வேறு கிரேக்க நாடுகளுக்கோ போயிருக்கலாமே! மற்ற எதீனியர்களை யெல்லாம் விட நீதான் சொந்த நாட்டின் மேல்—அதாவது எங்கள் மீது தான் (சட்டம் இல்லாத நாட்டை யார் பொருட் படுத்துவார்கள்?)—அதிகப் பற்றுக் கொண்டிருந்தாய். தாய் நாட்டைவிட்டு வெளியே சென்றதுகூட இல்லை. குருடர்களும், அங்க ஹீனர்களும்கூட உன்னைப்போல் அவ்வளவு நிலையாக ஓர் இடத்தில் இருந்ததில்லை. அப்படி இருந்த நீ இப்போது ஒப்பந் தங்களை யெல்லாம் மீறிவிட்டு ஓடிப்போகிறாயே! இப்படிச் செய் யாதே சாக்ரடீஸ்! ஊரைவிட்டு ஓடிவிட்டுப் பல பேருடைய கேலிக்கு ஆளாகாதே!

**, அப்படிச்செய்தால் உன் நண்பர்களுக்குத் தீங்கும் உனக்கு அவமானமுமே நேரும்' என்கிறது சட்டம்.**

"நீ இப்படி மீறினால்—முறைதவறி நடந்தால்—இதனால் உனக்கும் உன் நண்பர்களுக்கும் என்ன நன்மை கிடைக்கப் போகிறது? யோசித்துப் பார். ஊரார் உன் நண்பர்களை நாட்டை விட்டு விரட்டிவிடுவார்கள். அவர்கள் பிரஜா உரிமையை இழக்க நேரிடும், இல்லாவிட்டால் சொத்தை இழக்க வேண்டிவரும்; இது என்னவோ நிச்சயம். நமக்குச் சமீபத்தில் நல்லாட்சிக்குப் பெயர் போன தீப்ஸ் அல்லது மெகாரா போன்ற ஊருக்குப் போனால் உன்னை அங்கே பகைவனாகத்தான் கருதுவார்கள். அந்த அர சாங்கமும் உனக்கு எதிராகவே இருக்கும். நாட்டின் மீது பற்றுள்ள குடிமக்கள் எல்லாரும் 'சட்டத்தைக் குலைக்கும் இவன் இங்கே எதற்காக வந்தான்?' என்று தான் உன்னை வெறுப்போடு நோக்கு வார்கள். அங்கே உள்ள நீதிபதிகளின் மனத்திலும், 'நாங்கள் உன்னைத் தண்டித்தது நியாயமே' என்று படும்படி செய்து விடு வாய். சட்டத்தைக் குலைப்பவன் வாலிபர்களையும், அறிவில்லாத மக்களையும் கெடுக்கத்தானே செய்வான்? சீரான அரசாங்கம் நடக் கும் ஊர்களை விட்டும், நல்லவர்களிடமிருந்தும் இப்படி நீ தப்பி ஓடிக்கொண்டே இருப்பாயா? இந்த மாதிரி ஒடு வாழ்வு வாழ்ந்து

தான் என்ன பயன்? அல்லது நாணமின்றி அவர்களிடம் சென்று பேசுவாயா, சாக்ரடீஸ்? என்ன பேசுவாய்? இங்குச் சொல்லுவது போல், 'நேர்மை, நீதி, சம்பிரதாயங்கள், சட்டங்கள் எல்லா வற்றையும் மக்கள் மேலாகக் கருத வேண்டும்' என்று அங்கும் சென்று சொல்வாயா? அப்படிப் பேசுவது நன்முக இருக்குமா? நிச்சயமாக நன்முக இராது. அப்படி நல்லாட்சி நடைபெறும் நாடுகளை விட்டுக் குழப்பமும் கலவரமும் மிகுந்த தெஸ்ஸாலியில் வாழ்கிற கிரிட்டோவின் நண்பர்களிடம் சென்முல், சிறையி லிருந்து நீ தப்பி ஓடிவந்த கதையைக் கேட்டு அவர்கள் ரஸிப்பார் கள். ஆட்டுத் தோலையோ, வேறு எதையோ மேலே போர்த்துக் கொண்டு மாறு வேஷத்திலோ அல்லது உருமாறியோ (தப்பி ஓடு பவர்கள் இப்படித்தானே செய்வார்கள்) புறப்பட்டு வந்த விவரங் களை எல்லோரும் கேட்டு நகைக்கும்படி சொல்லுவாய். ஆனுல் அங்கே, 'ஏனயா இப்படி இந்தத் தள்ளாத வயதில் இங்கே ஓடி வந்தாய்? இன்னும் சில நாளே உயிர் வாழப்போகிருய். அப்படி இருந்தும் வீணுசை கொண்டு சட்ட விதிகளையே மீறி விட்டாயே! உனக்கு வெட்கமில்லையா?' என்று கேட்பவர்கள் எவரேனும் இருக்க மாட்டார்களா? அவர்கள் சந்தோஷமாக இருக்கும்போது ஒரு வேளை அவர்கள் அப்படிக் கேட்காதிருக்கலாம். அவர்களுக் குக் கோபம் வந்து விட்டால் சும்மா இருப்பார்களா? உன்னைப்பற்றி மிகவும் இழிவாகப் பேசுவார்கள்...... நீ உயிரோடு தான் வாழ்வாய்! ஆனுல் எப்படிப்பட்ட வாழ்வு தெரியுமா? எல்லோரையும் முகஸ்துதி செய்து கொண்டும், அவர்களுக்குப் பணியாளாக இருந்து கொண்டும் வாழ்வாய்! அங்கே வேறு என்ன செய்வாய்? வயிறு நிரம்ப வெளி நாடான தெஸ்ஸாலிக்குச் சென்ற நீ எதையோ உண்டும், குடித்தும் வாழ்வாய்! நீதி, நேர்மை இவற்றைக் குறித்து நீ பேசியதெல்லாம் என்ன ஆவதோ தெரியவில்லை! 'குழந்தை களுக்காக உயிர் வாழ்கிறேன். அவர்களை வளர்த்துக் கல்வி அறிவு ஊட்டவேண்டும்,' என்று சொன்னுலும் அவர்களைத் தெஸ்ஸாலிக்கு அழைத்துச் செல்வாயா? ஏதென்ஸ் நகரப் பிரஜா உரிமையை அவர்கள் இழக்கும்படி செய்யப்போகிருயா? இதுதான் நீ அவர் களுக்குச் செய்கிற நன்மையா? அல்லது 'அவர்களை விட்டுப் போனுலும் உயிரோடுதானே இருக்கிறேன். இங்கேயே அவர்கள்

இருந்தால் நம் நண்பர்கள் அவர்களை நன்ருகக் கவனித்துக்கொள் வார்கள்,' என்பது உன்னுடைய எண்ணமா? நீ தெஸ்ஸாலியில் வாழ்ந்தால்தான் அவர்களை உன் நண்பர்கள் கவனித்துக்கொள் வார்களா? நீ மறு உலகுக்குப் போனல் மட்டும் அவர்களை நண்பர்கள் கவனிக்கமாட்டார்களா?.........அதுதான் இல்லை. (அப்படி எண்ணுதே) உன் நண்பர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் நல்லவர்களாக இருந்தால், நீ எங்கிருந்தாலும் நிச்சயமாக அவர்கள் உன் மக்களைக் காப்பாற்றுவார்கள். உன்னை வளர்த்தவர்கள் நாங்கள். நாங்கள் சொல்வதைக் கேள்.

**நீதியையே முக்கியமாகக் கருதவேண்டும். வாழ்வையும் குழந்தைகளையும் அடுத்தபடியாகத்தான் கருதவேண்டும்.**

"சாக்ரடீஸ்! வாழ்வையும் உன் மக்களையும் பற்றி முதலில் எண்ணுதே. நீதிதான் முக்கியம். மறு உலகத்திலுள்ள நீதி வழுவா மன்னர்கள் உனக்கு நியாயம் வழங்குவார்கள். கிரிட்டோ சொல்வதுபோல் செய்தால், நீயோ, உனக்கு வேண்டியவர்களோ இம்மையிலும் சரி, மறுமையிலும் சரி இன்பமாகவோ, சிறந்தவர்களாகவோ, நேர்மையாளராகவோ இருக்கமுடியாது. இப்படியே நிரபராதியாக நீ இறந்துவிடு! துன்பம் அனுபவிப்பவனுகவே இறந்துவிடு! துஷ்டனுக இருக்காதே! சட்டம் உன்னைப் பலி கொள்ளவில்லை, மனிதர்களே அப்படிப் பலி கொள்ளுகிருர்கள். அப்படி நீ தீங்குக்குத் தீங்கும், ஊறுக்கு ஊறும் விளைத்து, உன்னை உருவாக்கிய சட்ட திட்டம் இவற்றை உடைத்தெறிந்து உனக்குத் தவறிழைக்காதவர்களுக்கு—அதாவது உனக்கும், உன் நண்பர்களுக்கும், உன் நாட்டிற்கும், எங்களுக்கும்—தவறு இழைத்தாயோ, நீ உயிரோடு வாழ்ந்தாலும் எங்களுக்குக் கோபமே மூளும்; நீ இறந்தபிறகு மறுவுலகத்தில் உள்ள எங்கள் சகோதரர் (நியாய தேவர்கள்) உன்னைப் பகைவனுகவே கருதுவார்கள்; நீ எங்களை அழிக்க உன்னுலான முயற்சி எல்லாம் செய்தது அவர்களுக்குத் தெரியும். ஆகவே, நாங்கள் சொல்வதைக் கேள். கிரிட்டோ சொல்வதைக் காதில் வாங்காதே!" என்றுதான் சட்டம் சொல்லும், யோகியின் செவியில் பாயும் குழலிசை போல இந்த (தெய்வ) வாக்குதான் என் செவியில் ஒலித்துக்கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது—இதோ இன்னும்

அதன் ரீங்காரம் கேட்கிறது. மற்ற எதுவும் காதில் விழாதபடி அதுதான் தடுக்கிறது. இதற்கு மேலும் நீ என்னதான் சொன்னாலும் பயன் இல்லை. ஆயினும் வேறு ஏதாவது விஷயம் இருந்தால் சொல், கிரிட்டோ!

**கிரிட்:** வேறு ஒன்றும் இல்லை, சாக்ரடீஸ்!

**சாக்:** சரி, கிரிட்டோ! ஆண்டவனுடைய விருப்பத்தை நான் நிறைவேற்றியாக வேண்டும். அவன் அழைத்துச் செல்லும் வழியில் (அவனைப் பின்பற்றியே) செல்லுகிறேன்!

★